The "BHARATI" Reg. No. M. 2456.

ஆகஸ்ட் 1929.




OFFICE OF THE REGISTRAR
20 SEP 1929
MADRAS

மாலை 1. மணி 8.

# ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்

12. ,, உ. ம. சே. முகியித்தீன் [illegible] ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. [illegible] விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

20 SEP 1929 MADRAS

---

## விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பக்கம் | 1 க்கு | மாதம் 1 க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ½ க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ¼ க்கு | ,, | ,, | 3—0—0 |

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அநுமதிப்ப தில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பண அனுப்பவேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய் வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.



படங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாலிகை.

## பொருள் அடக்கம்.

தொடர் நிர். பக்கம்.


1. காதல் மணம்—ஸ்ரீமாந். சி. பொ. செல்லையா அவர்கள் 497

2. மாதர் உரிமை—ஸ்ரீமதி. **P. S.** அரங்கநாயகி அம்மையார் 507

3. தேசீய ஒற்றுமை—மனோகரனார் ... ... 511

4. அணுக்களும் பதார்த்த வளர்ச்சியும்—திரு. **K. G.** கிருஷ்ணன் அவர்கள், **B. Sc. (Hons)** ... 517

5. திரு. நபியவர்களின் திவ்ய சரித்திரம்—ஜனுப். **S. S.** மகமது அப்துல்காதர் சாகிப் அவர்கள் (பாகவி) ... 523

6. நல்லன கொள்ளல்—திரு. வீ. மு. பொன்னையா அவர்கள் 540

7. ஆரம்ப ஆசிரியர்கள்—ஸ்ரீமாந். **A.** ராமஸ்வாமி அவர்கள் 544

8. தேசாபிமானம்—தென்னாப்பிரிக்காவி லிருக்கும் ஸ்ரீமாந். ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 560

9. சீனாவின் முற்போக்கு—திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... 562

10. ஆராய்ச்சி மேடை ... ... 575


---


ஒரு மாதப் பத்திரிகை.



எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)


ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி.

| மாலை 1 | உத்தமபாளையம் 1929-ஆகஸ்டுமீ | மணி 8 |
|---|---|---|


# காதல் மணம்.

ஸ்ரீமாந். சி. பொ. செல்லையா அவர்கள்.




தல் மணமென்னும் எண்ணம் உள்ளத்திலிருந்தெழும்போதே, உள்ளம் உவகை பூக்கின்றது. அகத்தில் உதயமாகும் ஆர்வத்துக்கோர் எல்லையுண்டோ? காதலன்பினுஞ் சிறந்த ஒன்றைக்காணல் அரிது, அரிது. அன்பென்னும் விளை நிலத்தில் காதலென்னும் பயிரை வளர்த்து, இன்பமாகிய கதிரை நுகர்வதே வீடு பேறாகும். நம் பண்டைத் தமிழ்நாட்டி லிருந்த பாவாணர்கள், கலையமிழ்தைப்

198515



பருகிய கவி வாணர்கள் இன்பம் என்னுஞ் சொல்லிற்கு, வீடு என்னும் பொருள் படும்படியாய் இன்பம், இன்பம் என்று அறைகூவிச் சென்றார்களே அது யாது? வாசுகியாரும், வள்ளுவனாருங் கொண்ட வளமிக்க காதல்—பரவையாரும் சுந்தரருங் கொண்ட பாங்குள்ள காதல் என்னும் பேரின்பமன்றோ?

காதற் பகுதியைக்—கற்புக் களஞ்சியத்தைக் காணவேண்டுமென்றால், நமது தேனொழுகும் தமிழ் நூற்களில் பார்க்கக் காணலாம். மணிமேகலை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்கோவையார், திருக்குறள், கலித்தொகை முதலிய தமிழ் நூற்களில் காதற்றேன் அரும்பி பொளிர்கின்றது. ஈருடலையும், ஈருயிரையும் ஒன்றாய்ப் பிணைக்கும் காதலென்னும் அரிய அன்பு, காதலன் காதலியிருவருள்ளத்திலும் புகுந்து ஒற்றுமையை உறுதிப் படுத்துகிற அன்பை யடையச் செய்கிற—ஆர்வத்தை யுண்டுபண்ணுகிற காதல் மணத்தை யரும்பச் செய்கின்றது. களவியல் மணங் கண்ட நங் கன்னித் தமிழ் நாடு—காதல் மணத்தில் பேர்போன கற்பொளிரும் தவத் தமிழகம்—ஒருவனும் ஒருத்தியும் மனமொருமித்து இல்வாழ்விற் புகுந்து இன்பம் பருகுவதே பேரின்பம் என்று உலகிற்கெடுத்துப் புகட்டிய ஒப்புயர்வற்று விளங்கும் நமதருமைத் தமிழுலகம், இன்று பால்மணமாறாப் பச்சிளங் குழவிகட்கும், பழுத்து நரைத்துப் பல் விழுந்த முதியவர்கட்கும்—கல்வி கற்ற காரிகைகட்கும் கல்வியில்லாக் கயவர்கட்கும் நடக்கும் பொருத்தமில்லாப் புன் மணங்களால் நைந்து ஒற்றுமையாகிய அன்பு சிதைக்கப்பட்டு பல் வழிகளிலும் சீர் குலைந்தது.

காதல் மணமில்லா வாழ்க்கை பிணவாழ்க்கையே யாகும். அன்பின் வழியிலங்கும் காதல் மணம் ஒருபொழுது தோன்றி, மற்றொரு பொழுது மறைவதன்று. அஃது உயிர் போம் வரை உடனின்று, உயிர்க் குறுதி பயப்பதா யிருக்கிறது. பண்டை நாளில் நம் தமிழகத்தில் எம் மணவினை நிகழ்ந்தது? இது போழ்து நடக்கும் தச்சன் மரத் துண்டுகளை ஒட்ட வைப்பதுபோல் மனமில்லா மணமக்களிருவருடல்களையும் ஒட்ட வைக்கப்படுகின்றதே



இதுபோன்றோ? அந்தோ! இளநகை யரும்பு மெழில் வதனமுடைய, யௌவன வனிதா ரத்னங்கள்—களவியல் மணங்கண்டு அன்பென்னுந் தேனைச் சொரிந்த அழகிய மடமங்கைகள் தாமே தமக்குரிய கொழுநர்களைத் தேடித் தமது கயல் விழிகள் போன்ற கண்களால், காதலர்களின் அக அழகைப் பருகிக் காதல் மணம் நடத்தியது எந்நாட்டில்? எனது தேனொழுகும் தவத் தமிழகத்தில்-காரிகையர்கள் கற்பை யணிகலனாகப் பூண்ட எனது கன்னித் தமிழகத்தில், என்று கூற வரையிலா இறுமாப் படைகிறேன்.

காதலன்பிற்குச் சாதி வேற்றுமை, சமய வேற்றுமை கிடையாது. ''அன்பின் வழிய துயிர் நிலை யஃதிலார்க் கென்பு தோல் போர்த்த உடம்பு'' என்று அறைந்த நந் திருவள்ளுவர் பெருமானின் திருவாக்கிற் கிலக்காய், அன்புள்ள விடத்தில் சாதி வேற்றுமை தலை காட்ட முடியுமோ? சாதி வேற்றுமை பாராட்டுவோரை, அன்பர் என்று எங்ஙனம் அழைப்பது? சாதி வேற்றுமை உள்ள விடத்தில் அன்பு நிகழுங் கொல்? சுந்தரர் எக்குலம்? பரவை நாச்சியார் எக் குலம்? இருவர்க்குங் காதலன்பு எவ்வாறு நிகழ்ந்தது? சாதி வேற்றுமை யென்னும் பேய் தலைகாட்டி யிருக்குமேல், இவர்களுக்குள் ஒற்றுமை எவ்வாறு நிகழும்? சாதி, சமய வேற்றுமையைக் கடந் தொளிருங் காதலன்பிற்கு நிகராக வேறொன்றைக் கூற, என் மனமெழவில்லை. உண்மைக் காதலர்கள் அரைக் கணமும், ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்திருக்க இசைய மாட்டார்கள். சிற் சில வேளைகளில் பிரிய நேரிடினும், அவர்கள் மனம் மாத்திரம் பிரிந்திருக்க ஒருக்காலும் இசையாது. சத்தியவான் வேட்டைக்குப் போகும்போதும், சாவித்திரி அவனைப் பிரிந்திருக்க இசைந்தாளில்லை. கண்ணகி யென்னும் பெண்பால் தன் கொழுநனை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாது, மதுரையம்பதியிற் காற் சிலம்பு விற்கச் சென்ற தன் காதலனுடன் சென்றதும் கவனிக்கத் தக்கது. மணமகனும் மணமகளும் கருத்தொருமித்து, இல் வாழ்விற் புகுந்து இருவருள்ளத்திலும் ஊற்றெடுத்துப் பெருகும் இன்ப அன்பை எவ்வாறுரைப்பது? இவன் இவளாகிறான்; இவள் இவனாகிறாள்.

தோழர் நேயம், தாய் தந்தையரின் நட்பு, ஆசிரியரி னுறவு, புதல்வ ரிணக்கம், உடற் பிறந்தாரி னுறவு இவைகளெல்லாம், சிற்சில காலமே நிகழ்வன. உயிர் போன்ற உண்மைக் காதல் அவ்வாறல்ல. வாழ்நாள் முழுதும் பிரியாது தொடர்ந்து நிற்பது. ஆங்கில நாடகக் கவிச் சக்கிரவர்த்தி ஷேக்ஸ்பியர் (Shakespeare) இயற்றிய, லீயர் (King Lear) என்ற நாடக நூலில் காத லிணக்கத்தைப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. லீயர் என்ற கிழவரசன், தனது நாட்டைத் தனது மகளிர் மூவர்க்கும் பகிர்ந்து கொடுக்க வெண்ணி, அவர்களை யழைத்து "நீங்கள் என்மீது எத்தகைய அன்பு செலுத்துகின்றீர்கள்? உங்களில் எவர் என்னை, யாவரினும் மேம்பட நேசிக்கின்றவர்கள், என்பதை அறிய விரும்புகின்றேன்" என்று வினவ மணவினை நிகழ்ந்த மூத்த மகளிரிருவரும் "தங்களை விட நேசிக்கத் தகுந்த பொருள், இவ்வுலகில் ஒன்றுமே யில்லை" யென்று பொய்யுரை புகன்றனர். மணவினை யாகாத இளையாளாகிய கார்டீலியா (Cordelia) வென்னும் இளஞ் சிறுமியைக் கைப்பற்ற, மன்னரிருவர் காத்திருந்தனர். இளையாளையும் அவ்வாறே அவ்வரசன் கேட்டதில், அதற்கவள் தந்தையே! தாங்கள் இருவரும் தங்களை நேசிப்ப துண்மையாயின், ஏன் அவர்கள் விவாகம் செய்துகொண்டனர்? தங்களை எந்த முறையில் யான் நேசிக்க வேண்டுமோ, அந்த முறையில் நேசிக்கிறேன்" என்று தன்னுள்ளத்திலுள்ளதை ஒளிக்காம லுரைத்தாள். சகோதரர்களே! மேலே குறிப்பிட்ட, இள நங்கையின் கருத்தை நோக்குங்கள். அப்பெண்பாலின் மனம் யாண்டுச் சென்றது? தனக்கினிய, தன்னழகுக்கேற்ற, கட்டழகுள்ள, ஒரு யௌவன இளஞ் சிங்கத்தின்பா லல்லவோ சென்றது. இப்பொழுது எனது பிறப்பிடமாகிய தேனொழுகும் தவத் தமிழகத்தில், அவ்வாறு ஒரு பெண் தன்னுள்ளத்தி லுள்ளதை ஒழிக்காமல் உரைப்பாளாகில், உடனே அதோகதியாய்ப் போக்கப்படுவதன்றி அவள் வேறு என்ன செய்யப்படுவாள்? அத்தகைய உத்தமிகளை—பெண் தெய்வங்களைப் பெற்றோராகிய பாதகர்கள் வேசையென்றும், விபசாரியென்றுங் கூறுவதுட னில்லாது தன் சாதியிலுள்ள ஒரு குருடனுக்கோ,



ஒரு பொக்கைவாய்க் கிழவனுக்கோ மணஞ் செய்துவைக்கின்றனர். என்னே கொடுமை! என்னே பேதமை!! நமதருமைத் தமிழ் மக்கள் மனம் இருந்தவா றென்னே!! என்னே!!!

ஒரு இளம் பூங்கோதை, பலகலைகளைக் கற்றுக் கல்வியறிவிலும், இசை பாடுவதிலும் இணையற்றவளாய் இருந்துந்தான் என்ன? அவள் மனதிற்கினிய மணமகனை அவள் கண்களால் கண்டு களித்தற்கியலுமா?

தன் சாதியில் கல்வி யின்னதென்றறியாக் கயவனும், இசை இன்பத்தைச் செவி மடுக்காத இழிதகையோனும், வசை பாடுவதில் வல்லவனுமாயுள்ள ஒரு மூடனை யல்லாது அவள் வேறு யாரை மணக்கக்கூடும்? அந்தோ! தமிழ் நாட்டிற் பிறந்த வீரர்களே!! எனதருமைத் தாய்மார்களே!!! உலகில் நீங்கள் எடுத்த ஜென்மம், புனிதமாக வேண்டுமானால்—மீண்டும் உங்கள் பண்டைப் பெருமையை யடையவேண்டுமானால்—உங்கள் தமிழகத்தில் வீரத்தில் சிறந்த ஒரு நெப்போலியன், பொறுமையிற் சிறந்த ஒரு புத்தர், கவிச் சக்கிரவர்த்திகளாகிய காளிதாஸன், ரவீந்திரர், ஷேக்ஸ்பியர் முதலிய அறிஞர்கள், பிறக்கவேண்டுமானால்—அறிஞர் போஸ், லஜபதி, சரோஜனி தேவி போன்ற மகாத்மாக்கள் அவதரிக்க வேண்டுமானால்—உங்கள் தமிழகம் தாய் நாட்டின் ரத்னம்போல், துலங்க வேண்டுமானால் சாதி என்னும் பேயை வீழ்த்தி உங்கள் அருமை மக்களது மனம்போல், அவர்கட்கிசைந்த காதலர் காதலியைப் பார்த்து மனமொத்த மணமாய் நடத்துங்கள். மணமக்கள் மனமொத்த மணத்திற்குப் பொருள் வேண்டுமா? அழகிய பந்தர் அமைக்க வேண்டுமோ? பட்டாடைகளும், பொன்னும் பணிகளும் வேண்டுமோ? காதலனுங் காதலியும் கருத்தொருமித்தவுடன் முன் ஈருடலாய் ஈருயிரா யிருந்தவர்கள் இப்பொழுது ஈருடலும் ஓருயிருமாக மாறுகிறார்கள்.

அவர்கள் உள்ளத்தில் ஊறிக் கிடக்கும் அன்பு, ஒப்பற்ற மாணிக்கத்துக்குச் சமானமாகிறது. இப்பேர்க்கொத்த அரிய அன்பை யணியாமல், என்பை மூடும் தோலில் பொன்னும் பணிகளும் புது

மையாய்ப் பூண்டதினால் யாது பயன்? சகோதரர்களே! உங்கள் உள்ளம் அன்பு மயமாயிருக்கட்டும் அன்பே கடவுள், அன்பே உயிர் என்ற அரிய ஆத்மீக தத்துவம் உங்கள் நெஞ்சில் நிலவட்டும். இன்பம் இன்பம் என்ற சொற்களை உங்கள் இருதயத்திலிருந்து எழும்பட்டும். துன்பத்தைப் போக்கும் மருந்து இன்பம்என்ற எண்ணம், உங்கள் அகத்தில் அடங்கிக் கிடக்கட்டும்.

நமது தமிழ் நாட்டில் பெண்களின் பரிதாபமான நிலைமை ஒருபுறமிருக்க, ஆண் இளவல்களில் உரிமையைத் தடுக்கும் அநியாயமான கொடுமையைக் கேட்போர் எவருக்குத்தான், இரத்தம் கொதிக்காமலிருக்க முடியும்? அந்தோ! இதைப்பற்றி எழுத எனது எழுதுகோலும் நகரவில்லை; கையும் நடுக்குறுகிறது; கண்ணீர் பெருகுகிறது. உலகமே நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டு வரும் இந்தக் காலத்தில்-புதுப்புது ஆராய்ச்சிகளும், மறு உலக ஆராய்ச்சியும் கண்டுபிடித்துக்கொண்டு வரும் இந்த நாகரீக யுகத்தில்-நூதனக் கருவிகளையும் நூதன இயந்திரங்களையும் உண்டுபண்ணியும், செயற்கை மனிதனை யுண்டாக்கிப் பேசும்படியும் செய்துகொண்டு வரும் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஆண் மகன் மனதிற்குப் பிடித்த ஓர் இளங் கன்னிகையை மணக்க அனுமதிக்காமல், சாதி என்னுங் கொடிய பேய் தடுக்கின்றதல்லாமல் பெற்றோர்களும் மூட்டுக்கட்டையா யிருக்கின்றனரே ஆ! இதென்ன கொடுமை!! மணம் என்றால் என்ன? இதழ்கள் விரிந்து பூக்கள் மலரும்போதன்றோ, அதன் நறு மணம் வீசும். பூக்கள் மலராதிருக்கும்போது அதன் மணம் வீசுமா? மனிதன் இவ்வுலகில் பிறந்தது எற்றுக்கு? இன்பத்தை யடைவதற்கன்றோ? அவ்வின்ப அன்பு, உள்ளத்திலிருந்தன்றோ அரும்புதல் வேண்டும்.

இப்பொழுது அன்பைக் காணவேண்டுமென்றால், பொன்னிலும், பொருளிலும், பட்டுடையிலுந்தான் காணவேண்டியதா யிருக்கின்றது. காதலன் தனக்கினிய ஒரு காதலியை யடையவேண்டுமென்றால், சாதி என்னும் பேய் குறுக்கிட்டு அவனது அகத்தில் நிலவும் அன்பு மயமாகிய காதலன்பைச் சிதைத்துப் போடுகின்றது.



தன் சாதிக்குள்ளும் அவனுக்கேற்ற மணமகள் ஒருத்தி யிருந்தாலுங்கூட, அவளை மணப்பது அரிதாயிருக்கிறது. பெற்றோர்கள் தங்களுக்கு நெருங்கிய சப்பந்திகள் வீட்டில்தான் மணஞ் செய்ய வேண்டுமென்று வாதாடி, மணமகன் எவ்வளவு ஒழுக்கமுள்ளவனாகவும், கல்வி கற்றவனாகவும் இருந்தாலுங்கூட, கல்வியில்லாத—மணமகன் மனதிற்கொவ்வாத—அழகில்லாத ஒரு இளஞ் சிறுமியை விவாஹம் செய்து வைக்கின்றனர். ஐயகோ! இம் மனமில்லா மணத்தை என்னென்றழைப்பது? உயிரில்லாப் பிணத்திற்குச் செய்யு மணமென்று கூறாது, பின் என்னென்றழைப்பது? பெரியோர்களே! "ஆயிரங் காலத்துப் பயிர்" என்ற பழமொழியையுங் கூறிக்கொள்ளுகின்றீர்களே. ஆயுளுள்ளளவும் காதலர் காதலிகளிருவரும் கண்ணியமாய்க் கூடிவாழ்வதற்காகச் செய்யும் திருமணப் பேற்றை வெறுமணமாகச் செய்யும் நீங்கள் தானா, தனது தேனொழுகும் தமிழகத்தைச் சீர்திருத்தப் போகின்றீர்கள்? புண்ணிய நாடென்றும், கற்பக நாடென்றும், "தான் வருந்திப் பிறக்குதவும் தயை பிறந்த நாடு" என்றும் போற்றப்பெற்ற, போற்றப்படும் நமது பாரத கண்டம் மனிதனது வாழ்க்கை நிலையத்திற்கு அஸ்திவாரமாகிய காதல் மணத்தில் கவனம் செலுத்தாமலிருப்பது, வருந்தத் தக்கதே.

மனமில்லா மணத்தினால் விளையுங் கேடுகள் பலப்பல. ஆடவன் தனக்கினிய ஓர் இளஞ் சுந்தரியை யடையாததால், திருமணம் நடக்கும் நாள் தொட்டே, அவன் மனம் இதற்குமுன் மணக்கவேண்டுமென்றெண்ணி யிருந்த மாதரசியின் பால், செல்லுகின்றது. அன்றுமுதல் அவன் தாலிகட்டிய பெண்ணைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. நாள்தோறும் சண்டைகள் சச்சரவுகள். ஆயுளுள்ளளவும் துன்பம் ; துன்பம். ஐயோ! மனிதன் இந்தத் துன்ப வாழ்விற்கா இவ்வுலகிற் பிறந்தான்? ஒருவன் தனக்கினிய காதற்கிழத்தியை மணக்கவேண்டுமென்றால், சாதி சமயம் குறுக்கிடுகின்றது. சாஸ்திரம் தடுக்கின்றது; பெற்றோர் பெருமூச்செறிகின்றனர். இவ்வளவு கஷ்ட நஷ்டங்களையுந் தவிர்த்துத் தன்னுள்ளத்திலுள்ள இன்பத்தைப் பூர்த்தி செய்வதே மேலென

வெண்ணி, ஒருவன் தான் கருதிய மங்கையை மணஞ்செய்துவிட்டாலோ மகன் படும் பாட்டை எழுத்தால் வர்ணிக்க இயலாது. கொடுமை! கொடுமை!! அக்கணமே சாதியினின்றுந் தள்ளப்பட்டு விடுகின்றான். அவனிடம் ஒருவரும் வார்த்தையாடக்கூடாது, உண்ணல் உறவாடல் கூடாது என்னும் அநீத அநியாயச் சட்டம் அவனை ஒருபுறம் நெருக்குகிறது. அவன் தான் பிறந்த ஜென்ம பூமியில் தான் இளமையில் ஓடியாடித் திரிந்து இன்ப வாரிதியிற் றிளைத்த தனதருமைத் தாய் நாட்டில் வாழ்வது, எமனுலகில் வாழ்வது போலிருக்கின்றது. என்செய்வான்? தன் வாழ்க்கை நடத்துவதே கஷ்டம் என எண்ணி, அன்னிய நாடு செல்கின்றான். நம் நாட்டைப் போன்ற சமூகக் கொடுமைகள், மற்ற நாடுகளில் அவ்வளவாக இல்லை என்றே கூறலாம். அங்கே அவன் மற்றவர்களுடன் சகோதரர் போன்றும், உற்றார் உறவினர் போன்றும் நெருங்கிப் பழகுகின்றான். அங்கே அவனுக்கு வேற்றுமை என்னும் பிசாசு ஓட்டப்பட்டு விட்டது. சுதந்திரக் கதவு திறக்கப்பட்டுவிட்டது. இன்பம் அவனை அறைகூவி யழைக்கின்றது.

நமது நாட்டில் சகல வழிகளிலும், உரிமைக்குப் பாத்தியமுள்ளவனென்று கூறப்படும் ஒரு ஆண் மகனுக்கே இந்தக் கெதியென்றால் ஓர் பெண்மயிலாயிருந்தால், அவளுக்கு எக்கெதி வாய்க்குமென்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

காதல் வெள்ளம் கவிஞர்களுள்ளத்திலடங்கிக் கிடக்கின்றது. காதல் மணத்தைப்பற்றிப் பாடாத, கவிஞர்களே கிடையாது. கவிஞர்களுக்குக் காதலே உயிர்! அக்காதலுணர்ச்சியால் அவர்களுள்ளத்தில் அடக்கமுடியாத—மகா உன்னதமான இன்பம் தோன்றி, அவ்வின்பம் காதற் பாட்டுகளாகப் பரிணமிக்கின்றன. அக் காதற் பாட்டுகள் எவருள்ளத்தைக் கவராது? எவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளாமலிருக்கும்? நம் செந்தமிழ் நாட்டுத் திலகர் புலவன் பாரதியாரின் காதற் கவிதைகள் ஒவ்வொரு தமிழனுள்ளத்திலும், ஒவ்வொரு தமிழணங்கினுள்ளத்திலும் புகுந்து காதற்சுவையைப் பருகுவிக்கின்றன. இளங்கோவின் எழில்



பெறுங் காதற் கவிதையும், கம்ப நாட்டாள்வாரின் காதல் திகழும் தீஞ்சுவைப் பாக்களும், சேக்கிழாரின் தெய்வமணங் கமழும் திருப்பாடல்களும், திருவள்ளுவனாரின் செவ்விய காதற் பாக்களும் தமிழ் நாட்டின் ரத்னங்கள் போல் பிரகாசித்துத் தமிழகத்தின் மேன்மையை உலகிற் கெடுத்துப் புகட்டுகின்றன. ஆங்கிலக் கவிகளின் பாடல்களிலும் காதற்சுவை திகழ்கின்றது. ஷேக்ஸ்பியர், ஷெல்லி, டென்னிஸன் முதலிய புலவர்களின் பாடல்களில் காதல் ஜ்வலிக்கின்றது. நமது பரத கண்டத்தின் பாவல ரத்னம் ரவீந்திரரின் பாடல்களிலும் காதல் ரசம் பிரகாசிக்கின்றது.

“மலர்களைத் தொடுத்தாயிற்று, மணவாளனுக்குரிய மாலை கட்டிவைக்கப்பட்டிருக்கிறது. மணமானபின் தலைவி தன் வீட்டை விட்டுத் தனியே சென்று இரவின் ஏகாந்தத்திலே நாயகனைச் சேர்வாள்” (கீதாஞ்சலி, 91)

சகோதரர்களே! தமிழ் நாட்டிற் பிறந்த வீரர்களே!! இன்னும் புராணங்களென்றும், பழய வழக்கமென்றும் பேசும் பேச்சுக்களை விட்டுக் காலத்திற்கேற்ற தொண்டில் இறங்குங்கள். காதல் மணத்தை யாண்டும் பரப்புங்கள்; கற்பு மணத்தை எங்கும் திகழச் செய்யுங்கள். உங்கள் வயிற்றில் ஒரு சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி, பரவையார் சுந்தரர் போன்ற காதற் றெய்வங்கள் உதிக்கட்டும். தமிழகம் அவர்களைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியால் அவர்களின் புகழை உலகிற் கெடுத்துரைக்கட்டும்.

சகோதரர்களே! தாய்மார்களே!! உங்கள் கற்பு எங்கே? காதல் எங்கே? வீரம் எங்கே?

“நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்”

என்ற வீரச் சுவை ததும்பும் பாரதியாரின் பாடல்களைக் கேட்டுமா நீங்கள் வீட்டின் மூலைக்குள் குந்திக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்

நாட்டின் யௌவன வனிதா ரத்னங்களே, எழுங்கள்! எழுங்கள்!! உங்கள் உரிமையை யடையுங்காலம் நெருங்கிவிட்டது. நீங்களே உங்கள் காதலர்களைத் தெரிந்தெடுக்கும் காலம் கிட்டிவிட்டது. 5 வயதுப் பெண்ணுக்கும் 60 வயது ஆணுக்கும் நடக்கும் அநியாய மணத்தை அடியோடு அறுத்தெறியும் அஞ்சாமை என்னும் வீரவாள் உங்களிடத்திலேயே யிருக்கிறது. வருங்காலத்தில் ஆணுக்குப் பெண் அடிமை என்ற அநியாய வழக்கம் தொலைந்து நாட்டில் ஒரு ஆதர்சம், உற்சாகம், உயரிய நோக்கம் ஜெகஜோதியாய்ப் பிரகாசிக்கப்போகின்றது. ஆண்களே சகல வழிகளிலும் உரிமையடையத் தகுந்தவர்கள், அவர்களுக்கே சகல போக பாக்கியங்களையு மனுபவிக்க உரிமையுண்டு; பெண் என்றும் அவர்களுக்கு அடிமையாகத்தானிருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கும் குறுகிய நோக்கமுடையவர்களின் வாதங்கள் தொலைந்து நாட்டில் சமரசம் தாண்டவமாடப்போகிறது. ஆகையால் என தருமைச் சகோதரிகளே, தாய்மார்களே உறக்கத்தினின்றும் எழுங்கள்! எழுங்கள்!! தமிழகம் உங்களை அறைகூவி யழைக்கின்றது. உங்களால்தான் காதல் மணம் தமிழகத்தில் ஜ்வலிக்கவேண்டும். கற்பு மணம் யாண்டும் பிரகாசிக்கவேண்டும். கற்பு உங்கள் அணிகலனாயிருக்கட்டும். காதல் உங்கள் உயிராய்த் திகழட்டும். இன்றே வீரமுழக்கஞ் செய்யுங்கள்; இன்னே வெற்றிச் சங்கூதுங்கள்.

“அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்”
“ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்”—பாரதியார்.





# மாதர் உரிமை.

ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மையார்.

பூவுலகி லெத்திசையும் புகழ்மணம் பெற்றிருந்த இத் தமிழ் நாட்டில், **மாதர் உரிமை** என்று இப்பொழுது எழுதுதற்கும் கரங் கூசுகின்றது. தற்போழ்து உலகின்கண் மாதர் உரிமையானது ஒவ்வோர் நாட்டிலும் ஒவ்வோர் முறையில் கையாளப் பட்டு வருகின்றது. மேனாட்டினர் மட்டும் ஆண், பெண் ஆய இரு பாலரும் சம உரிமை பாராட்டி வருகின்றனர். மற்றைய நாடுகளிலெல்லாம் ஆண் பாலரின் உரிமையும் ஆதிக்கமுந்தான் அதிகம். இந்நாடுகளிலெல்லாம் **மாதர் உரிமை** பேச்சளவிலும், அதினும் சில நாடுகளில் பேச்சளவினும் இன்றி, மாதர் உரிமை என ஓர் மாது பேசிடின், உடனே அம் மாதை நாடுகடத்தியோ, சாதியினின்று விலக்கியோ, குடும்பப் பிரஷ்டம் செய்தோ இன்னலுக்கு இரையாக்குகின்றனர்.

பல்லாயிர மாண்டுகட்கு முன்னரேயே நம் பாரத கண்டத்தில் எல்லாவகை உரிமைகளும் எல்லாருக்கும் இருந்தன. எங்ஙனமெனின்? எல்லா நாடுகளினும் நம் பாரத நாடானது, சில நூற்றாண்டுகளாக துரதிஷ்டமாக பல்வகையான சாதி, மதங்களினும், அவற்றின் எண்ணிலடங்காப் பயனற்ற பல மூடப் பழக்க வழக்கங்களால் நிறையப் பெற்றிருக்கிறது. ஆயினும் சிறிது காலமாகச் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக விருந்த சாதி மத பயனற்ற மூடப் பழக்க வழக்க விலங்கினின்றும் நம் நாட்டார் மெல்ல மெல்ல விடுபட்டு வருகின்றனர். ஆனால் நம் நாட்டு ஆண் பாலர் பெரும்

பாலும் விடுதலையடைந்து கொண்டு வருகின்றார்கள் என்றே கூறலாம். இன்னும் பெண் பாலரை இவ் விலங்கு பெரிதும் வாட்டுகின்றது. இக் கொடிய விலங்கே நம் நாட்டு மாதரின் உரிமையை முற்றுங் கொள்ளை கொண்டது. நம் நாட்டு ஆண் பாலர் அவ் விலங்கினின்றும் விடு பெறும் பெருமையால், தாங்கள் விடுபெற்றதே சாலுமென்றெண்ணி, மங்கையரை இன்னும் சுதந்தர பங்கராகவே வைத்துளர். மங்கையர் இங்ஙனம் பங்கராயிருத்தல் ஆண்டகையோர்க்கு அழகு கொல்? அறிவு கொல்? உலைநீதி இவ்விதமாயிருக்கிறது?

உரிமையுடையோரே உயிருடையோர். உரிமையற்றோர் உயிரற்றோரே. இது போழ்து ஆண் பெண் ஆய இரு பாலரும் சம உரிமையை எவ்வெந் நாட்டில் உடையராயிருக்கின்றனரோ, அவ்வந் நாட்டோரனைவரும் அடிமை ஆதிக்கம் இன்றி, உரிமை ஆதிக்கத்தால் குன்றின் மீதிட்ட குன்று விளக்கே போன்று விளங்கா நிற்கின்றனர். பல்லாயிர மாண்டுகட்கு முன்னர், சமத்துவ உரிமையுடனும், சுதந்திரத்துடனும், இமாசலத்தின் கௌரி சங்கர் சிகரத்தின் மீதிட்ட விளக்கே போன்று விளங்கிய நம் பரத கண்டமானது, தற்போழ்து சமத்துவ உரிமையை நல்காததால் தன் உரிமையையும் சுதந்திரத்தையும் இழந்து குடத்தின் கணிட்ட விளக்கே போன்று குன்றிக் கிடக்கின்றதே! அந்தோ! சமத்துவ உரிமை நல்காத நாடு ஓர் நாடாங் கொல்? அடிமை நாடன்றோ? இது காலை கல்விச் செல்வத்திலும், பொருட் செல்வத்திலும் தலை சிறந்து விளங்கும் மேனாடுகளும், பன்னூற்றாண்டுகட்கு முன்னர் தற்போழ்து நம் பரத கண்டம் இருக்கும் நிலையில், உரிமையற்றுச் சிறப்பற்றுக் குடத்தினுளிட்ட விளக்கே போன்றிருந்த தன்றோ? இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் சமத்துவ உரிமையேயாம். ஓர் நாட்டிற்குச் சமத்துவ உரிமை நல்கிடின் அந் நாடு தானே முன்னேற்றமடையுமென்பதில் ஐயமின்று.

இது காலை நம் நாட்டின் ஓர் பாகமாகிய மலையாள நாட்டின் சீரையும் சிறப்பையும் சிறிதே நோக்குவாம். நம் பரத



கண்டத்தின் எல்லா நாடுகளினும், பெண் கல்வியிலும், மாதர் முன்னேற்றத்திலும் மலையாளமே தலைசிறந்து விளங்குகின்றது. காரணம் மாதர் உரிமையே. இந்து முஸ்லீம்களின் சாதி சமயக் கோட்பாடுகளும் நம் இந்து சட்டங்களும் நம் மாதரின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் தடை விலங்குகளாயிருப்பதைப் போன்றன்றி, மலையாள வாசிகளின் சாதி சமயக் கோட்பாடுகளும், மலையாளச் சட்டமும் மாதர் முன்னேற்றத்திற்கும், மாதர் உரிமைக்கும் வழி கோலிகளாயமைந்துள்ளன. நந் தமிழ் நாட்டில் ஆண் பாலர்க்கு எவ்வெத் துறையில் உரிமை இருக்கின்றதோ, அதினும் இருமடங்கு அதிகமான உரிமையும், ஆதிக்கமும் பெற்றுச் செல்வத் துறையிலுங்கூட மலையாள மாதரசிகள், உரிமையராய், உயரியராய் ஒப்பிலா மணிகளாய் வாழ்கின்றனர். இந் நாட்டில் மாதர் உரிமையைக் காண வேண்டுமேல், மலையாளத்தில்தான் காணலாம். இது காலை மலையாளமா மணிகள், கல்வியறிவிலும் மாதர் முன்னேற்றத்திலும் சிறந்து விளங்குதற்கு முதன்மையான காரணம் அன்னாரின் உரிமையும்-சுதந்தரமுமேயாம். உரிமையுடைய நாடு எதுவாயினும் அந் நாடு உயர்வடைவதில் சற்றேனும் ஐயம் உண்டோ? அரியாசனத்து அமர்ந்து திருவாங்கூரை இப்பொழுது அரசு ஆண்டுவருபவரும் அணங்கினத்தவரன்றோ?

தமிழ் நாட்டுப் பெண்மணிகளும் இது காலை சிற்சில விடங்களில் சிறிதே உரிமை அடைந்து வருகின்றனர். ஆயினும் அவ்வுரிமை போதிய அளவினதன்று. ஆண், பெண் இரு பாலரும் சமத்துவ உரிமையராய் இருத்தல் வேண்டும். ஆண் பாலார் சாதி சமயக் கோட்பாடுகளையும், பயனற்ற மூடப் பழக்க வழக்கங்களையும் தகர்த்தெறிந்ததே போன்று, பெண்மணிகளும் தகர்த்தெறிதல் வேண்டும். அங்ஙனம் தகர்த்தெறிதற்கான நன் முயற்சிகளை நாம் முழு அறிவோடு செயலில் கொணரல் வேண்டும். மேனாட்டு மாதர், கல்வி, செல்வம், தொழில், உயர் பதவி, பட்டம் முதலிய எல்லாத் துறைகளிலும் தங்கட்குச் சம உரிமை வேண்டுமென்று நீண்ட நாள் யார் துணையுமின்றி தம் கையே தமக்கு உதவியாகக் கொண்டு, சத்தியப் போர்-அறப் போர் ஆற்றிப் பெருமையான பார் புகழும் வெற்றி யுற்றனர் என்பதை உலகறியுமன்றோ.

நம் பாரத கண்டத்துப் பெண்மணிகள் உரிமையற்ற-சுதந்திரமற்ற அடிமைகளாய் இருத்தல், நம் அன்னை பாரத மாதாவிற்கு அளவிடற்கரிய அவமானமன்றோ? உரிமையற்ற ஆண்களின் அடிமைகளாயும், அவர்கட்கு உயிருள்ள இயங்கும் இயந்திரம் போன்றும் உபயோகிக்கப் பட்டுவரும் மாதர் நிலைமையைக் கண்டு மற்றைய நாட்டுப் பெண்மணிகள் எள்ளி நகையாடா நிற்கின்றனர். அந்தோ! பாரத கண்டத்துப் பெண்மணிகாள்! நம் தாழ்ந்த நிலைமையைச் சற்றே சிந்தியுங்கள், சிந்தியுங்கள். என்னே, நம் இழிநிலைமை! இதுநாள் வரையிலும் தூங்கியிருந்த நாம், இன்னமும் தூங்கிக் கொண்டிருத்தல் நன்றன்று. உலக மாதரின் முற்போக்கையும் நம் பிற்போக்கையும் காணின் யாரே நகையாடார்? உலகோர் அனைவரினும், சாதி சமயக் கோட்பாடுகளையும மூடக் கொள்கைகளையும் மிகக் கொடுமையாகத் தம் பெண் இனத்தாரிடம் முசல்மான்கள் கையாண்டு வந்தனர்; வருகின்றனர். இதுகாலை முஸ்லீம் மாதரசிகளுங்கூடத் தம் கொடிய அடிமை வாழ்வை அகற்ற அரும்பாடுபட்டு வருகின்றனர். முஸ்லீம் பெண்களினும் இந்துப் பெண்களாய நாம் சற்றே உரிமையில் உயர்ந்தே உள்ளோம். ஆதலின் முஸ்லீம் பெண்களினும் நாமன்றோ அதிக முயற்சி எடுத்துக்கொள்ளல் வேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்னும் முதுரையை இலக்காகக் கொண்டு பணியாற்ற முன்வரல் வேண்டும்.

ஆதலால், தமிழ் நாட்டுத் தவமணிகாள்! காரிகையராகிய நாம் இன்னும் கண் வளர்தலிலேயே கண்ணாயிருத்தல் அழகன்று. "ஆரியக் கூத்தாடினும் காரியத்தில் கண்ணா" யிருத்தல் வேண்டும். நம் நாட்டுப் பெண்மணிகள் ஒவ்வொருவரும் தத்தம்மால் இயன்றவரை, பயனற்ற மூடக்கொள்கைகளை விலக்கல் வேண்டும். பின்னர் அவரவர் தத்தம் குடும்பங்களில் முழு உரிமையும் பெற்றுச் சமூகச் சீர்திருத்தத்திற்கு முற்பட்டு முன்னணியில் நின்று, தேசத் தொண்டாற்ற முற்படல் வேண்டும். ஏனைய நாட்டு மாதர் உரிமையின் உயர்வையும், நம் நாட்டு மாதர் உரிமையின் தாழ்வையும் உன்னி உன்னி உருகி உறுதியுடன் வேலை செய்யல் வேண்டும். ஒவ்வோர் பெண்மணியும் தத்தம் சமூக உரிமைக்காக உயிரையும் தந்து போராடத் துணிதல் வேண்டும். துணிவுடையோரே அணி பெறவாழ்வர். சம உரிமைச் சக்தியப் போராற்றச் சங்கங்களை அமைத்து, அங்கத்தினராகி, உண்மைத் தொண்டர்களாய் உறுதியான ஊக்கத்துடன், நம் உரிமைக்காகப் போராட ஆண்டவன் அருள் நல்குவாராக

---



# தேசீய ஒற்றுமை.

(மனோகரன்)

## IV

### பாஷை

இந்தியாவின் தேசீய ஒற்றுமைக்கு ஊறு உண்டாக்கிய முக்கிய காரணங்களான மூன்றனுள் சாதி, சமயம் என்பவற்றிற்குப் பிறகு, பாஷை என்பதை எடுத்துக் கூறவேண்டும். இந்தியாவில் மட்டும் 179 எழுதும் பாஷைகளும், 544 பேசும் பாஷைகளும் வழங்கி வருவதாக அறிஞர் கூறுகின்றனர். இத்தனை விதமான பாஷைகளைப் பேசிவரும் ஜனங்களிடையில் ஒற்றுமை உண்டாகவேண்டுமென்றால் எவ்வாறு முடியும்? ஒரு தமிழன் தனக் கருகாமையிலுள்ள ஒரு தெலுங்கனோடோ, ஒரு மலையாளியோடோ பேசுவதற்கே மொழி வேற்றுமையால் இயலாதவனாகிறான்; இந் நிலையில் அத் தமிழன் வட இந்தியாவிலுள்ள வங்காளியரோடும், குஜராத்தியரோடும், மராத்தியரோடும், சீக்கியரோடும் எவ்வாறு ஒற்றுமை யெய்தப் போகிறான்! ஒருவர்க் கொருவர் நெருங்கிப் பழகியும், பேசியும் ஒத்த உணர்ச்சி யெய்தினாலன்றி ஒரு கூட்டத்தாரிடையில் ஒற்றுமை உதிப்பது அரிதாகும். எனவே இந்திய நாடானது மொழி வேற்றுமைகளால் பல பாகங்களாகப் பிரிவுற்று, ஒன்றுக் கொன்று தொடர்பின்றிப் பல் வேறு அரசர்களின் அதிகாரங்களின் கீழ் வாழ்ந்து வந்ததில் அதிசயமில்லை. ஒரு மொழி பேசுபவர்களுக்கு மற்றொரு மொழி பேசுபவர்களைக் கண்டால் பிடிப்பதில்லை; மேலும் அவர்களை அன்னியராகக் கருதி வெறுக்கின்றனர். இக் காரணத்தாலேயே இந்தி

யாவின்மீது வேற்றரசர்கள் படையெடுத்து வந்தபொழுது இந்தியரனைவரும் ஒற்றுமையுடன் அவர்களை எதிர்த்துத் தம் நாட்டைக் காக்க முயலாமற் போயினர்.

நம்மில் ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியே உயர்வுடையதென்றும், தெய்வீகத் தன்மை வாய்ந்ததென்றும், பிற மொழிகளனைத்தும் கீழ்ப்பட்டவைகளென்றும், அநாகரிகமானவைகளென்றுங் கருதுகின்றனர். தமிழ் நாட்டில் இத்தகைய மூடக் கொள்கை வெகுதூரம் வேரூன்றியிருக்கிறது. தமிழ்ப் பண்டிதர்களெனப் பெயர் படைத்தவர்களும் இம் மூடக் கொள்கைகளை வற்புறுத்தி, அதன் மூலமாய்த் தமிழ் மொழியின் உயர்வை நிலை நிறுத்த முயன்றுள்ளார். இதற்குத் தந் தாய் மொழியோடு பிற மொழிகளையுங் கற்று, அம்மொழி இலக்கியங்களின் சிறப்பையுணராமையே காரணமாகும். உலகிய லறிவும், பூத பௌதிக சாஸ்திர உணர்ச்சியும் வளர்ச்சி யடைந்துள்ள இவ்விருபதாவது நூற்றாண்டிலும் நந் தமிழ்ப் பண்டிதர்கள் தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், வைகை யாற்றினில் ஏட்டினை எதிர் வரச் செய்ததும் முதலாகிய அற்புதங்களைச் செய்த தெய்வத் தன்மை வாய்ந்தது நந் தமிழ் மொழியெனக் கூற முந்துகின்றனர். தனிமையில் நந் தமிழ் மொழிக்கோ இத்தகைய தெய்வத் தன்மை கிடையாதென்பது நிச்சயம். எனவே ஒரு தமிழ் ஏட்டினை எதிர் நீந்தச் செய்தது உண்மையாயின், அவ் வற்புதத்தைச் செய்த பெரியார் மற்றொரு ஹிந்துஸ்தானி ஏட்டினையும் எதிர் நீந்தச் செய்ய வல்லவராவார். இதனால் தனிமையில் ஒரு மொழிக்கு வழங்கும் மக்களின் உயர்வுக் கேற்பவே அம் மொழிக்கும் சிறப் பேற்படுமென்பதும் கவனிக்கவேண்டும்.

உலகில் மக்கள் ஒருவர்க் கொருவர் தங் கருத்துக்களை ஒலிக் குறிப்பால் தெரிவித்துக்கொள்ள முற்பட்டதினின்றே பாஷை பிறக்கலாயிற்று. தேச, கால வேறுபாடுகளால் ஆங்காங்கே தனித் தனிக் கூட்டமாக வசித்துக் கொண்டிருந்த மக்களில் ஒவ்வொரு கூட்டத்தாரிடையும் ஒவ்வொரு வித பாஷை உண்டாகியது.



பின்னர் அக் கூட்டத்தார் ஒருவர்க் கொருவர் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் வந்தபொழுது ஒரு மொழியோடு மற்றொரு மொழிக்குச் சம்பந்த மேற்பட்டது. ஒரு கூட்டத்தாரே வெவ்வேறாகப் பிரிந்து சென்ற காலத்தில் அவர்கள் பேசிய ஒரு மொழியே இடத்திற்குத் தக்கபடி நாளடைவில் பல்வேறு மொழிகளாகவும் பரிணமித்தது. மக்களிடையில் அறிவும், சுகபோக நுகர்ச்சியும், நாகரீகமும் வளர்ச்சியடைந்து வந்ததற் கேற்ப அவர்களுடைய மொழியும் பல உறுப்புக்களுடன் வளர்ச்சியடைய லாயிற்று. அதற்குப் பிறகே எழுத்துக்களும், நூல்களும், கலைகளும், சாஸ்திரங்களும், பிறவுந் தோன்றின. இது பற்றிய விரிவுரைகளை மொழி பற்றிய ஆராய்ச்சி நூல்களில் காண்க. விரைவில் போகத்தக்க போக்கு வரவுக்குரிய சாதனங்களும், நாட்டிலிடை வதியும் பல்வேறு மக்களனைவரும் ஒன்று சேரவேண்டிய அவசியமும், சந்தர்ப்பமும் ஏற்படாத முற்காலத்தில் நம்மிந்தியாவில் பாரத மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசிக்கொண்டு பல்வேறு கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். அதன் பயனாக நம் பாரத நாடு தேசீய ஒற்றுமையை இழந்து அடிமை வாழ்க்கைக்கு ஆட்பட்ட வரலாற்றினைப் பற்றி இனி ஆராய்வதாற் பயனென்ன?

இன்று ஆங்கில அரசாட்சி நம்மை ஆண்டுவருகிறது. நாட்டிடைப் போக்கு வரவுக்குரிய சாதனங்கள் பிரபல மடைந்துள்ளன. ஆங்கிலக் கல்வி பரவியதன் பயனாய், குமரி முதல் இமயம் வரை பிறந்த நாட்டிடை வதியும் மக்களில் கற்றுணர்ந்த அறிவாளிகள் பலரும் தேசத்தின் பெயரால் ஒரு மேடையிற் கூடி ஒரு குடும்பத்தாரைப் போல் பேசவும், நாட்டின் நலத்திற்கான முயற்சிகளைப் புரியவும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. எனவே தேசீய மகாசபையின் பெயரால் பாரத மக்களனைவரும் ஒருங்கே கூடித் தம்முள் உள்ள மொழி வேற்றுமைகளை மறந்து, அன்போடு அளவளாவிப் பேசிக் குலவி, தேசீய ஒற்றுமையைக் காணச் சாதகமாயிருந்த பொது மொழியாம் ஆங்கில மொழியின் பயனையும், உயர்வையும்

இன்னும் வேறாகப் புகழ வேண்டுமோ? ஆங்கில அரசாங்கத்தின் கீழ் ஆங்கில மொழிக்கு முதன்மை யேற்பட்டதன் காரணத்தால், நந் தேசீய (இந்திய) மொழிகள் குன்றிப் போயின வென்பதிலையமில்லை, எனினும் இந்தியரிடையில் கூட்டுறவும், நட்பும், ஒற்றுமையுணர்ச்சியும், தேசாபிமானமும் ஒரு சிறிது வளர்வதற்குக் காரணமாயிருந்ததோடு, உலகில் அயல் நாட்டார் பலரோடும் நமக்குக் கூட்டுறவு ஏற்படுத்தி வைத்த பொது மொழியாகிய ஆங்கில மொழி நமக்குச் செய்துள்ள அரிய நன்மைகளை மறப்பதற்கில்லை. ஆயினும் நமது நாட்டின் நிலைமையை நன்றாகக் கவனிக்குமிடத்து இன்னும் எத்தனை ஆண்டுகளான போதிலும் இந்தியப் பொது மக்களிடையில் சர்வ சாதாரணமாக வழங்கும் ஒரு பொது மொழியாக ஆங்கிலம் பரவுமென்றெதிர்பார்ப்பதற்கில்லை. மேலும் தேசீய உணர்ச்சிக்கு மூல காரணமான தேசீயப் பொதுமொழியாக ஆங்கில மொழியை நாம் அங்கீகரிக்கவும் முடியாது. எனவே, இந்தியாவைப் பொறுத்தமட்டில் நந் நாட்டு மொழிகளிலொன்றே, நந் நாட்டுக்குப் பொது மொழியாக வழங்க வேண்டுவதவசியம். அப்பொழுது மொழி வேற்றுமைகளால் நேர்ந்த பிளவுகள் மறைந்து நாட்டில் தேசீய ஒற்றுமை சாதிக்கப்படுவதாம். இனி நாட்டில் வழங்கும் ஒவ்வொரு மொழிக் குடையாரும் தத்தம் மொழியே நாட்டின் பொது மொழியாக வழங்கப்பட வேண்டுமென்று விரும்பக்கூடும். ஒவ்வொருவருக்கும் தம் தாய் மொழியிடத்துப் பற்று இருக்க வேண்டுவது அவசியந்தான், எனினும் இந்தியாவெங்கும் சற்றேறக் குறைய பெரும்பாலான மக்கள் சுலபத்தில் தெரிந்துகொண்டு வழங்கக்கூடிய ஒரு மொழியே பொது மொழியாக்கப்பட வேண்டுவது நியாயமாகும். அவ்வாறு பார்க்குமிடத்து நந் நாட்டில் பெரும் பகுதியாரால் வழங்கப்படும் பாஷைகளின் விபரம் பின் வருமாறு:

முப்பது கோடி இந்திய ஜனங்களில் ஹிந்தி பேசுபவர் 14 கோடி மக்கள்; வங்காளியும் அதைச் சேர்ந்த பிற மொழிகளும் பேசுபவர் 6 கோடி; மராத்தியும் குஜராத்தியும் பேசுபவர் 3 கோடி; தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் என்னும் பஞ்ச திராவிட மொழிகளைப் பேசுபவர் 6 கோடி. மற்ற மொழிகளுக்குடையார் மிகக் குறைந்த தொகையினராவர். இந்தியாவில் ஆங்கில மொழியை எழுதப் படிக்கக் கற்றவர்கள் 20 லக்ஷம் பேரெனக் கணக்கிட்டிருக்கின்றனர். இந் நிலையில் எம்மொழியை நந் நாட்டுக்குப் பொது மொழியாக்கலாமென்பதைச் சற்று சிந்தியுங்கள். தென்னாட்டுப் பஞ்ச திராவிடங்கள் நீங்கலாக வட நாட்டு மொழிகளனைத்திற்கும் ஹிந்தியினிடத்தில் நெருங்கிய சம்பந்தமும், சகோதர பான்மையும் உண்டு. மகமதியர் பேசும் ஹிந்துஸ்தானியும் ஹிந்தியில் ஒன்றுபடுவதேயாம். இதை முன்னிட்டே தேசீய மகா சபையாரும் ஹிந்தியே இந்தியாவுக்குப் பொது மொழியாக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். அதனாலேயே தென்னாட்டில் ஆங்காங்கே ஹிந்தி மொழியைப் பரப்புவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. ஆங்கிலத்தைப்போல் அம் மொழியைக் கற்பதும் அவ்வளவு கடினமானதல்ல. ஆகவே இந்திய மக்கள் ஒவ்வொருவரும் ஹிந்தி மொழியைக் கற்றுக்கொண்டு, அதை நந் நாட்டுப் பொது மொழியாக வழங்க ஆயத்தப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு பாடசாலைகளும், ஸ்தல சுயாக்ஷி ஸ்தாபனங்களும் ஹிந்திப் பிரசார சபைகளுக்குத் துணை புரிந்து ஒத்துழைக்குமாயின் விரைவில் வெற்றி யடையலாம். ஹிந்தி கற்றவர்கள் ஒருவர்க்கொருவர் எழுதுங் கடிதங்களை ஹிந்தியில் எழுதவும், பொதுச் சபைகளில் அம் மொழியிலேயே பேசவும் முற்படுவாராயின் அதி தீவிரமாக நாட்டில் அம் மொழி பரவக் கூடும். அப்பொழுது ஹிந்தி கற்ற ஒரு தமிழ் மகன் இந்தியாவெங்கும் தன்னுடனச் சுற்றிவரவும், இந்திய அனைவரோடும் அளவளாவி அன்பைப் பெறவும், தேசப் பொது நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் கலந்துகொள்ளவும் சாத்தியமாகும். அப்படியே பிறரும் கூட்டுற வெய்துவர். இவ்வாறு கூறியதால் ஹிந்தியைத் தவிர பிற நாட்டு மொழிகளனைத்தையும் அழித்துவிட வேண்டுமென்பது கருத்தல்ல.

குறிப்பிட்ட ஒரு அளவுக்குக் குறையாத ஜனத் தொகையினரால் பேசப்படும் ஒவ்வொரு மொழியைப் பற்றியும் இந்தியாவில்

மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும். அம் மாகாண அரசாக்ஷியிற் பெரும் பகுதி அம் மாகாணத்தில் வழங்கும் மொழியாலேயே நடைபெற வேண்டும். அம் மாகாணத்திற் காணப்படும் சர்வ கலா சாலையாரும் தந் தாய் மொழிக்கே முதன்மையளிக்க வேண்டும். நீதி மன்றங்களனைத்தும் தாய் மொழியாலேயே நடை பெறுதல் அவசியம். அதனால் பொது மக்களுக்கு மொழி பெயர்ப்பாளர்களான வக்கீல்களின் தயவை நாடி அதிகப் பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் குறையும். மேலும் நாட்டு மொழிக்கும், அவ் வகையில் பல சுதந்தரக் கலைகளுக்கும் போஷிப்பு ஏற்படும். மாகாணங்கள் அனைத்திற்கும் தலைமையான (இந்திய) தேசிய அரசாக்ஷி ஹிந்தியில் நடைபெற வேண்டும். நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் அரசியல் மொழியாகவும், பொது மொழியாகவும் ஹிந்தி கற்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் உதவி மொழியாகக் கற்க வசதி யேற்படுத்தினால் போதுமானது. இவ்வாறு ஹிந்தி பொது மொழியாக்கப் பட்டாலேயே இந்தியாவின் தேசிய ஒற்றுமை காக்கப் பெறுவதாகும். தமிழர் போன்றவர்கள் தனி மாகாண அரசியல் சுதந்தரம் பெற்று முன்னேற வழி யேற்படும். நந் நாட்டில் உத்தியோகம் வகிக்க விரும்பும் ஆங்கிலேயர் போன்றவர்கள் நந் நாட்டுப் பொது மொழியைக் கற்றுக்கொண்டு நம்முடன் ஒன்றுபட முற்படுவர். வெளி நாட்டு வியாபார விவகாரங்களும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்துடன் சம்பந்தப்பட்ட இந்திய அரசாக்ஷியின் காரியங்களும் ஆங்கிலத்தில் நடைபெறலாம்.

இது காறும் கூறிவந்தபடி சாதி, சமயம், மொழி என்னும் முத்துறைகளிலும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு இந்தியாவின் தேசிய ஒற்றுமை சாதிக்கப் பெறுமாயின் அந்த நிமிடமே நமது நாட்டின் அடிமை விலங்கு அறுபட்டு, இந்தியாவும் சுதந்தரம்பெற்ற நாடாக-பலம் வாய்ந்த தேசமாக-செல்வம் படைத்த பூமியாக-உலக சமாதானத்தை நிலை நாட்டும் உறுதி வாய்ந்த ஊராகப் பிரபஞ்சத்தில் வாழலாகுமென்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம். முடிவாகத் தமிழ் நாட்டுத் தேசியக் கவிச் சக்கிரவர்த்தியாராகிய சுப்பிரமணிய



# அணுக்களும் பதார்த்த வளர்ச்சியும்.
# (Atoms and growth of matter.)

**K. G.** கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

கிறிஸ்து பிறப்பதற்கு 420 வருஷங்களுக்கு முன் (420 B. C.) கிரீக் தேசத்து தத்துவசாஸ்திர ஞானிகளான டிமாக்ரிடஸ் (Democritus), எபிக்கூரஸ் (Ebicurus, 370 B. C), லுக்கிரீ (Lucretius 50 B. C.) இவர்களின் ஆதரவில் பயின்று களுக்கு சதா அறிதற்கரிய அசைவுடன் கூடிய அணுக்க

---

...ரின் வாக்கினை இங்கு ஞாபகமூட்டி இக் கட்டுரையை ...ரம்.

பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே (வந்தே)

2. ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் (வந்தே)

3. புல்லடிமைத் தொழில் பேணி—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்தே.)

ளால் உலகம் கட்டப்பட்டிருக்கிறதென்று நன்கு புலனாகி யிருந்தது. ஆனால் இவர்களின் அணுக்களின் யூகிப்பு தற்காலத்து ஜட சாஸ்திரி (Physicits) களைப்போலன்று. இவ்விருபதாம் நூற்றாண்டில் அணுக்களின் அவதாரங்களின் அமைப்பைச் சரிவரத் தெரிந்து அளவிட்டு அவைகளின் அந்தரங்கத்தைச் செவ்வனே வெளிப்படுத்தியுள்ளனர்.

லுக்கிரீஸியஸ் என்பவரின் நோக்கப்படி, ஏதாவதொரு வஸ்துவைச் சிறுசிறு பாகங்களாக நறுக்கிக்கொண்டே போனால் கடைசியாக அடையுமோர் சிறு பாகத்திற்கு அணுவென்று பெயர். இதைக் கண்கூடாய்க் காண்பதரிது. அணுக்களின் கோட்பாடுகளை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே கிரீக் தேசத்து ஞானிகள் யூகித்திருக்கின்றனர். கீழே குறிப்பிடும் டிமாக்ரிடஸ் என்பவரின், அணுக்களின் விதிகளை நோக்கினால், சுமார் 400 (கி.மு.) விலேயே அணுக்களின் கோட்பாடுகள் எவ்வளவு பூர்த்தியாகி யிருக்கின்றனவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

(1) ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றும் கிடைக்காது, நிலைத்திருப்பவைகள் எவையும் அழிக்கமுடியாது. எல்லா மாறுதல்களும் அணுக்களின் சேர்க்கையாலும், பிரிவினைகளாலும் உண்டாகின்றன.

(2) யாதும் எதிர்பாராத சம்பவமாய் நேரிடுவதில்லை, எல்லாச் சம்பவங்களும் சில காரணங்கள் பற்றியே உண்டாகின்றன.

(3) அணுக்களும், வெட்டவெளியுமே நிலைத்திருப்பவைகள். மற்றவைகள் யாவும் அபிப்பிராயங்களே.

(4) அணுக்களின் தொகை அளவற்றது, அவைகளின் உருவங்கள் பலவிதமானவைகள். அணுக்கள் ஒன்றோடொன்று மோதியுண்டாகும் நேர் அசைவும் (Lateral motion), சுழலும் உலகம் முதலானவதாகத் தோன்றக் காரணங்களாயிருந்தன.



(5) வஸ்துக்களின் பலவிதங்களின் காரணம், அவைகளின் அணுக்களின் தொகை, உருவங்கள், சேர்க்கை முதலியவைகளே.

(6) ஆத்மாவானது நெருப்பின் அணுக்களைப்போல வட்டமாயும் நுண்மையாயுமுள்ள அணுக்களை உடைத்தாயிருக்கிறது. இவைகள் எல்லாவற்றிலும் மிகவும் தானாக வளையக்கூடியவை. இவைகள் தேகத்தில் ஊடுருவிப் பரவி அவைகளின் அசைவால் உயிர் உண்டாகிறது.

இவ்விதிகளில் சிலவற்றை மாற்றியும், சிலவற்றை ஒழித்தும் பார்க்கில் தற்போதுள்ள அணுக்களின் விதிகளை ஒத்திருக்கின்றனவென்பதில் யாதொரு ஐயமில்லை. தற்போது கண்டுபிடித்துள்ள அணுக்களின் பலவிதங்களும், ஒரேவிதமான அணுக்களின் ஒற்றுமையையும் ஒத்திருத்தலையும் கிரீக் தேசத்து ஞானிகளுக்கு அக்காலத்தில் தோன்றவேயில்லை. ஆகவே அவர்களின் அணுக்களைப் பற்றிய யூகிப்பு மென்மேலும் வளராது தடைபட்டு நின்றுவிட்டது.

இதுவரை 92 விதமான அணுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் முதலாவது அணுக்கள் ஜல வாயு (Hydrogen) வைச் சேர்ந்தவை, கடைசி 92-வது வித அணுக்கள் யுரேனியம் (Uranium) வகையைச் சேர்ந்தவை.

நாம் இயற்கையை (Nature) செங்கல், கட்டை, ஆணி முதலிய சாமான்களால் வீடு கட்டுவோனை ஒப்பிடவேண்டியிருக்கிறது. தற்போது கண்டுபிடித்துள்ள 92 வித அணுக்களில் சிலவைகளே பெரும்பாலும் உபயோகப்படுகின்றன. நமக்குத் தெரிந்தவரை உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும மிகச் சில அவயவங்களால் (Elements) வளர்க்கப்பட்டிருக்கின்றன. உலகத்தில் வளரும் எல்லாத் தாவரங்களும், கடலின் ஜலமும், காற்றும், மேகங்களும், பூமியிலும், கடலிலும், காற்றிலும் வசிக்கும் எல்லா ஜீவஜெந்துக்களும், நமது தேகங்களும், சூரியனும், சந்திரனும் எல்லா நட்சத்திரங்களும் அணுக்களாலேயே வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு கொற்

றனுக்குச் செங்கல், சுண்ணாம்பு, இரும்பு, பலகை முதலிய சாமான்களைக் கொடுத்தால் அவன் பலவித மாட மாளிகை கூட கோபுரங்களைக் கட்டி முடிக்கிறானன்றோ? ஏன் இயற்கையும் அவ்வாறே கட்டி முடிக்கக்கூடாது? அப்படியானால் பலவித சேர்க்கையிலும், கட்டிடத்திலும் எப்படி அணுக்கள் ஒன்றோடொன்று பொருந்திக் கொள்ளுகின்றன வென்று ஆராய்வோம். கொற்றனுக்குள்ள சாமான்களைப்போல இயற்கையும் பலவித அணுக்களை உடைத்தாயிருக்கிறது. கொற்றனுக்குப்போல சாந்து, ஆணிகள் இயற்கைக்கு இல்லை. ஆனால் இரண்டு காந்தங்கள் (Magnets) வடக்கு தெற்கு முனைகளை (Opposise Pobs) க்காட்ட எப்படி ஒன்றோடொன்று தானாகவே பொருந்திக் கொள்ளுகின்றனவோ அப்படியே அணுக்களும் ஒன்றோடொன்று சேர்ந்து கொள்ளுகின்றன. இதை அதிகமாய் விரியாது அணுக்களை ஒன்று சேர்க்கும் பலாத்கார சக்திகள் (Forces) உள்ளன வென்று முடித்து விடுவோமாக.

அப்படிப்பட்ட பலாத்கார சக்திகளிருப்பின் ஏன் எல்லா அணுக்களும் ஒன்று சேர்ந்து ஒரே திடபதார்த்த (Solid) மாகவில்லை? ஏன் வாயு பதார்த்தம் (Gas,) ஜல பதார்த்த (Liquid) மென இருவகையுமுண்டு? பூமி சூரியனில் விழுந்து ஒரே திட பதார்த்த மாகாதிருப்பதின் காரணம் யாது? பூமி சூரியனைச் சுற்றிக் கொண்டே வருவதால் அது சூரியனில் விழாமலிருக்கிறது. திருஷ்டாந்தமாக நாம் ஓர் சிறிய கல்லை ஓர் நூலில் கட்டி சுற்றினால் நமது கை சூரியனாகவும், கல் பூமியாகவும், பிணைக்கும் நூல் பலாத்கார சக்தியாகவுமாகின்றன. நூலின் பலாத்கார சக்தியைக் கல்லின் சுழல் தடுத்து எப்படி கல் அந்தரமாய் தனியாயிருந்து வருகிறதோ அப்படியே பூமியும் சூரியனில் விழுந்துவிடாது அந்தரமாயிருந்து வருகிறது. ஆனால் பூமி சுற்றாமலிருந்தால் பூமியின் பாடு அதோகதிதான்.

அதேவிதமாக நாம் பதார்த்தங்களை அதிக கவனமாய் நோக்கி யூகித்தால் அணுக்களின் அசைவு (Motion) அணுக்களை பலாத்கார சக்தியால் ஒன்றோடொன்று சேர்த்து ஒரே கன பதார்த்தமா



காமல் தடுத்துவிடுகிறது. அணுக்களின் அசைவு, அணுக்களின் ஒன்றுக்கொன்று இழுக்கும் சக்தி (Force of attraction) யைவிட அதிகரித்து விட்டால் அணுக்கள் ஒன்றுசேர நேரமில்லாது போய் அணுக்களுக்குள்ள தூரம் அதிகமாகி விடுவதால் வாயு பதார்த்த முண்டாகிறது.

அணுக்களின் அசைவு அவைகளின் ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தியைவிட கொஞ்சம் அதிகமாகவும், கொஞ்சம் குறைவாகவுமிருந்து அணுக்கள் ஒன்றுக்கொன்று அருகாமையில் அமைக்கப்பட்டு (Being in Contact) ஜல பதார்த்தமாகிறது.

ஆனால் திட பதார்த்தத்தில் அணுக்களின் ஒன்றுக்கொன்றுள்ள இழுக்கும் சக்தி அவைகளின் அசைவைவிட அதிகரித்து விடுகிறது. ஆதலால் அணுக்கள் ஒன்றோடொன்று நன்றாய்ச் சேர்ந்து உறுதியாகிவிடுகின்றன. இவ் வுறுதியான அமைப்பிலும் அணுக்கள் ஒரு புகை வண்டித் தொடர் போகும்போது எப்படி ஓர் இரும்புப் பாலம் ஆரைகிறதோ அவ்வளவு அற்ப அசைவை (Quiver) யுடையதாயுமிருக்கிறது. ஆனால் அணுக்களால் உண்டான உறுதியான மேஜை, காகிதம் முதலிய வஸ்துக்கள் யாதொரு அசைவுமின்றி யிருப்பதைக் கண்டு இந்நிலைமையிலும் அவைகள் அற்ப அசைவை யுடைத்தாயிருக்கின்றன வென்று அறிவது மிகக் கஷ்டமாகவே யிருக்கிறது. ஆனால் அநேக தத்துவ சாஸ்திர ஞானிகள் இவ்வற்ப அசைவை உண்மையென உணர்ந்துள்ளனர்.

அணுக்கள் பல்வேறு வழிகளில் ஒன்றுக்கொன்று சேர்ந்து பலவித உறுதிப்பாடுகளை யுடைத்தாயிருப்பதின் காரணமாக உலகத்திலுள்ள பலவித தோற்றங்களையுடைய திட பதார்த்தங்களைக் காண்கிறோம். அணுக்கள் ஒரு சீதோஷ்ணத்தில் ஒருவிதச் சேர்க்கையும் மற்றொரு சீதோஷ்ணத்தில் வேறொரு சேர்க்கையுமடைந்து பலவித பதார்த்தங்களாக மாறிவிடுகின்றன. திட பதார்த்தத்தை சீதோஷ்ண அதிகரிப்பால் ஜல பதார்த்தமாகவும், ஜல பதார்த்தத்தை வாயு பதார்த்தமாகவும் மாற்றிவிடலாம்.

## உலக உற்பத்திக் கதை.

முதலாவதாக ஈதர் (Ether) என்னும் அறியக் கூடாததோர் அபிப்பிராய வஸ்து நிறையப்பெற்ற வெட்டவெளி உண்டாயிற்று. பிறகு இவ் வெளியில் இருவித அணுவுக்கணுவான (Electrons and Protons) வைகள் உண்டாகி அவைகள் ஒன்று சேர்ந்து அணுக்களாலாகிய பதார்த்தங்களாயின. இவைகள் பெரியவைகளாகிக் கண்ணுக்குத் தோன்றக்கூடியவைகளாயின. இவைகள் பின்னும் மற்றவைகளோடு இழுக்கும் சக்தியால் சேர்க்கப்பட்டு கிரகங்களும் (Planets) சூரியனுமாயின. மிகவும் பிர்மாண்டமான சூரியனின் அணுக்களின் அதிதீவிர அசைவால் அதிகச் சக்தியையுடைய பிரகாசம் உண்டாகி வெட்ட வெளியில் கிரகங்களின் மேல் தாக்கப்பட்டு அக் கிரகங்களில் தாவர வர்க்கங்கள் உண்டாயின.

அணுக்களின் கூட்டங்கள் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டு ஒருவித ஆச்சரியப்படத் தக்கதாகத் தானாகவே நகரும் வஸ்து உண்டாயிற்று. யாதொரு உதவியின்றி நகரும் இவ் வஸ்து மற்ற வஸ்துக்களைச் சேர்த்து தன் வளர்ச்சியைத் தேடிக் கடைசியாக நல்ல அம்சங்கள் அமையப்பெற்று சூரிய வெளிச்சத்தால் கண்ணுக்குப் புலப்படக் கூடியதாயிற்று. இதுவே 'உயிர்' எனப்படுவது. இதில் தாழ்மையானது தாவர உயிர்கள், மேன்மையானது மிருக உயிர்கள். மிருக ஜாதிகள் தானாகவே மாத்திரம் வளர்வதல்லாது, நன்றாய் வளர்ந்தபின் இரண்டு மூன்று இப்படியாக அதிக உயிர்களாகத் தன்னிலிருந்தே உற்பத்தி ('Reproduction') பண்ணிக் கொள்ளுகின்றன.



# திரு. நபியவர்களின் திவ்ய சரித்திரம்.

ஜனாப் S. S. மகமது அப்துல்காதர் சாகிப் அவர்கள்.

(பாகவி)

மானிடராகப் பிறந்தோர் யாவரும் இம்மை மறுமைப் பயன்களை யடையும்பொருட்டுத் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழுதலையே தமது உயரிய நோக்கமாகக் கொண்டு, சன்மார்க்கத்தைப் போதித்து, அருந்தொண்டாற்றி, தமது ஜீவிய காலத்திலேயே தமது ஒப்பற்ற ஊழியத்தில் வெற்றி பெற்று இஸ்லாம் மதத்தை உலகம் உள்ளளவும் இருக்கும் வண்ணம் நிலை நாட்டிய நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் சரித்திரத்தைப் பாரதியின் வாயிலாகத் தமிழ் மக்களிடை வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கங்கொண்டு எனது நண்பர் ஸ்ரீமான் ரா. நாராயணஸ்வாமி அவர்கள், திரு. நபியவர்களின் திவ்ய சரித்திரத்தை எழுதித் தருமாறு எனக்குக் கட்டளையிட்டதுபற்றி எனது நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலக ரக்ஷகரா யுதித்த, உத்தம சீலரான நபிகள் நாயகம் அவர்களின் திவ்ய சரித்திரத்தை அரிய பெரிய அறிஞர்களும், அறிவாளிகளும், கலை வல்லுனர்களும் வழுவற எழுத இயலாதிருக்கும்பொழுது புல்லறிவாளனாகிய நான், எழுதப் புகுவது "முடவன் கொம்புத் தேனுக் காசைப் பட்டதுபோ" லாகும் என்பதை யாவரும் அறிவர். எனினும், ஒவ்வொருவரும் தத் தமக்கு எட்டியமட்டில் தாம் தெரிந்ததை மற்றவருக் குரைப்பது குற்றமாகா தென்பதையும், முஸ்லிமாக உள்ளவர் ஒவ்வொருவரும் இத்

தகைய காரியத்தை அவரவரா லியன்றவளவு செய்வது மதக் கடமையாக விருப்பதையும், இந்தச் சிறிய ஊழியத்தால் இறைவனின் கிருபையும், நாயகமவர்களின் அன்பும் ஏற்படும் என்ற ஆதரவையும் முன்னிட்டு எனக்குத் தெரிந்தவரை எழுதத்துணிந்தேன். பாரதியின் வாசகர்கள் பெரும்பாலும் முஸ்லிம் அல்லாத நண்பர்களாக இருப்பார்களாதலின் அரபிப் பதங்களைக் கூடியவரை குறைத்துத் தமிழ்ப்பதங்களையே உபயோகப்படுத்த உத்தேசித்துள்ளேனாதலால், நண்பர்கள் இதிற் காணுஞ் சொற் குற்றங்களையும் பொருட் குற்றங்களையும் பொருட்படுத்தாது குணத்தைக் கொள்ளுவார்கள் என நம்புகிறேன்.

## முன்னோர் வரலாறு

இற்றைக்குச் சற்றேறக் குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு பாபிலோன் பட்டணம், உலகத்தில் மிக மிகக் கீர்த்தி பெற்ற நகரமாக விளங்கிற்று. அரசியல், பொருளாதாரம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளில் நிகரற்றதாகவு மிருந்து வந்தது. இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற இந் நகரத்தை அரசாண்டு கொண்டிருந்த அரசன், தனது ராணுவ பலத்தையும் பணப் பெருக்கையுங் கண்டு இறுமாப்புற்றுத், தன் ஆளுகைக்குட்பட்ட தேசங்களில் மிகப் பெரியதாக விருந்த, வணக்கஸ்தலத்தில் தனது உருவச் சிலையை நிறுத்தித் தனது பிரஜைகள் யாவரும் அதையே வணங்க வேண்டுமெனக் கட்டளையிட்டான்.

இத்தகைய இறுமாப்புள்ள அரசனுக்கும், இக் கொடுங்கோல் மன்னனின்கீழ் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் அவனது பிரஜைகளுக்கும் சன்மார்க்கத்தைப் போதித்து, நேரான வழியைக் காட்டி, தெய்வ வணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இறைவன் இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நபியாக உற்பவிப்பித்தான். இந் நபியவர்கள் செய்த சன்மார்க்க போதனையானது, தன்னுடைய தெய்வீகத் தன்மையை மறுப்பதாக இருப்பதை அரசன் கண்டு அவர்பால் சீற்றங்கொண்டான். அரசனுக்கு



விருப்பமில்லாத காரியத்தைச்செய்ய நபி இப்ராஹீம் (அப்ரகாம்) துணிந்ததால் அவ்வரசனின் வால்பிடித்துத் திரிவோரும் அவருக்கு விரோதிகளாயினர். அரசனும் பிரஜைகளும் அவருக்குப் பல இடைஞ்சல்களையும் இன்னல்களையும் உண்டுபண்ணினர். ஆயினும், இறைவன் அவரைக் காப்பாற்றினான். பின்னர் அவர் வெறுப்புற்றுப் பிறதேசம் புறப்பட்டார். இவருடன் இவருடைய மனைவியாகிய சாராளும், லூத் என்பவரும் இவருக்குத் துணையாகப் புறப்பட்டனர். இவர் தமது தேசத்தை வெறுத்துச் செல்லுகையில் தமது ஜீவனத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு ஆடுகளை வளர்த்துக் காலங் கடத்திவந்தார். இவருக்கு இவ்வாடுகளில் அதிக விருத்தியைக் கொடுத்தான். நாளடைவில் அவைகள் பெரும் மந்தைகளாகப் பெருகிவிட்டன. ஆகலால், இவ்வாடுகளை மேய்ப்பதற்காக நபி இப்ராஹீம் அவர்கள் பசும்புற்றரைகளையும் மேய்ச்சலிடங்களையும் தேடிக்கொண்டே பல நாடுகளையுங் கடந்து இறுதியாக எகிப்து தேசத்தை அடைந்தார்.

அக்காலத்தில் ரக்கியூன் என்ற நாமமுள்ளவன் எகிப்து தேசத்தை அரசாண்டுகொண்டிருந்தான். இவன் பூர்வீக தேசம் பாபிலோன் பட்டணமாதலாலும், இப்ராஹீம் நபி அவர்களுடன் வந்த சாராள் தன் தேசத்துப் பெண்ணாக இருப்பதாலும் அவளை மணந்துகொள்ள விரும்பினான் எனினும், அவ்வம்மையார் இப்ராஹீம் நபியவர்களின் வாழ்க்கைத் துணைவி என்பதைப் பின்னர் அறிந்து அதற்காக வருந்தியதுடன் இப்ராஹீம் நபியவர்களையும் அவரது மனைவியாகிய சாராளையும் கௌரவித்து மரியாதை செய்து அவர்களுக்கு வேண்டிய உபசரணைகளையுஞ் செய்தான். பின்னர், இப்ராஹீமும் அவரது மனைவியும் அத்தேசத்தை விட்டுத் திரும்பியகாலத்து எகிப்தரசன் தான் தவறாகக்கொண்ட எண்ணத்திற்குப் பரிகாரமாகவும், உயர்ந்த குடும்பத்திலிருந்து வாழவும், தன்னுடைய சுய சமூகத்தினருக்கே மனைவியாக இருக்கட்டும் என்ற நோக்கங்கொண்டு தனது புத்திரியாகிய ஹாஜராவை இவர்களுடன் அனுப்பிவைத்தான். அரசனின் நன்னோக்கத்தை

அறிந்த இப்ராஹீம் நபியவர்கள், அவனுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு ஹாஜராவை விவாகஞ் செய்துகொண்டார்கள் இப் பெண்மணியின் வயிற்றில் இப்ராஹீம் நபிக்கு இஸ்மாயீல் நபி, (இஸ்மவேல்) மூத்த குமாரராகப் பிறந்தார். பின்னர், இப்ராஹீம் நபியவர்களின் முதல் மனைவியாகிய சாராளின் வயிற்றில் அவரது இரண்டாவது குமாரராகிய இஸ்ஹாக் நபி பிறந்தார். இவ்விரு குமாரர்களும் பெரிய பெரிய சமூகத்தினருக்குத் தகப்பனாவார்களென்றும், இவர்களின் சந்ததியினர் எண்ண முடியாத அளவுக்கு அவ்வளவு அதிகமாக விருத்தியடைவார்கள் என்றும் இறைவன், இப்ராஹீம் நபிக்கு அறிவித்திருந்தான். ஆதலால், இப்ராஹீம் நபியவர்கள் இறைவனின் கட்டளைப்படி இஸ்மாயீல் நபியவர்களை அரப் தேசத்தில் பாரான் என்ற வனாந்தரத்திலும். இஸ்ஹாக் நபியவர்களை ஷாம் (சிரியா) தேசத்திலும் குடியேற்றினார்கள். இவ்விருவர்களையும் இவ்வாறு குடியேற்றியதில் மற்றொரு நன்மையுமேற்பட்டது. அதாவது இஸ்ஹாக் நபியவர்களுக்கு அவருடைய தாய்வழிப் பாட்டனாரின் தேசமாகிய இராக்குக்குப் போக்குவரத்துச் செய்யவும், இஸ்மாயீல் நபிக்கு அவருடைய தாய்வழிப் பாட்டனின் தேசமாகிய எகிப்துக்குப் போக்குவரத்துச் செய்யவும், அவசரகாலத்தில் இரு சகோதரர்களும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவும் வசதியாவிருந்தது. இஃதேபோல், இஸ்ஹாக் நபிக்கு அவருடைய தாய்வழிக் குடும்பத்தில் விவாகமாயிற்று இஸ்மாயீல் நபியவர்கள் அரப் தேசத்துப் பூர்வீக ராஜ குடும்பத்தினராகிய பனுஜர்ஹம் என்ற கோத்திரத்துத் தலைவரான மலால் என்பவரின் புத்திரியை மணந்தார்.

இறைவன், இவர்கள் ஒவ்வொருவருக்கும் பன்னிரண்டு பன்னிரண்டு புதல்வர்களைக் கொடுத்தான். இதுவுமல்லாமல், இஸ்ஹாக் நபியின் இரண்டாவது புத்திரராகிய யாக்கோபு நபியின் சந்ததியிலேயே இஸ்ரவேலரிலுதித்த மூஸா, தாவுத், சுலைமான் முதலிய நபிமார்களைப் படைப்பித்தான். இஃதேபோல் இஸ்மாயீல் நபியின் இரண்டாவது புத்திரராகிய கைதார் என்பவரின் வம்சத்திலேயே நமது நபிகள் நாயகமவர்களைச் சிருஷ்டித்தான்.



இப்பொழுது நமது முக்கிய நோக்கம் இஸ்மாயீல் நபி அவர்களைப்பற்றிச் சிறிது கூறுவதுதான். இப்ராஹீம் நபி அவர்கள் இறைவனின் கட்டளைப்படி அரப் தேசத்திலுள்ள பாரான் என்ற வனாந்தரத்தில் இஸ்மாயீல் நபியையும் அவருடைய தாயாரையும் குடியேற்றினார் என நாம் முன்னமேயே கூறியிருக்கிறோமல்லவா? அவ்வனாந்தரம் எதுவெனபதை அறிய நீங்கள் விரும்புவீர்கள். தற்சமயம் அரப் தேசத்திலுள்ள ஹிஜாஸ் என்ற பாகாணத்தில் மக்கமா நகரம் இருக்கும் இடத்திற்குத்தான் பாரான் என்று பெயர். அக்காலத்தில் இந்த இடம் மனித சஞ்சாரமற்றதும், விவசாயத்திற்குத் தகுதியற்றதுமான வரண்ட காடாக இருந்தது. இந்த இடத்தில் இப்ராஹீம் நபியும், இஸ்மாயீல் நபியும் சேர்ந்து ஒரு தேவாலயத்தின் கட்டிடத்தைக் கட்டி முடித்தார்கள். இது கிட்டத்தட்ட சம சதுரமானது. ஆகலால், இவ்வாலயத்திற்கு கஃபா என்ற பெயர் வந்தது. இந்த இடம் மனித சஞ்சாரமற்றதாகவும் விவசாயத்திற்குத் தகுதியற்றதாகவும் இருந்ததால் இந்த இடத்தை ஜன நெருக்கமுள்ளதாகவும், கனிவர்க்கங்களும் காய்கறிகளும் அபரிமிதமாகக் கிடைக்கக் கூடியதாகவும் ஆக்குவதுடன் இவர்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய தீர்க்கதரிசியையும் இங்கு உற்பத்தி செய்யுமாறு இறைவனைப் பிரார்த்தித்தார்கள். இறைவனும் இவருடைய இப் பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டான். ஆதலால், அந்த வனாந்தரத்தில் மக்கா என்ற நகரம் உற்பத்தியானதுமல்லாமல் உலகத்தில் கிடைக்கக்கூடிய சகல கனிவர்க்கங்களும் காய்கறிகளும் புதிது புதிதாக விற்பனைக்கு வருவதைப் பார்க்கலாம். இப்பொழுதும் ஹஜ்ஜு யாத்திரைக்காக மக்காவுக்குச் செல்லுபவர்கள் விவசாயமில்லாத அந்த நகரின் கடைத் தெருவில் பசுமையான காய்கறிகள் மிகவும் குறைந்த விலைக்கு ஏராளமாக வந்து குவிவதைக் கண்டு ஆச்சரியமடையாமலிரார்.

இஸ்ஹாக் நபி அவர்களின் வம்சத்திலுதித்த நபிமார்கள் பாரான் வனத்திலேற்படுத்திய கஃபா என்ற இவ்வாலயத்திற்கு வந்து இறைவனை வணங்கிச் செல்வதுமுண்டு. இவ்வாலயத்தைக் கட்டுவதில் இப்ராஹீம் நபிக்குத் துணையாக இருந்த இஸ்மாயீல் நபி அவர்களைப் பற்றியும், பிற்காலத்தில் வரப்போகிற தீர்க்கதரிசியாகிய நபி பெருமான் அவர்களைப் பற்றியும் தங்கள் தங்கள் வர்க்கத்தினருக்கு அறிவித்ததுடன் எல்லோரும் வரப்போகிற நபியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்றும் எச்சரித்திருக்கின்றனர். இவ் விவரங்களை விவிலிய நூலிலிருந்தே ஆதாரங் காட்டி இவைகளை விளக்கமாகக் கூற முடியும். ஆயினும் விரிவஞ்சி விடுத்தோம்.

இஸ்மாயீல் நபி அவர்களின் புத்திரர்கள் பன்னிருவரும் அரப் தேசத்தை தங்களுக்குள் பாகித்துக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தில் வசித்துப் பெருகினர். ஆயினும், வருஷத்திற்கு ஒரு முறை கஃபா என்ற ஆலயத்திற்கு வந்து அதைத் தரிசித்துச் செல்வது வழக்கம். இவ்வாறு பாகஞ் செய்தவர்களில் இஸ்மாயீல் நபியின் இரண்டாவது புத்திரராகிய கைதார் என்பவருக்கு மக்கமா நகரம் பாகமாகக் கிடைத்தது. இவர் மக்கமா நகரத்திலேயே குடியிருந்து தந்தை செய்ததைப் போல் இவ்வாலயத்திற்குத் தொண்டாற்றுவதை முதற் கடமையாகக் கொண்டிருந்தார். பின்னர் இவருடைய வம்சத்தில் அத்னான் என்பவர் மிகவும் பிரபல்யமாக விளங்கினார். இவருடைய இளைய சகோதரரான அக் என்பவர் யமன் தேசத்தில் தனி அரசாங்கம் ஒன்றையும் ஸ்தாபித்தார். இவருக்குப் பின்பு இஸ்மாயீல் நபிக்குப் பெண் கொடுத்தவர்களாகிய பனுஜர்ஹம் என்ற கோத்திரத்தினர் இவர்களை மக்காவை விட்டு வெளியேற்றினர். இக் கோத்திரத்தினர் விக்ரஹ ஆராதனை செய்வோர்களாகவும், இஸ்மாயீல் நபி அவர்களின் சந்ததியினர் ஏக தெய்வ வணக்கமுள்ளவர்களாகவும் இருந்ததால் வெகுகாலம்வரை இவர்களுக்குள் மனக் கசப்பு இருந்து வந்தது. எனினும், இஸ்மாயீல் நபியுடைய



சந்ததியினர் பலவான்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்ததால் இவர்களை எதிர்க்கச் சக்தியற்றவர்களாக விருந்தனர். கடைசியாக, அத்னான் என்பவருக்குப் பின் தக்க செல்வாக்கும் பக்க பலமுள்ளவர்கள் அவர்களில் இல்லாதிருந்ததால் அக் கோத்திரத்தினர் இவர்களை வெளியேற்றி மக்காவைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

பின்பு, இஸ்மாயீல் நபியின் சந்ததியினரிற் றோன்றிய குஸை என்பவர் மறுபடியும் மக்காவைக் கைப்பற்றிக்கொண்டு கஃபாவைத் தரிசிக்க வருபவர்களுக்குத் தொண்டாற்றுவது, நகரப் பாதுகாப்பு, ஆலோசனைச் சபை கூட்டுதல் முதலிய பல பொதுக்காரியங்களை ஏற்படுத்தி பனுஜர்ஹம் கோத்திரத்தினரும் இஸ்மவேலருமாகக்கூடி ஒற்றுமையாகச் செய்துவந்தனர். இவருக்குப் பின் இவருடைய புத்திரர் அப்துமனாப், இவருடைய புத்திரர் ஹாஷிம், இவருடைய புத்திரர் அப்துல் முத்தலிபு, இவருடைய புத்திரர் அபூதாலிப் ஆகியவர்கள் மக்கமா நகருக்குத் தலைவர்களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்துவந்தனர். நபிகள் நாயகமவர்கள் மேற்கூறப்பெற்ற அப்துல் முத்தலிபுக்குப் பேரரும், அபூதாலிபுக்குச் சகோதரரின் புத்திரருமாவார்.

## அரப் தேசத்தின் நிலைமை

மேலே கூறப்பெற்ற விவரங்களிலிருந்து அரப் தேசத்திற் குடியேறி இருந்தவர்கள் யார் என்பதையும், இதற்கு அக்கப்பக்கத்துத் தேசங்களில் இருந்தவர்கள் யாவர் என்பதையும், இவர்களுக்கும் அரபிகளுக்கும் இருந்துவந்த சப்பந்தம் என்னவென்பதையும் ஒருவாறு தெரிந்துகொண்டிருப்பீர்கள். இனி அரப் தேசத்தைப் பற்றியும் நபிகள் நாயகமவர்கள் காலத்திலிருந்த அரபிகளின் நிலைமையைப் பற்றியும் நபிகள் நாயகமவர்களின் இச் சரித்திரத்திற் கூறவேண்டுவது அவசியமாதலால் அதையும் இங்கு சுருக்கமாகக் கூறுவோம்.

அரபித் தீபகல்பம் ஆசியாக்கண்டத்தின் மேற்குப் பாகத்தில் சிரியா தேசத்தை வடக்கெல்லையாகவும், செங்கடலை மேற்கெல்லையாகவும், இந்துமகா சமுத்திரத்தைத் தெற்கெல்லையாகவும், பாரசீக வளைகுடாவைக் கிழக்கெல்லையாகவும் கொண்டது. அரப் தேசத்தில் உள்நாட்டுப் பிராந்தியங்களில் யமன் தேசத்துப் பள்ளத்தாக்குகளும், தாயிப் மலைப்பிரதேசங்களும் மிகச் செழிப்பானவைகளாகவும், மற்ற இடங்களிற் பல மணல் வெளிகளாகவும், பாலை வனங்களாகவும் இருக்கின்றன. நபிகள் நாயகமவர்கள் பிறந்தகாலத்தில் அரப்தேசத்தின் தென்பாகம் ஆப்பிரிக்காகண்டத்திலிருந்த அபிசினியா அரசாங்கத்திற்கும், கிழக்குப்பாகம் பாரசீக ஏகாதிபத்தியத்திற்கும், வடக்குப்பாகம் உரோம ஏகாதிபத்தியத்திற்கும் அடங்கி இருந்தது. மத்தியிலுள்ள உள்நாடு சுயேச்சையுள்ளதாக இருந்தபோதிலும்; மேற்கூறப்பெற்ற ஒவ்வொரு அரசாங்கமும் அதைக் கைப்பற்றுவதற்கு ஒன்றை ஒன்று போட்டி போட்டுக் கொண்டிருந்தன.

உள் நாட்டுப் பிரதேசத்தில் மக்களிடைப் பரவியிருந்த சுதந்திர வாழ்வானது அவர்களை வெகுவாகக் கெடுத்துவிட்டது. அவர்களில் சுதந்திரம் என்பது தன இஷ்டம்போல் நடப்பதுதான் என்ற உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. அவர்கள், தங்களின் புஜபல பராக்கிரமத்தையும், சுத்த வீரியத்தையும் காட்டுவதற்குத் தங்கள் சொந்தச் சகோதரர்களாகிய அரபிகளையே குறியாகக் கொண்டிருந்தனர். அவர்களிடையிருந்த சோம்பேறித்தனமும் வேலையற்ற தன்மையும் அவர்களைச் சூது விளையாடுவதிலும் மதுபானம் அருந்துவதிலும் பழக்கப் படுத்திவிட்டது. அவர்கள் அந்நியர்களை விட்டு ஒதுங்கியிருந்தானது அவர்களின் வம்சத்தையும், பாஷையையும் கலக்கவிடாமல் சுத்தமானதாகவே இருந்தெனினும் அந்நியர்களைத் தாழ்மைப்படுத்திப் பேசுவதிலும் தங்களை உயர்வாக மதித்துப் புகழ்வதிலுமே தங்களின் வாக்குவன்மையும் நாகரீகமும் இருப்பதாக நினைத்துக்கொண்டனர். தங்களின் துர்க்கிருத்தியங்களை விளம்பரப் படுத்துவதிலேயே தம்



கவித்திறமை முழுவதையும் உபயோகப்படுத்துவர். இதுவுமல்லாமல் தன் ஆபாசமான கவிகளில், தன் அன்பிற்குரிய காதலிகளையும் பிரஸ்தாபித்து அவர்களையும் விளம்பரப்படுத்துவர். அந்நியர்களை விட்டு அடியோடு அகன்றிருந்தானது தங்களது அருமைப் புதல்விகளை விவாகஞ் செய்து கொடுப்பது தங்களுக்கு அளவற்ற கேவலம் என்ற எண்ணத்தை உற்பத்தி செய்து விட்டது. இதனால், உயர் குடும்பத்தோர் எனத் தங்களைக் கூறிக்கொண்டிருந்த சில கோத்திரத்தினர், தங்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்தனர்

அறியாமை, அவர்களிடம் அதிகமாகப் பரவவே அவர்களிடமிருந்த ஏக தெய்வ வணக்கத்தை மாற்றி, விக்ரஹ ஆராதனையை உண்டுபண்ணிவிட்டது. இவ் விக்ரஹ ஆராதனை அவர்களுக்குள் வேரூன்றித் தளிர்த்துக் காய் காய்த்து மனம் நோக்கியதை எல்லாம் வணங்க ஆரம்பித்துவிட்டனர். கல், மண், மரம், பட்டை, சந்திரன், சூரியன் நக்ஷத்திரம், மலை, ஆறு முதலிய சகல வஸ்துக்களையும் வணங்கத் தலைப்பட்டனர். இவ்விதமாக இவர்கள் இறைவனின் பெருமையை மறந்ததுமல்லாமல், மானிட வர்க்கத்தினரின் அருமையையுங்கூட அடியுடன் புறக்கணித்து விட்டனர். மனித உரிமைகளைக் காப்பதற்குத் தகுந்த சட்டம் எதுவும் அவர்களிடமிருக்கவுமில்லை இவ்வித உரிமைகளைச் சரியான விதத்தில் வைப்பதற்குத் தகுந்த விதியுமிருக்கவில்லை. கொலை, களவு, கொள்ளை முதலிய பஞ்சமா பாதகங்களும் அவர்களிடையே பரிபூரணமாகப் பரவி இருந்தன. இவர்களுடைய இத்தகைய தீய குணங்கள் வம்சபரம்பரையாக இருந்துவந்ததால், இவைகள் தாம் உலகத்திலே மகா சிரேஷ்டமான காரியங்கள் என்றும், தாங்கள் தாம் நாகரீகமடைந்தவர்கள் என்றும் கருதிக் கொண்டிருந்தனர்.

அரப் தேசத்தின் எல்லைப் புறங்களில் அந்நிய அரசாங்கங்களின் சம்பந்தம் இருந்துவந்ததால் அப்பிராந்தியங்களில் கிறிஸ்தவ, யூத மதங்களும் பரவி இருந்தன. இந்த மதங்கள் உண்மையுடையனவாக இருப்பினும், இவைகளைப் பின்பற்றிய அரபிகள்

மதச் சட்டப்படி நடக்காமல் தங்கள் மனப் போக்கின்படி நடக்கத் தலைப்பட்டதுடன் தங்கள் விருப்பப்படி அவ்வம் மதங்களைத் திருத்திக்கொண்டனர். இம் மதங்களிற் கூறப்பெற்ற உண்மையான தத்துவங்களை அறிந்துகொள்வதே அசாத்தியமாக இருந்தது. கிறிஸ்தவர்கள், இயேசுவைத் தேவ குமாரரெனக் கூறுகின்றனர். ஆனால், அரப் தேசத்தில் அக்காலத்திலிருந்த கிறிஸ்தவர், இயேசுநாதரின் அன்னையாகிய மரியமையைக் கடவுளின் மனைவி என்றும், அமரர்களைக் கடவுளின் புத்திரர்களென்றும் கூறினர். உஜைர் நபி அவர்கள், தௌராத் வேதத்தை (பைபிள் பழைய ஏற்பாடு) மறுபடியும் புதுப்பித்தெழுதியதால அவரை யூதர்கள் தேவகுமாரரென அழைக்கின்றனர். ஆனால், அரப் தேசத்திலுள்ள அக் காலத்திய யூதர்கள் தங்கள் மதத்துப் பெண்களெல்லாம் கடவுளின் புத்திரிகள் என்றும், ஆண்களெல்லாம் கடவுளின் புத்திரர்கள் என்றும் கூறினர். அக்கினியை ஆராதனை செய்யும் அரபிகளோ, தங்களைப் பெற்றெடுத்த தாய் ஒன்றைத் தவிர்த்து, தங்கள் பிதாவின் பிற பனைவிகளைத் தங்களின் அடிமைப் பெண்களாக வைத்துக்கொள்ளுவதுடன் அவர்களுடன் தேக சப்பந்தத்தையும் வைத்துக்கொள்பவர்களாகவிருந்தனர். கடவுளை இல்லை என்ற நாஸ்திகர்கள்கூட அரபி தேசத்தில் அக்காலத்தில் மலிந்திருந்தனர். குறிப்பிட்ட சிலரைத் தவிர ஏனைய அரபிக் கோத்திரங்களனைத்தும் எழுதப்படிக்கத் தெரியாதனவாகவே இருந்தன. சுருக்கிக் கூறுமிடத்து உலகத்துள்ள சகல அக்கிரமங்களும், மதப்புரட்டுகளும், அரபி தேசத்தில் ஒருங்கே அமைந்திருந்தன என்பதிற் சந்தேகமேயில்லை. இவ்விதமாக அந்தகாரஞ் சூழப்பெற்று அஞ்ஞானத்தில் மூழ்கி இருந்தகாலத்து மக்கமாநகரில் அப்துல் முத்தலிபுடைய குமாரர்களிலொருவரான அப்துல்லா என்பவருக்கு ஆமினு என்ற பெண்கள்திலகமவர்கள் வயிற்றில் கி. பி. 22—4—571 வருஷம் திங்கட்கிழமை ஒரு ஆண்மகவு பிறந்தது. இக்குழந்தை பிறப்பதற்கு முன்னமே அதன் தந்தை இவ்வுலகை விட்டு மறைந்தார். ஆதலால் அப்துல் முத்தலிபென்பவரே அதற்கு முஹம்மது என்ற நாமத்தைச் சூட்டி மக்காவி



லுள்ள குறைஷிகள் யாவருக்கும் விருந்து செய்தார். குறைஷிகள் விருந்துண்டு பிள்ளையின் பெயர் என்னவென விசாரித்தபோது அப்துல் முத்தலிபு, முஹம்மது எனப் பெயர் வைத்திருப்பதாகக் கூறினார். அதற்கவர்கள் உங்கள் குடும்பத்தில் வழக்கமாக இடும் பெயர்களை விட்டுவிட்டு யாருக்கும் எப்பொழுதும் வைக்கப்பெறாத புதுமாதிரியான பெயரை ஏன் வைத்தீர்கள் என வினவியதற்கு அவர், என் குழந்தை உலக முழுதும் பாராட்டப் பெறவும் புகழ்ப் பெறவும் தகுந்தவராக இருக்கவேண்டுமென்பது என் விருப்பம் என விடைகூறினார் இக்குழந்தையின் அன்னை இவரைத் தனது கர்ப்பத்தில் வைத்திருந்த காலத்தில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நபிமாரைச் சொற்பனத்தில் பார்ப்பதும கர்ப்பத்தில் இருக்கும் இச்சிசு பிற்காலத்தில் வரப்போகிற இறுதி நபியென்றும் இதற்கு அஹ்மது என நாமஞ் சூட்டவேண்டும் என்றும் கூறுவார்களாம். ஆதலால், அக்குழந்தையின் தாயாகிய ஆமினு தனது ஏகபுத்திரனாகிய முஹம்மதுக்கு அஹ்மது எனப் பெயரிட்டார் இவ்விதமாக இக்குழந்தைக்கு முகம்மது என்பதும் அஹ்மது என்பதும் இரு குறிப் பெயர்களாகவமைந்தன.

மக்காவிலுள்ள உயர்ந்த குடும்பத்தினரின் வழக்கத்திற்கேற்ப இக்குழந்தை பிறந்த எட்டாம்நாள் ஹலீமா என்ற பெண்ணிடம் பால்கொடுத்து வளர்க்க ஏற்பாடு செய்தனர். இப்பெண், இக்குழந்தையைத் தனது இருப்பிடத்திற்குக் கொண்டுபோய் அமுதூட்டி வளர்த்து ஒவ்வொரு ஆறுவது மாதந்தோறும் மக்காவுக்குக் கொண்டுவந்து தாயாரிடத்திலும், இதர பந்துக்களிடத்திலும் குழந்தையைக் காட்டிச் செல்வது வழக்கம். இவ்விதமாக இரண்டு வருஷம் செல்லவே குழந்தைக்குப் பால்கொடுப்பதை ஹலீமா நிறுத்தித் தாயாகிய ஆமினு வசம் குழந்தையை ஒப்புவித்தார். எனினும், குழந்தையின் வளர்ச்சிக்குக் கிராமத்தின் சீதோஷ்ண நிலைமை முற்றிலும் ஒத்ததாக இருந்ததால் கிராமத்திலேயே குழந்தை இருக்கட்டும் என்ற எண்ணத்தால் தாயாகிய ஆமினு தன் அருமைப் பாலகனை அதன் வளர்ப்புத் தாயாகிய ஹலீமா

இடத்தில் மறுபடியும் ஒப்புவித்தார். குழந்தைக்கு நடமாடுவதற்குத் தகுந்தபருவம் வந்தகாலத்து ஹலீமா இதனைத் தன்னுடன் காட்டிற்கழைத்துச் செல்வதுண்டு. ஒருநாள் ஹலீமாவின் இதர குழந்தைகளுடன் காட்டிற்குச் சென்றிருந்தகாலத்தில் தேவதூதர்களிருவர் மனித உருவிற்றோன்றி இக் குழந்தையைப் பிடித்து நெஞ்சைப் பிளந்து இருதய கமலத்தைச் சுத்தி செய்து மறுபடியும் முன்போல இருக்கச்செய்து விட்டேகினர். இவருடன் காட்டிற்குச் சென்ற ஹலீமாவின் மக்கள் தன் தாயாரிடம் ஓடிவந்து இரண்டுபேர் வந்து முகம்மதைக் கீழே தள்ளி நெஞ்சைப் பிளந்தனர் எனக் கூறினர். இதைக் கேட்டதும் ஹலீமா வருத்தமுற்றுப் பதறி ஓடிவந்தபோது நமது நபிகள் நாயகமவர்கள் எப்பொழுதுமுள்ளவரைப் போலிருக்கக் கண்டு சந்தோஷமடைந்து விஷயங்களை விசாரித்தார். அப்போது நாயகமவர்கள் உண்மை விபரங்களை யறிவிக்கவே இனி இக்குழந்தையை அவருடைய தாயாரிடம் ஒப்புவிப்பதே நலமெனக் கருதி மக்காவிற் கொண்டுவந்து விட்டேகினார். பின்னர், மக்கமாநகரில் தன் தாயாரின் போஷணையிலேயே நாயகமவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகையில் தமது ஆறாம் பிராயத்தில் அன்னையும் இவ்வுலக வாழ்வைத் துறந்தனர்.

இவரிறந்துபோகவே பெற்றோர்களில்லாத குழந்தையை வளர்க்கும் பொறுப்பைப் பாட்டனாராகிய அப்துல் முத்தலிபு ஏற்று, மிக அன்போடு ஆதரித்துப் போஷித்து வருங்காலையில் நபிகள் நாயகமவர்களுக்கு 8-வது வயது எய்திய சமயத்து இவரும் இறைவனடியிற் சேர்ந்தார். பின்னர், இவருடைய புத்திரர்களிலொருவரான அபூதாலிப் என்பவர் நபியவர்களை அன்புடன் ஆதரித்துப் போஷித்துவந்தார். நபிகள் நாயகமவர்கள் வாலிபப் பருவமடைந்தகாலத்து எல்லா வாலிபர்களிடமுங் காணப்பெறும் ஒழுக்கத்திற்கு விரோதமான காரியங்கள் எதையும் செய்யவில்லை. விளையாட்டுகளையும் வேடிக்கைகளையும் பார்க்கக் கூடச் செல்லுவதில்லை. நற்குண சீலராகவும், சிறந்த புத்திசாலியாகவும், உண்மையாளராகவும், வாக்குத்தத்தத்திற்கு மாறு செய்யாதவராகவும்;



ஏழைகளுக்கும், கஷ்டப்படுவோருக்கும் உபகாரஞ் செய்பவராகவும் இருந்தார்கள். ஆகலால், மக்காவிலுள்ள யாவரும் இவரைக் கொண்டாடியதுடன் உண்மையாளர் (ஸாதிக்) என்றும், நம்பிக்கைக்குரியவர் (அமீன்) என்றும் சிறப்பாய் அழைத்துவந்தனர். இவ்வாறாக, இவருடைய இருபத்தைந்தாம் வயதில் இவர் மக்காவிலுள்ள கதீஜா என்ற விதவைச் சீமாட்டியின் வேண்டுதலின் பேரில் கூட்டுவியாபாரத்திற்கிசைந்து பண உதவிபெற்று ஷாம் தேசத்திற்கு வியாபார நிமித்தமாகச் சென்றார்கள். நபியவர்களுடன் கதீஜாவின் அடிமைகளில் ஒருவரான பைஸரா என்பவரும் உடன் சென்றார். இப்பிரயாணத்தில நபியவர்களுக்கு நடந்த அநேக அற்புதங்களை அவ்வப்போது தவறாமல் கதீஜாவுக்கு அறிவித்துக்கொண்டே இருந்தார். இவைகளை எல்லாம் அறிந்த கதீஜா நபியவர்கள் வியாபாரத்திற்குச் சென்று திரும்ப வந்தவுடன் அவர்களைத் தமக்கு நாயகராக ஏற்றுக்கொள்ள விரும்பவே, நாயகமவர்கள் விவாகஞ் செய்துகொண்டார்கள்.

பின்பு, மக்காவிலுள்ள குறைஷிகள், கஃபா என்ற ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினார்கள். அவ்வாலயத்தின் சுவர்களில் ஹஜர் அஸ்வத் என்ற கருங்கல் ஒன்றிருந்தது. அக்கல்லை அரபிகளனைவரும் கௌரவித்துப் போற்றிவந்தனர். இப்பொழுது இந்தக்கல்லை முன்னிருந்ததுபோல் அதன் ஸ்தானத்தில் எடுத்து வைக்க வேண்டியதிருந்தது. மக்காவிலுள்ள குறைஷிக்குலத்துத் தலைவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கல்லை எடுத்துச் சுவரின்மீது வைக்கும் பெருமை தங்களுக்கே கிடைக்கவேண்டுமென விரும்பினர். ஆதலில், நாளையத்தினம் எல்லோருக்கும் முதலில் இவ்வாலயத்திற்கு எவர் வருகிறாரோ அவர் சொல்வதுபோல் மற்றவர்கள் நடந்துகொள்வது எனப் பஞ்சாயத்துச் செய்யப்பட்டது. மறுநாட் காலையில் எல்லோருக்கும் முதலில் நமது நபிகள் நாயகமவர்களே சென்றார்கள். இவர் ஏற்கனவே சற்குண சீலராகவும் மகாஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் இருந்ததால் இவருடைய கட்டளைப்படி நடக்க எல்லாக் குறைஷிகளும் இசைந்

தனர். நபிகள் நாயகமவர்கள் நுண்ணிய அறிவுடையவராதலால் தமது மேல் அங்கியைக் கீழே விரித்து, அக்கருங்கல்லை அதன்மீது வைத்து, குறைஷித் தலைவர்கள் யாவரையும் அவ்வங்கியைப் பிடித்துத் தூக்குமாறு கட்டளையிட்டார்கள். இவ்வாறு அவர்கள் யாவரும் ஒன்றுகூடித் தூக்கிய அக்கருங்கல்லை இவர்களுக்குப் பிரதிநிதியாக இருந்து சுவரின்மீது எடுத்துவைத்தார்கள். இதனால், குறைஷிகளுக்குள் ஏற்பட இருந்த பெருங்கலகம் நின்றது. குறைஷிகளும் இவர்களின் நுண்ணிய அறிவைக்கண்டு வியந்தனர்.

தேசத்தில் அமைதி, சமாதானம் முதலியவைகளை ஏற்படுத்துவதற்காக பல கோத்திரத்தினர்களைக்கொண்டதொரு சங்கத்தை நிறுவினர். இச்சங்கத்தின் அங்கத்தினராகுவோர், தேசத்திலுள்ள அமைதியின்மை, குழப்பம் முதலியவைகளை அடக்குவதாகவும், வழிப்போக்கர்களைப் பாதுகாப்பதாகவும், ஏழைகளுக்கு உதவுவதாகவும், எளியாரை வலியார் வாட்டாமற் றடுப்பதாகவும் வாக்குறுதி செய்யவேண்டும். இச்சங்கத்தினால் தேசத்தில் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்த கலகங்களும் குழப்பங்களும் நின்றதுடன் பிரயாணிகள் பயமில்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லவும் வசதி ஏற்பட்டது.

நபிகள் நாயகமவர்களுக்கு இறைவனின் தூதர் என்ற பட்டம் கிடைக்கும் காலம் சமீபித்த சமயத்தில், அவர்களுக்கு தனித்திருந்து யோக நிஷ்டைகள் செய்யும் வழக்கம், நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டிருந்தது. நகருக்கு வெளியில் சில மைல்தூரத்திற்கப்பால் ஒரு குகை இருந்தது. அதற்கு ஹிரு மலைக்குகை என்று பெயர். இரண்டு மூன்று நாட்களுக்குப் போதுமான உணவுகளையும் தண்ணீரையும் எடுத்துக்கொண்டு இக்குகைக்கு வந்து இறைவனை வணங்குவது வழக்கம். இவ்வ திருக்குங் காலத்தில் நபிகள் நாயகமவர்கள் சொற்பனங்கள் கா வதுண்டு. அவர் நித்திரையில் எவ்விதமாகக் கண்டாரோ அவ்வி தமாகப் பகலில் பிரத்தியக்ஷமாக நடந்துவந்தது. இவ்விதமா நாயகமவர்களுக்கு 40-வயது பூர்த்தியாகி 41-வது வயது ஆரம்



மான் முதற்றினத்தில் அதாவது கி. பி. 12—2—610 திங்கட்கிழமைத் தினத்தில் ஜிப்ராயீல் என்ற தேவதூதர் இறைவனின் உத்தரவுப் பிரகாரம் நபித்துவம் என்ற பட்டத்தைக் கொண்டு வந்தார். அப்பொழுது நாயகமவர்கள் ஹிருமலைக் குகையில் இருந்தார்கள். பின்பு, நாயகமவர்கள் மலைக்குகையிலிருந்து வீட்டிற்கு வந்து போர்வையைப் போர்த்திக்கொண்டதுடன். தனது வாழ்க்கைத் துணைவியை அழைத்து விஷயங்களைக் கூறி 'என்னுடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்' என்றார்கள். அதற்கவர், தக்கவாறு தேறுதலுரைத்ததுடன், விவிலிய நூல்களிற் சிறந்த மேதாவியாக இருந்த, தமது சிறிய தந்தையின் புதல்வரான வரகத்துப்னு நௌபல் என்ற வயோதிகரிடம் நாயகமவர்களை அழைத்துச் சென்று நடந்த விஷயங்களை விளம்பினர். இவைகளைக் கவனமாகக் கேட்ட வரகத்துப்னு நௌபல், (இவர்தான் மூஸா (மோசஸ்) முதலிய நபிமார்களிடம் வந்த தேவதூதராகிய றூஹுல் அமீன்) (பரிசுத்த கவி). உங்களை, ஜனங்கள் ஊரைவிட்டு வெளிப்படுத்தும்வரை நான் உயிருடன் இருந்து உங்களுக்கு வேண்டிய ஊழியஞ் செய்யவேண்டியதிருந்ததே எனக் கூறிவிட்டுச் சில தினங்களுக்குப் பின், இவர் இறந்துபோனார். இதிலிருந்து முன்னர்வந்த ஜிப்ராயீல் என்ற தேவதூதர் அவசியம் நேரும்போதெல்லாம் அவசியத்திற்குத் தகுந்த அளவு, இறைவனின் திருவேதமாகிய திருகர்ஆனின் வசனங்களை அறிவித்துச் செல்வார். நபிகள் நாயகமவர்களும் இறைவனின் கட்டளைப் பிரகாரம் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். முதல் முதலாகப் பெண்களில் கதீஜாவும், ஆடவர்களில் அபூபக்கர் ஸித்தீக்கும், பாலியர்களில் அலியும், அடிமைகளில் பிலாலும், அடிமையாக இருந்து விடுதலை பெற்றவர்களில் ஸைதுப்னுஹாரிதாவும் இஸ்லாம் மதத்திற் சேர்ந்தார்கள். இவ்வாறாக மூன்று வருஷகாலம் வரை இரகசியமாக இஸ்லாம் மதப் பிரசாரம் நடந்தது. பின்னர், பகிரங்கமாக மதப்பிரசாரம் செய்யுமாறு இறைவனின் கட்டளை வரவே இஸ்லாம் மதத்தைப் பகிரங்கமாகப் பிரசாரஞ் செய்ய ஆரம்பித்தனர். இஸ்லாம் மதவிரோதிகளும் இடைஞ்

சல்களை உண்டுபண்ணத் தொடங்கினர். இன்னல்களை இவர்கள் செய்த விபரமாக எழுதுவதென்றால் இவ் வியாசம் ஒரு பெரும் புத்தகமாக மாறிவிடும் ஆதலால் இவைகளை எழுதாமல் விடுத்தேன். எனினும், இவர்கள் தங்களாலான எல்லாக் கெடுதிகளையுஞ் செய்தனர் நபிகள் நாயகமவர்களையும் அவர்களின் குடும்பத்தினராகிய பனுஹாஷிம்களையும் மூன்று வருஷகாலம்வரை பந்தோபஸ்தில் வைத்தனர். இறுதியில் நாயகமவர்களின் அனுமதி பெற்றுச் சில முஸ்லீம்கள் அபிசினியா நாட்டிற்குச் சென்றார்கள். மக்கத்துக் குறைஷிகள் இந்நாட்டிலும் இவர்களை இருக்கவிடாமற் றொந்தரைசெய்ய முயன்றனர். எனினும், அபிசினியா நாட்டரசர் இவர்களின் துர்ப்போதனையைக் கவனியாமல் முஸ்லிம்களுக்கு அபயங்கொடுத்தார்.

பின்னர் மதீனாவிலிருந்து மக்காவுக்கு ஹஜ்ஜு யாத்திரை வந்த சில அறிஞர்கள், நாயகமவர்களைக் கண்டு இஸ்லாம் மதந்தழுவியதுடன் தங்கள் ஊராகிய மதீனாவுக்கு முஸ்லீம்களும் நபிகள் நாயகமவர்களும் வந்தால் தங்களாலான சகல உதவிகளையுஞ் செய்வதாக வாக்குறுதி கூறியதன்பேரில் நபிகள் நாயகமவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யத் தீர்மானித்து முஸ்லீம்களிற் பெரும்பான்மையினரை மதீனாவுக்கு முதலில் அனுப்பினார்கள். பின்னர் கி. பி. 12—12—621 ல் மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். இவர்களுடன் அபூபக்கர் ஸித்தீக் மாத்திரம் சென்றார். இவ்விதமாக முஸ்லீம்கள் மதீனாவுக்கு வந்துவிட்டனர். ஆயினும், இஸ்லாம் மதவிரோதிகள் இவர்களை விட்டுவிடவில்லை. மதீனா வாசிகளைப் பயமுறுத்தினர். அவர்கள் இவர்களின் மிரட்டல்களுக்கஞ்சாததால் யுத்தஞ் செய்யத் தொடங்கி ஹிஜ்ரீ 2-ம் வருஷத்தில் மதீனாவின்மீது படையெடுத்துச் சென்றனர். பகைவர்கள் படையெடுத்து வருவதை நாயகமவர்கள் அறிந்து மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்குச் சென்ற முஸ்லீம்களும், மதீனாவிலேயே பூர்வீகமாகக் குடியாக இருந்த முஸ்லீம்களுமாகக் கூடி 313 பேர்கள் திரளாகக்கூடி இவர்களை எதிர்த்து முன்னேறிவந்தனர். கடைசியாக பத்ரு என்ற ஸ்தலத்தில் இருதிறத்தினரும்



யுத்தஞ் செய்தனர். குறைஷிகளுக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டது. மக்கத்துக் குறைஷிகளின் தலைவர்களிலும் பிரபலஸ்தர்களிலுமாக 70 பேர் கொல்லப்பட்டதுடன் 70 பேர்கள் கைதிகளுமாயினர்.

இந்த யுத்தத்தில் குறைஷிகள் தோல்வியடைந்ததால் பழிவாங்கத் தீர்மானித்து யுத்தத்திற்காக மறுபடியும் ஆயத்தமானார்கள். இதரர்களையும் விரோதமாகத் தூண்டிவிட்டனர். இதனால், முஸ்லிம்கள் அடிக்கடி யுத்தஞ்செய்ய வேண்டியதாயிற்று. இறுதியாக ஹிஜ்ரீ 6-ம் வருஷத்தில் குறைஷிகளுக்கும் நபிகள் நாயகமவர்களுக்கும் ஹுதைபிய்யா என்ற ஸ்தலத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இந்தச் சமாதான உடன்படிக்கைக்குப் பின் நாயகமவர்கள் அந்நியதேசத்தார்களுக்கும் இதரர்களுக்கும் இஸ்லாம் மதப்பிரசாரஞ் செய்யத் தொடங்கினார்கள் சமாதானமேற்பட்டபின் மக்காவிலுள்ளவர்களில் அநேகர் இஸ்லாம் மதத்திற் சேர்ந்தார்கள். இதனால், நபிகள் நாயகமவர்களுக்கு நபித்துவம் கிடைத்ததிலிருந்து சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதுவரை கடந்த 18 வருஷகாலங்களில் எத்தனைபேர் இஸ்லாமதத்திற் சேர்ந்தார்களோ அதைப்பார்க்கிலும் இரண்டுமடங்கு அதிகமாகச் சமாதானம் ஏற்பட்ட இரண்டு வருஷ காலத்தில் இஸ்லாம் மதத்திற் சேர்ந்தனர். பின்னர், குறைஷிகள் தங்கள் உடன்படிக்கையை மீறி முஸ்லீம்களைக் கொலை செய்வித்ததால் நாயகமவர்கள் ஹிஜ்ரீ 8-ம் வருஷத்தில் மக்காவின்மீது படையெடுத்து எவ்வித யுத்தமுமில்லாமல் அதைக் கைப்பற்றினார்கள். இதிலிருந்து குறைஷிகளால் எவ்வித தொந்தரையும் ஏற்படவில்லை எனினும், யூதர்கள் யுத்தஞ்செய்ய ஆரம்பித்துவிட்டனர். இதனால் பல யுத்தங்கள் செய்யவேண்டியதாயிற்று. கடைசியாக யூதர்களும் அடக்கப்பட்டனர். ஹிஜ்ரீ 11-வது வருஷம் ரபீஉல் அவ்வல் மீ 12உ அதாவது கி. பி. 11—6—632 ல் திங்கட்கிழமையன்று இவ்வுலகைவிட்டு மறைந்தார்கள். நாயகமவர்கள் தமது ஜீவியகாலத்திலேயே தாம் செய்யத்தொடங்கிய ஜனசமூக ஊழியத்தையும் தெய்வத் தொண்டையும் பரிபூரணமாகச் செய்து பூரண வெற்றி பெற்றது உலகம் உள்ளளவும் நிலைத்துநிற்கிறது.

———

# நல்லன கொள்ளல்.

திரு. வீ. மு. பொன்னையா அவர்கள்.

"நல்லன" எனின், என்னை என்பது பற்றி அறிஞர்க்குச் சிறியேன் எதுவுங் கூறவேண்டுவதின்று. இவ்வழகிய உலகிடை, மாந்தர் என்பார் ஏன் பிறந்தார்? நல்லன செய்தற்கும் கொள்ளற்குமே யென்று சொல்லவும் வேண்டுங்கொல்! ஒருவன் அன்றி ஒருத்தி அறவினை நிகழ்த்தி யிருப்பனேல் அல்லது இருப்பளேல், அவனை அன்றி அவளை உலகம் எங்ஙனம் அழைக்கிறது? என்பது உன்னற்பாற்று. 'நல்லவன்'—'நல்லவள்' என்ற அழகு மிளிரும் சொல்லாலன்றோ அழைக்கிறது! 'நல்லவன்', 'நல்லவள்' எனும் அரும் பேற்றைப் பெற விரும்பல் அறிவுடை மக்கள் ஒவ்வொருவரதும் சிறந்த கடன் என்பது மிகை யாகா.

'நல்லன' யாண்டுள்ளன? ஈண்டுண்டு; ஆண்டில்லை எனும் நியதியின்றிப் பாரின் எப்பாங்கரினும் திகழ்கின்றன என்று யான் நுவலல் அநாவசியம். தரணியின்கண் 'நல்லன' இல்லா விடமுண்டோ? 'நல்லன' கொண்டே வையம் இயங்கி வருகிறது என்பது தவறாகாது. "கீழ் மகன்" எனக் கிளத்தப்படுவோனிடத்தும் 'நல்லன' உள்ளன. "மேல் மகன்" என்று கூறப்படுவானிடத்தும் அவை உள. 'நல்லன' கொண்டுள்ளோன் "கீழ் மகன்" என்று சொல்லப்படுவோனிடத்து இருப்பினும் இருக்க; "மேல் மகன்" எனப் பேசப்படுவோனிடத்து இருப்பினும் இருக்க. நம் நாட்டவனிடத்தே யிருப்பினும் இருக்க; அயல் நாட்டானிடத்து இருப்பினும் இருக்க. எச்சமயம், (மதம்) எந்



நிறம், எச் குலமுடையவரிடத்து இருப்பினும் இருக்க. அவனிடத்தில் 'நல்லன' உளவேல் இன்னே கொள்ளல் அறிவுளாரின் தலையாய கடன் என்பதே சாலும்.

"கடனென்ப நல்லவை எல்லாம்" என அறைந்து போந்த அறிஞர் பாரதியாரின் சீரிய உரை ஆராய்தற் குரியது. மக்கள் யாக்கை படைக்கப் பட்டதின் நோக்கம் "நல்லன" கோடற்கும் செய்தற்குமே என மறு முறையும் வலியுறுத்துக் கூறுவன். ஒருவனோ, அல்லால் ஒருத்தியோ 'நல்லன' புரியாதும் கொள்ளாதும் இருப்பதிலும் இறத்தல் நலம் என்பது எனது கருத்தாகும்.

நமது நோக்கம் 'நல்லன' ஒன்றிலேயே இருக்கப் பெறல் வேண்டுமே யன்றி, பிற சாதனங்களில் இருத்தல் தவறாகும். சூதாடும் ஒருவனிடம் 'நல்லன' இருப்பினும் அந் 'நல்லன' வற்றை ஏற்கத் தயங்குதல் கூடாது. சூதாடுவோனா யிருப்பின் என்? அன்னானிடமுள்ள 'நல்லன' வற்றைக் கொள்ளலால் உண்டாம் பிழை என்னை? 'நல்லன' யாண்டு இருந்த போழ்தினும் அவற்றை நன்காய்ந்து பெற்றுக்கொள்ளலே மக்கள் கடமையாகும். கருத்து, 'நல்லன' நாடுதலிலேயே இருக்க வேண்டுமே யல்லாது அவ்விடம் "உயர்ந்ததா?" "தாழ்ந்ததா?" "நம் நாடா?" "பிற நாடா?" "நம் மதமா?" "பிற சமயமா?" "நம் மரபா?" "பிற மரபா?" என்பன போன்ற அறிவிலா ஆராய்ச்சியில் நுழைதல் அறியாமை யாகும் அறியாமை யாகும் என அநேகமுறை கூறத் தயங்கேன்.

இற்றைப் போழ்து நம் நாடு, 'நல்லன' இவை, 'நலமல்லாதன' இவை என்ற வேற்றுமையை அறியாது உழன்று வரல் அறிஞர் அறிந்த தொன்று. அறிவின்மையின் காரணம் "ஆராய்ச்சி"த் திறன் இறந்தமையே யாம். ஆராய்ச்சியிற் சிறந்துள்ள ஒருவனோ—ஒருத்தியோ தத்தம் அகக் கண்களால் 'நல்லன' இவை, "அல்லாதன" இவை என்பனவற்றைப் பிறர் துணையின்றி மிக எளிதில் உணர்தற் கியலும். ஆராய்ச்சியின் இறுதியே நல்லன என்பது சிறியேனது அநுபவம்.

ஆராய்ச்சியின்றிப் பரம்பரை வழக்கமாகவோ, பிறர்கொள்கை கருதியோ, எதினும் உறுதி பூணுதல் அறனன்று. அவ்வாறு கொள்வார்க்கு உண்மை புலனாதல் அரிது. நடைமுறையில் பலரைப் பார்க்கிறோம். எதையேனும் சரியாகவோ, தவறாகவோ உண்மையென நம்பி விடுகிறார்கள். அப் பொருளின் தன்மையை யாரும் விளக்கின் செவிமடுத்துக் கேட்கவும் அஞ்சுகிறார். அவற்றை உளத்தில் வாங்குகிறாரில்லை; ஆராய்கிறாரில்லை. தாம் ஒரு சிறிதும் ஆராயாது உறுதி கொண்டிருக்கும் அக் கொள்கையை ஆராய்ச்சியோடு மறுப்பாரைக் காய்கிறார்! அதைப்பற்றிச் சிந்திக்க ஒருப்படுகிறாரில்லை!! இறுதி வரை நன்மை தீமை அறிந்துகொள்ளாராகி விடுகிறார்!!! இந் நிலையுள்ள பல்லோர் சிறப்பாய் நம் நாட்டில் வதிந்து வருவதை யான் காணும் பேறு பெற்றிருக்கின்றேன்! இயற்கை ஈந்த பகுத்தறிவை—ஆராய்ச்சியை நடைமுறையில் கையாண்டு தத்தம் அறிவால் 'நல்லன' கண்டு நலம் பெறுமாறு எல்லோரையும் பன்முறை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

எவர் எதைக் கூறினும் அன்புடன்—அமைதியுடன் செவி கொடுத்துக் கேட்கப் பின் வாங்குதல் அறியாமையாகும். தங் கருத்துக்கு மாறாக எவர் என்ன கூறினும் என்னை? அவர் கூறியதை நடு நிலை நின்று ஆராய்ந்து அவர் கூறியவற்றுள் 'நல்லன' உளவேற் கொள்ளல் வேண்டும்; 'தீயன' உளவேல் தள்ளல் வேண்டும். நம் நாட்டவர்க்கு—முக்கியமாய் எனது சகோதரத் தமிழர்கட்கு இவ்வுயரிய கருத்து அரும்புதல் வேண்டும். ஓர் நாடோ சமூகமோ மொழியோ பிறவோ முன்னேற்ற முறல் வேண்டுமானால், முதன்முதல் அவர்க்கு 'நல்லன' கொள்ளலில் சிறிதும் கருத்து வேற்றுமை யாதல், வெறுப்பாதல் இருத்தல் கூடாது. பிற நாட்டவரிடம் உள்ள 'நல்லன' வற்றை எல்லாம் உடனே கைக்கொள்ளல் வேண்டும்.

சமத்வம், சகோதரத்வம், ஒற்றுமை, பெண்ணினத்தைச் சமமாக நடாத்துதல், சுத்தமுடைமை, தாய் மொழிப் பற்று, குறித்த காலந் தவறாது கருமத்தை ஆற்றும் இயல்புடைமை, உடல் பேணல், வாழ்க்கைக்கு ஊறுவிளைக்கும் பழையனவற்றை அழித்தல், தேச பக்தி, புதினம் போற்றல் போன்ற பலவற்றில் நாம்



மேனாட்டாரைப் பின் பற்ற வேண்டுவது நலன் விளைவதாகும் என்று யான் இயம்புவேன். ஒன்று 'நல்லது' என்று தோன்றிய பின்னர், அதை இன்னே பின்பற்றாது வாளாவிருத்தல் நன்றன்று; அறிவுடைமையு மன்று. "நம்முடையது" "பிறருடையது" என்ற வேற்றுமைச் சேற்றில் உழலல் அறிவுடைமை யாகா; நலம் பெறும் வழியுமாகா.

நம் நாட்டில் இது போது பல 'தீயன' குடிகொண்டிருப்பதை ஆராய்ச்சியுடைய அறிஞர் அனைவரும் அறிந்தே யிருக்கிறார். நம்மிடையே செறிந்துள்ள 'தீயன' வற்றைக் குறித்துத் தனித் தனியாக விரித்துரைக்கப் புகின் இக் கட்டுரை ஓர் பெரிய நூலாகிவிடு மென அஞ்சி இரண்டொன்றை மட்டும் எடுத்துக் காட்டுகின்றேன். தீண்டாமை, வர்ணாச்சிரமம், பெண்ணை இழிவாக எண்ணி நடாத்தல், இளமை மணம், கைம்மை மணத்தை எதிர்த்தல், பண்டைப் பெருமையை வீணாகப் பகரல், மூட நம்பிக்கைகள், சடங்குகள், பலியிடல், இறைவன் பேரால் பல வீண் விழாக்கள் நடாத்தல், வைதீகம், சாதிக் கோட்பாடுகள், சமயப் பூசல்கள் இன்னோரன்ன பல 'தீயன' நம்மிடம் இருந்து வருகின்றன. ஈண்டுச் சில அன்பர் 'நல்லன' குறித்துக் கூறாது 'தீயன' பற்றிக் கூறல் நலனா? என வினவலாம். எளியேனது கருத்து, 'தீயன' அழியின் 'நல்லன' தாமாகவே மிளிரும் என்பதே யாகும். ஆகவே, இற்றை ஞான்று நம்மிடம் இயங்கி நல் வாழ்க்கைக்கு மறஞ்செய்து வருகின்ற 'தீயன' வற்றை அழிக்க மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எழுந்து பணியாற்றுமாறு விழைகிறேன்.

எவ்வுயிர்க்கும் அன்பா யிருத்தல், பொதுவாக உலக மக்கள் விடுதலையைக் கோரி உழைத்தல், அஞ்சாமை, சுதந்தரம் பெற விரும்பல், எளிய வாழ்வோம்பல், தியாகியாக வாழ்தல், இல்லறத்தை வளர்த்தல் ஆகிய 'நல்லன' வற்றை உலகெங்கணும் பரப்பல் வேண்டும். முக்கியமாக 'தீயன' வற்றை இன்னே அழிக்கப் பின் வாங்காது எழுதல் நலன் விளையும். 'தீயன' முற்றிலும் அழிந்துபோயின் 'நல்லன' அனைத்தும் எவர் உதவியுமின்றி எழும்பிவிடும் என்பது துணிபு. 'நல்லன' பெறு முதல் வழி 'ஆராய்ச்சி' பெறுதலே. எனவே, அன்பர் அனைவரும் 'ஆராய்ச்சி'யை வளர்க்க முன் வந்து விரைவில் 'நல்லன' பெற்று நலம் பெறுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

# ஆரம்ப ஆசிரியர்கள்.

ஸ்ரீமான் A. ராமஸ்வாமி அவர்கள்.

தேச முன்னேற்றத்திற்கு ஆரம்ப ஆசிரியர்களின் உதவி மிகவும் அவசியமானது. ஆரம்பாசிரியர்கள் நாட்டின் எதிர்கால அமைப்பிற்கு ஆதாரமானவர்களாயிருக்கின்றனர். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது போலச் சிறுவயதில் எவரெவர்கள் எவ்வெப் பழக்கமுடையவர்களாயிருக்கின்றனரோ அவ்வப் பழக்கமே பிற்கால வாழ்க்கையில் அவர்களுக்குச் சாதகமாயிருக்கின்றன. ஆகவே, தேசத்தின் எதிர்கால அமைப்பு, சிறுவர்களின் ஆரம்பப் பழக்க வழக்கங்களின் பேரிலேயே நிறுவப் பெறுகின்றது. ஆகையால், சிறுவர்கள் இளம்பிராயத்திலேயே நல்ல மனோதைரியமும் ஊக்கமும் உற்சாகமும் தேகவலிமையும் உடையவர்களாகப் பயிற்சி பெறவேண்டும். அவ்வாறு சிறுவர்கள் பழக்கமடைவதற்கு ஆரம்பாசிரியர்களே மூல காரணமாயிருக்கின்றனர்.

இளைஞர்களின் அறிவு பளிங்குபோலத் தெளிவானது. அந்தத் தெளிவான புத்தியில் பதியும் விஷயங்கள்தான் நீடித்துப் பிற்கால வாழ்க்கையில் பயன்படும். அதனால்தான் சிறுவர்கள் தம் சிறுவயதிலேயே கல்வி பயில வேண்டுமென்னும் நிபந்தனையும், கல்வி பயிற்றும் ஆசிரியரும் நற்குணம், நன்னடத்தை, தூய்மை முதலிய நல்லொழுக்கங்களோடு கூடியவராயிருத்தல் வேண்டுமென்ற நிபந்தனையும் பண்டைக் காலந்தொட்டு ஏற்பட்டிருக்கின்றன.



## முற்காலம்

பண்டைக் காலத்தில் ஆரம்பாசிரியர்கள், ஆரம்பாசிரியர்களாக மாத்திரமிராமல் பேராசிரியராகவும், பின்னும் ஞானாசிரியராகவும் இருந்திருக்கின்றனர். எனவே பால் மணம் மறந்த பாலர் முதல் முத்தியை விரும்பும் முதியோர் வரையிலுள்ள எல்லோரும் விரும்பத்தக்க கல்வியைப் போதித்துக் கொண்டிருந்தனர் என்பதாம். அக்காலத்தில் கல்வி பயிலும் இடம் முறை முதலியவற்றிற்கும், இக் காலத்தில் கல்வி பயிலும் இடம் முறை முதலியவற்றிற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. முற்காலத்தில் கல்வி பயிலுவதற்கென்று பெரிய பெரிய சாலைகள் (கட்டிடங்கள்) கிடையா. மான் மயில் குயில் முயல் அன்னம் முதலான சாது ஜந்துக்கள் கூடிக் குலாவி விளையாடக் கூடியதாயும், மல்லிகை இருவாட்சி சம்பங்கி முதலான மணம் நிறைந்த மலர்களின் வாசனை வீசக் கூடியதாயும், மற்றும் பல இயற்கை வனப்புகள் மிகுந்ததாயுமுள்ள அழகிய வனங்களினிடையே இலைகளால் மூடப்பெற்ற ஆசிரியர்களின் வீடு (ஆஸ்ரமம்) களுக்கருகில் உயர்ந்து தழைத்து மெல்லிய காற்று வீசத்தக்க மரங்களின் நிழல்களில் அமர்ந்து கல்விபயின்று வருவாராயினர். இக்காலத்திலுள்ளதைப் போன்ற, பிராமணர் உயர்வு மற்றவர் தாழ்வு என்ற குருட்டுத் தனமானதும், பொருளற்றதுமான வழக்கம் அக்காலத்தில்லாதபடியால், ஆசிரியர் எவராயிருப்பினும், மாணவர்கள் எத்தன்மையவராயிருப்பினும் ஜாதிபேதமும், ஏழை பணக்கார பேதமும் இன்றி மாணவரனைவரும் ஆசிரியருக்கேற்ற பணிவிடைகளைச் செய்துகொண்டும், அவரில்லத்திலேயே உணவை யுட்கொண்டும், பெற்றோர், உற்றோர் முதலானவர்களைச் சிந்தியாமல் ஆசிரியரே தாயும் தந்தையும் பந்துவுமென அபிமானங்கொண்டு தாம் பயில வேண்டிய கல்வி யனைத்தும் பயின்று இறுதியில் ஆசிரியருடைய ஆசி பெற்று குரு காணிக்கையாகத் தம்மாலியன்றதைச் செலுத்தித் தம் நகர்க்குத் திரும்புவர்.

ஆசிரியரும் தம்மிடம் பயிலும் மாணவர்களைத் தம்முடைய மக்களே எனக் கருதி அவர்களுடைய உடல் நலம் முதலானவற்றை நன்கு கவனித்துப் போஷித்து வருவர். இவ்வாறு அரசிளங் குமரர் முதல் ஏழைச் சிறுவர்கள் வரையில் ஓராசிரியரிடத்துப் பயில்வர். அவ்வாசிரியர்கள் தமது மாணவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பிப்பது மாத்திரமன்றி, அவ்வம் மாணவர்களின் குல நலத்திற் கேற்றவாறு அவர்களின் பிற்கால வாழ்விற்கு இன்றியமையாததான தொழில்களைக் கற்பித்து வருவாராயினர். இந்த ஆசிரியர்களின் பெருமைகளையும், அருங்குணங்களையும் கவனித்து அரசர்களும், பெருஞ் செல்வர்களும் அவ்வப்போது வேண்டிய வளவு பொருள்களை அன்போடு அளித்து வந்தனர். அவ்வாசிரியர்கள் தம்மிடத்திற் பயிலும் மாணவர்களுக்கு உலகியலுக்கு வேண்டிய கல்வியறிவைப் புகட்டி வந்ததுடன், உலகியலுக்கு அப்பாற்பட்ட ஆன்மார்த்தமான கல்வியையுங்கூடப் போதித்து வந்தனர். அதனால், அவ்வாசிரியரிடத்திற் பயிலும் மாணவர்கள் அக்கால வழக்கப்படி உலகியலாகிய இல்லறத்தைக் குறிப்பிட்ட காலம் வரையில் நன்கு நடத்திப் பின்னர் மற்றொரு ஆசிரியரையோ, இருஷியையோ எதிர்பாராமல் வானப் பிரஸ்த ஆஸ்சிரமத்தைக் கைக்கொண்டு புலன்களை யொடுக்கி இறைவனடிகளில் மதியைச் செலுத்தி இன்புற்றுத் திகழவும் தகுதி யுடையோராயிருந்தனர். ஆசிரியரிடத்திலேயே வசித்து, ஆசிரியருடைய அன்னத்தையே புசித்து, ஆசிரியருக்கே பணிவிடைபுரிந்து, அவரிடத்திற் கல்வி பயின்று வருங்காலத்தைக் குருகுல வாசம் என்று நம் முன்னோர் வழங்கிவந்தனர்.

இந்தப் பழைய வழக்கத்தின் மேன்மையை யுன்னியே ஆரிய சமாஜத்தினர் இந்நாட்டில் பல குரு குலாச்சிரமங்களை நிறுவி யிருக்கின்றனர்.

## பிற்காலம்

பிற்காலத்தில் ஆரம்பாசிரியர்களின் நிலை சிறிது மாறுபடலாயிற்றென்று கூறவேண்டும். பிற்காலத்திய ஆரம்பாசிரியர்கள், காடு



களினிடையே வசிப்பதை விட்டு நகரங்களில் மற்றவரோடு கூடி வசித்துவருவாராயினர். அவர்களிடம் பயிலும் மாணவர்களும் குருகுலவாசம் செய்வதின்றி தத்தம் பெற்றோராதரவில் இருந்துகொண்டு ஆசிரியரிடத்துக் கல்வி மட்டிலும் பயின்று வருவாராயினர். மேலும் போதிக்கும் பாடங்களும் அவ்வாறே மாறுபடலாயின. பண்டைக் காலத்தைப் போன்று அந்தணர்க்கும், அரசருக்கும், வணிகருக்கும் உரிய கல்விகளையும் போதிக்கும் வழக்கம் நின்றுவிட்டது. மேலும் இக் காலத்தில் அருத்தமற்ற ஜாதி பேதங்களும் பெரும்பாலும் தலைவிரித்துத் தாண்டவமாடத் தொடங்கிவிட்டன. பண்டைக் காலத்தைப் போன்று இயற்கை வனப்புக்கள் மிகுந்த வனங்களினிடையே யிருந்து கல்வி கற்பிக்காவிட்டாலும், சில குறிப்பிட்ட நாட்களில் இயற்கை வனப்புக்களைக் காண, நகரத்தின் வெளிப்புறங்களுக்கு ஆசிரியர் மாணவர்களை யழைத்தேகுவதுண்டு.

இந்தப் பிற்காலத் தாசிரியர்கள் தேச பாஷைகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனரென்று கூறவேண்டும். அவர்களுக்கு எல்லா விஷயங்களும் மனப்பாடமே யன்றி புத்தகப் பாடமாக விருப்பதில்லை. சாதாரணமாக எழுத்துக்களைப் பழகி இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றுக் காவியங்களைப் பரிசோதிக்கும் சக்தியும், புதிதாக நூல் எழுதும் திறமையும் பெறும் வரையில்கூட மாணவர்கள் அவ்வாசிரியரிடத்திற் பயிலுவதுண்டு. ஆனால் பண்டைக் காலத்தில் வான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், தருக்க சாஸ்திரம் முதலிய பெரும் படித்தான நூல்களையும் போதித்து வந்தனர். அங்ஙனமின்றி பிற்காலத் தாசிரியர்கள் அந் நூல்களைப் பெரிதும் நழுவவிட்டனராயினும், மொழி வளர்ச்சிக்குரிய பல அரிய காரியங்களைச் செய்து வந்தனரென்பதை, மறுக்கமுடியாத பல அரிய நூல்களுக்கு உரை கண்டும், பல இலக்கண, இலக்கிய நூல்களைப் புதிதாக உண்டாக்கியும் இருப்பதால் உணர்கிறோம். இவ்வளவு உயர்ந்த கல்வியாளர்களை இக் காலத்தில் பண்டிதரென்றும், வித்வான் என்றும், நூலாசிரியரென்றும் பல பெரிய பெயர்களால் புகழுவாரே யன்றி எழுத்துக்களைச் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் ஆரம்ப ஆசிரியர்கள்

எனக் கூற முற்படமாட்டார்கள். ஆனால் அவ்வளவு பெரிய புலமை வாய்ந்த ஆசிரியர்கள்—அரசர் மெச்சத் தகுந்த கல்வியறிவு அமையப் பெற்ற ஆசிரியர்கள் ஆரம்ப ஆசிரியர்களாகவே இருந்திருக்கிறார்கள். காரணமென்னவெனில் அக் காலத்தில் கல்வியை நாட்டில் பரப்ப வேண்டுமென்ற எண்ணம் மிகுதியும் உடையவர்களாகி ஆசிரியர் தாமாகவே தம்மிடம் கூடிய மாணவர்களுக்கு எழுத்து முதல் எல்லாவற்றையும் கற்பித்துக் கொடுத்து அதன் மூலமாக வரும் ஊதியத்தினால் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருந்ததும், கல்வியை முன்னிட்டு அரசாங்கத்தார், நாட்டில் ஒரு பாடசாலையோ, வேறொரு ஸ்தாபனமோ ஏற்படுத்தாமலுமிருந்ததுமே யெனக் கூறவேண்டும்.

அவ்வாசிரியர்கள் மொழி வளர்ச்சியில் மட்டுமின்றி வைத்தியம், சோதிடம், கணிதம் முதலிய கலைகளிலும் நல்ல அனுபவமுடையவர்களாயிருந்தனர். அக் காலத்தில் ஆசிரியரென்றால் உள்நாட்டிலுள்ள பலரும் பற்பல நல்ல விஷயங்களில் ஆசிரியராகவேயிருந்தனர். மேலும் தம்மிடம் பயிலும் மாணவர்களில் எந்தெந்த மாணவருக்கு எந்தெந்த வகையில் எந்தெந்தப் பாடத்தைப் போதிக்க வேண்டுமோ அந்தந்த மாணவருக்கு அந்தந்தப் பாடத்தை அந்தந்த வகையில் போதித்து வந்தனர். இந்தத் தன்மையைக் கவனித்தே நன்னூலாசிரியராகிய பவணந்தி முனிவர் தாம் வரையப் புகுந்த நன்னூலில் ஆசிரியருடைய சிறப்பைக் கூறுமிடத்து,

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே."

எனப் புகழ்ந்து ஆசிரியருடைய பெருமையை நன்கு விளக்கியுள்ளார்.



## தற்காலம்

தற்காலத்தில் ஆரம்பாசிரியர்களின் நிலைமை அவ்வளவு சிறந்ததெனக் கூறுவதற்கியலாது. ஏனெனில், தற்காலக் கல்வி முறையில் ஆசிரியர்கள் மூன்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விட்டனர். ஆகையால், கல்வியின் அமைப்புக்கேற்றவாறு ஆசிரியர்களின் அமைப்பும் ஏற்படவேண்டியதாயிற்று. சாதாரணமாக எழுதப் படிக்க மாத்திரம் கற்பிக்கக் கூடியவர்களை ஆரம்பாசிரியர்களென்றும், சாஸ்திரப் பயிற்சிக்கு அடிப்படையான விஷயங்கள் கற்பிக்கக் கூடியவர்களை நடுத்தர உயர்தர ஆசிரியர்களென்றும், வான சாஸ்திரம் கணித சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பிக்கக் கூடியவர்களைக் கலாசாலை ஆசிரியர்களென்றும் தற்காலக் கல்வி முறையமைப்பில் ஆசிரியர்களாய் அமைக்கப் பெற்றுள்ளார்கள். மேலும் தேச பாஷைகளுக்குக் கொடுக்கும் மதிப்பைவிட அயல் நாட்டு மொழிகளுக்கே அதிக மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும், அந்த மொழிகளில் உள்ள சாஸ்திரங்களையே மாணவர்களுக்குப் பெரும்பாலும் போதிக்கப் படுகிறபடியாலும் தேச பாஷைகளில் அவ்வளவு உயர்ந்த நூல்களில்லாதபடியாலும் தேச பாஷைகளில் மாத்திரம் தேர்ச்சி பெற்ற ஆசிரியர், சாஸ்திர போதகாசிரியருக்குச் சமானமான நிலைமையைப் பெற முடிவதில்லை. அன்றியும், ஆரம்பாசிரியர்களாயிருப்பவர்கள், தேச பாஷைகளிலுங்கூட அவ்வளவு புலமை வாய்ந்திருக்கவேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டது. அரசியலாருடைய கல்வி அமைப்பு அவ்வாறிருந்த போதிலும், பழைய வழக்கத்தைக் கைதவா விடாமல் சிற்சில விடங்களில் நல்ல பெரும் புலமை வாய்ந்த ஆசிரியர்கள் அதிக வருவாயை எதிர்பாராமல் மக்களின் நன்மையை நாடி இன்னும் ஆரம்பாசிரியர்களாகவே இருந்து வருகின்றனர் எனினும், பெரும்பாலானவர்கள் இதற்குச் சிறிது மாறுபட்டிருக்கின்றனரென்பது மிகையாகாது.

ஏதோ மக்களின் கல்வியபிவிருத்தியையோ, தான் புலவனெனக் கிராமத்தில் பேர் பெறவேண்டுமென்ற கருத்தையோ

கொண்டு தற்காலம் சில அதிகப் படிப்பாளிகள் ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருக்கின்றார்களே யன்றி, ஆரம்பாசிரியர்களாக வருபவர்கள் நல்ல புலமை வாய்ந்திருக்க வேண்டுமென்ற அவசியம் அவசியமில்லாமற் போயிற்று. ஏனெனில் நான்காவது அல்லது ஏழாவது வகுப்பு வரையிலும் சாதாரணமாக எழுதப் படிக்கக் கற்பிக்கப் போதிய கல்வி யறிவு மாத்திரமிருந்தால் ஆரம்பாசிரியர்களின் வேலைக்குப் போதுமானது என்ற விதி ஏற்பட்டு விட்டது. இதனால் நான்காவது அல்லது ஏழாவது வகுப்புப் படித்த மாணவர்களுங்கூட ஆரம்பாசிரியர்களாக அமர்ந்து விடுகிறார்கள். மாணவர்களா யிருப்பவர்கள் ஆசிரியராக வருவதைப் பற்றி இங்குக் குறை கூறவில்லை. ஆனால் இளைஞர்களின் தகுதியறிந்து போதிக்கும் திறமை அந்தப்படிப்பினால் மட்டும் ஏற்பட்டுவிடுமா? என்பதுதான் ஆக்ஷேபனை. எவ்வளவு படித்திருந்த போதிலும் இளைஞர்களுக்கு ஆசிரியராக வரக்கூடியவர்களுக்குப் பொறுமையும், இன் சொல்லும், சிறுவர்களின் மதிப்போக்குக் கேற்ற சல்லாபமும் இல்லாவிடில் பயன்படாது. பாடசாலையில் ஏதோ ஒரு பரீக்ஷையில் தேறிவிடுவதாலேயே இந்தக் குணங்களும் அமைந்து விடுகிறதெனக் கூறவியலாது. ஆதலால் அநுபவந்தான் இங்கு பிரதானமானது. நல்ல அநுபவசாலிகளான ஆசிரியருக்குக் கல்வி குறைந்திருப்பினும் அவருடைய போதனா சக்திக்கும், அனுபவமில்லாது பெரும் படிப்புமட்டிலு முடையவரின் போதனா சக்திக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. பிள்ளைகளுடன் பழகி யனுபவமில்லாத ஒருவர் இரண்டாண்டுகள் போதனா முறைப் பாடசாலையிற் பயின்று தேர்ச்சி பெற்று வந்தபோதிலும், போதனாமுறைப் பாடசாலை இருக்குமிடமே தெரியாத நல்ல அநுபவமுள்ள ஆசிரியரோடு போதிக்கும் திறமையில் போட்டி போட முடியாது. விஷயம் இவ்வாறிருக்க, எவ்வளவுகாலம் ஆசிரியராயிருப்பினும் போதனா முறைப் பாடசாலையில் சேர்ந்து பயின்று பாஸ் பண்ணினால்தான் அவர் சரியான ஆசிரியராகக் கருதப்படுகிறார் என்ற அரசாங்கச் சட்டத்திற்குப் பொருள்யாதோ? அவ்வாறு தேர்ச்சி பெற்றாலன்றி ஒரு ஆசிரியருக்குச் சரியான கிரான்டோ சம்பளமோ கிடையாது. இந்



தக் குறையைப் போக்கிக்கொள்ள வேண்டி நல்ல அநுபவமும், வேண்டிய கல்வியறிவும் உடையவர்கள்கூட தமது அரிய காலத்தையும், பொருளையும் செலவிட்டுக்கொண்டு போதனா முறைப் பாடசாலையில் வெட்கத்தோடு இரண்டாண்டு கழிக்கின்றனர்!

## ஆசிரியர்களுக்குத் தேகப் பயிற்சிப் பாடம்

போதனா முறைப் பாடசாலையில் ஆசிரியராகப் பயிலுபவர்க்கு நடத்தப்படுகிற தேகப் பயிற்சிப் பாடம் வெறுக்கத்தக்கது. ஆசிரியப் பயிற்சி பெறுபவர்கள் சிறுவர்களல்லர். இளமை நீங்கி மனிதத் தன்மை பெற்று அதிலும் ஆசிரியத் தொழிலின் பொருட்டு வந்திருப்பவர்களுக்கு, இளைஞர்களுக்குக் கற்பிக்கிற "கிண்டர் கார்டன் ட்ரில்" என்ற பயிற்சியைச் செய்விப்பது ஆசிரியத் தொழில் பழகுபவர்களை இழிவு படுத்துவதாகப் பிறர் கருத நேரிடுகிறது. பிள்ளைகளுக்குப் பாடம் போதிப்பதற்காக மாதிரிப்பாடம் கொடுத்தல், மாடல் ஸ்கூலில் சென்று கவனித்தல் ஆகியவை மற்ற கணிதம் வாசகம் முதலிய பாடங்களுக்கு எப்படிப் பிள்ளைகளைக் கொண்டே யாதேனுமோர் பயிற்சி பெறும் ஆசிரியரால் நடத்தப்பட்டுக் குண தோஷங்களாராய்ந்து சரிப்படுத்தப்படுகிறதோ அப்படியே இந்தத் தேகாப்பியாச விஷயத்திலும் ஆசிரியப் பயிற்சி பெறுபவரை அவ்வப்பியாசப் பிள்ளைகளைக் கொண்டு செய்வித்துச் சரிப்படுத்த வேண்டியது முறையாகும். ஆசிரியருடைய தேகாப்பியாசத்திற்கு "பாட்மிட்டன்", "டென்னிஸ்" முதலான வயதுக் கேற்ற பெருந்தன்மையான அப்பியாசங்களை வைத்துக்கொள்ளுவது நல்லது. அவ்வாறின்றி சிறிய குழந்தைகள் பழகும் அப்பியாசங்களை ஆசிரியருக்குப் பழக்குவிப்பது பரிகாசத்திற் கிடமானது. இந்தத் தேகாப்பியாச முறையை ஆரம்ப ஆசிரியர்களில் பலர் குற்றமாகக் கொள்ளாமலிருக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன் [illegible] நடந்த ஒரு ஆரம்பாசிரியர்களின் சங்கக் கூட்டத்தில் இந்த ட்ரில் பாடம், காலேஜ் ட்ரில் மாஸ்டரைக் கொண்டு அங்கத்தினராகச் சென்றிருந்த ஆரம்பாசிரி

வணக் காப்பக
198517
சென்னை

யர்களையே மாணவராக ஏற்படுத்திக் கொண்டு நடத்தப்பட்டது. விஷயந் தெரிந்த ஆசிரியர்களைத் தெரியாதவர்களாகப் பாவிக்கச் செய்து பாடத்தை நடத்துவது எவ்வளவு ஆபாசமானதென்பது அக் கூட்டத்தில் எவரும் உணர்ந்ததாகக் கூற முடியவில்லை. அக் கூட்டத்தில் ஒரு மேலதிகாரியும் ஆஜராயிருந்தார். ஒரு நாகரீகமான பட்டினத்தில் நடந்த ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இப்மாதிரி நோக்கத்திற்கு மாறான காரியம் நிகழ்வது ஆசிரியத் தன்மைக்கு இழுக்காகுமென்பது ஆரம்பாசிரியர்கள் எல்லோரும் உணர வேண்டும்.

## பாடப் புத்தகங்கள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கென எழுதப்பட்டிருக்கிற பாடப் புத்தகங்களையும் ஈண்டுச் சிறிது ஆராய்வதவசியம். தற்காலப் பாட புத்தகங்களில் சில பாடங்கள் இயற்கைக்கு ஒவ்வாதனவாயும், மூடக் கொள்கையை வலியுறுத்துவனவாகவும் இருக்கின்றன. இளைஞர்களின் அறிவை விசாலமடைவிப்பதே கல்வியின் நோக்கமன்றிக் குருட்டுத்தனமாக நடந்துகொள்ளச் செய்வதன்று. "காக்கையும் நரியும்" "சிங்கமும் சுண்டெலியும்" முதலிய கதைகளில் நரி சிங்கம் முதலான மிருகங்கள் சம்பாஷித்துக் கொள்ளுவதாக இயற்கைக்கு மாறான விஷயங்கள் காணப்படுகின்றன. இவற்றால் ஜந்துக்களுங்கூடப் பேசும் போலும் என்று வாசக பாடத்தில் நன்கு நம்பிவிட்டு மறுபடி பிராணிகளின் இயல்பைப் பற்றிய பாடத்தில் அவற்றிற்குப் பேசுந் திறமையில்லையென வறிந்து முன் படித்த கதை பொய்க் கதையென்று தீர்மானித்து விடுகிறான் மாணவன். கதை பொய்யென்று பட்ட சிறுவனுக்கு அதில் கூறப்படும் நீதிமட்டிலும் நிலைத்திருக்குமா? அத்தகைய பாடங்களைப் போதிக்கும் போது ஆசிரியர் மிக்க திறமையாக நடந்துகொள்ள வேண்டும். கதை பொய்த்துப் போயினும், நீதி நிலைத்திருக்கும்படி செய்ய வேண்டியதுதான் இங்கு ஆசிரியருடைய முக்கியமான வேலை.

புத்தகமெழுதுவோர் இவ்வாறாய கதைகளையெல்லாம் எடுத்துவிட்டு ஜீவஜந்துக்களைப் பற்றிய நீதி போதிப்பதற்கு, அவை



வாய்பேசாமல் காரியம் சாதிக்கிற—அதாவது அவை இயற்கையாக நடந்துகொள்ளுகிற "காக்கையும் குடமும்" "நான்கு எருதுகளும் சிங்கமும்" "படிக்கப்போன குரங்கு" முதலானவை போன்ற கதைகளை எழுதுவது மிகவும் சிறந்ததும் ஆக்ஷேபிக்கக் கூடாததுமாகும். சமீபகாலந் தொட்டுச் சில புதுப்புதுப் பெயர்களோடு சில புத்தகங்கள் வெளியாகின்றன. அவற்றில் பெரும்பாலும் இயற்கைக்கு முற்றிலும் மாறான புராணக் கதைகளே நிரப்பப்பட்டிருக்கின்றன. மேலும், அவை சிறுவர்களின் எதேச்சையான நல்ல அறிவை அழுத்தி, மூடக் கொள்கையை வளர்க்கக் கூடியவையாயுள்ளன. இவ்வாறாய புஸ்தகங்களைக் கொண்டு பாடம் நடத்தும் ஆசிரியர் சிறுவனின் இயற்கை யறிவினால் மிக இழிவாக மதிக்கப்படுகிறார். புத்தகமெழுதுவோர் தங்களுக்கிருக்கும் மத வெறியினாலோ, யாரேனும் சிலர் தம்மைப் புகழப்பெறவேண்டியோ சிறுவர்களுடைய அறிவு வளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் எழுதி விடுகின்றனர். அரசியலாரும் "யாரோ செத்தார், யாரோ பிழைத்தார்" என்ற பழமொழி போல முன் பின் பாராமல் அங்கீகரித்து விடுகிறார்கள். ஆகையால் ஆசிரியர்கள்தான் அவ் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். மூடப் பழக்க வழக்கங்களையும் இயற்கைக்கு மாறானவைகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள பாடப் புத்தகங்களை ஆரம்பாசிரியர் சங்கக் கூட்ட மூலமாகப் பகிஷ்கரிக்க வேண்டும். அல்லது அத்தகைய பாடங்களைப் போதனை அட்டவணையிலிருந்து நீக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு ஆரம்பாசிரியர்களுக்கு மத விஷயத்தில் உதார குணமும், மூடப் பழக்க வழக்கங்களை யறவே யொழிக்க வேண்டுமென்ற எண்ணமும் இருக்க வேண்டும்.

## சில குறைகள்

மத விஷயத்தில் ஆசிரியர்கள் அதிகமாகப் பற்றுள்ளவராயிருப்பது நாட்டுக்கு நன்மை யெனக் கூறவியலாது. ஏனெனில், மதம் நமது நாட்டில் ஒன்றல்ல. மதக் குருக்களே மத விஷயத்தில் பற்பல போராட்டங்களை ஒருவர்க்கொருவர் நடத்திக் கொண்டிருக்கி

ன்றனர். சைவம், வைணவருக்குப் பொருந்தாது; வைணவம், சைவருக்காகாது; இவ்விரண்டும் பௌத்தருக்குப் பிடிக்காது; இம் மூன்றும் கிறிஸ்தவருக்கு விரோதம். ஆனதால் இவற்றிலேதேனுமோர் மதப் பித்துடைய ஆசிரியர் தம் மதத்திற்கேற்ற பாட்டுகளையும் கதைகளையும் பாடங்களையுமே தம் மாணவர்களுக்குப் போதித்து விடுவதனால், அம் மாணவர்கள் பிற மதத்தினரையோ அவர் தம் நூல்களையோ பார்க்க நேர்ந்தபோது கலாம் விளைவிக்கத் தொடங்கி விடுகின்றனர். அன்றியும் மேலே குறிப்பிட்ட புராணக் கதைகளடங்கிய புத்தகங்களையே புகழ்ந்து சிறுவரின் மூளையில் அவற்றை ஏற்றிவிடுவார்கள். அதனால் அம் மாணவர்கள் அந்த மூட நம்பிக்கையையே பெரிதும் கொண்டு இயற்கை யுண்மைகளைக் கண்மூடித்தனமாக மறுப்பதோ எதிப்பதோ செய்து பேதைகளாய்ப் போய்விடுவார்கள். ஆகையால்தான், ஆசிரியராக வருபவர் பொது நோக்கமுள்ளவராயும், "நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சி"யுள்ளவராயுமிருக்க வேண்டும்.

## சுய அபிவிருத்தி

ஆசிரியர்களில் பலர் தாம் ஏதோ ஒரு பரீக்ஷையில் தேறினதே போதுமென்று திருப்தியடைந்து விடுகின்றனர். ஆசிரியராயிருப்பவருக்குக் கல்வியில் இவ்வளவுடன் திருப்தியடைவது சரியல்ல. ஆசிரியராயிருப்பவர் மாணவர்களிடத்து ஆசிரியராயிருந்தபோதிலும் தனித்திருக்குங் காலத்தில் தன்னையுமொரு மாணவனாகவே தனக்குத் தானே கருதிக்கொண்டு பலப் பல புத்தகங்களையும் பார்த்து அநேக விஷயங்களை யுணரவேண்டும். வர்த்தமானப் பத்திரிகைகளைப் பார்க்கும் வழக்கம் மிகுதியும் இருக்க வேண்டும். உலகியலறிவு ஏனையோரைவிட ஆசிரியருக்கு அதிகம் வேண்டும். ஆசிரியர்களாயிருப்பவர்கள் பத்திரிகைகளைப் படிக்காமலிருப்பது பெருங் குறைவு—பெருங் குறைவு மட்டிலுமல்ல, பெருந் தவறென்றுங்கூற வேண்டும். ஏன்? ஆசிரியர், உலகத்தின் எதிர்கால அமைப்புக்கு அஸ்திவாரமல்லவா? தம்மிடம் பயிலும் சிறுவர்கள், பிற்காலத்தில் மற்றத் தேசத்தாருக்குச் சமானமாக நடந்துகொள்ள வேண்



டிய முறையில் அச் சிறுவர்களை இளமையிலேயே பக்குவப் படுத்தும் முக்கியமான கடமை ஆரம்பாசிரியருடையது. கல்வி பயின்ற மாணவன் ஒரு குருட்டு நம்பிக்கை யுடையவனாகவோ பயங்கொள்ளியாகவோ பிற தேசத்தாருடைய அற்புதச் செயல்களைக் கண்டு வியந்து வீற்றிருக்கக் கூடியவனாகவோ இருக்கும்படி ஆசிரியர் செய்வாரானால், அவர் நாட்டிற்கே பெருந் தீங்கிழைத்தவராகிறார். மாணவர்களைத் தேசத்தின் பிற்கால நன்னிலைக்குக் கற்றாண்களாகச் செய்து விடவேண்டியது ஆசிரியருடைய முக்கியமான வேலையானதால், ஆசிரியரா யிருப்பவர் வர்த்தமானப் பத்திரிகைகளைக் கட்டாயம் படித்து உலகிய லறிவைப் பெரிதும் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் மாந்திரீகம் செய்தல், குறி கேட்டல், சகுனம் பார்த்தல், பேய் பிசாசுகளின் நம்பிக்கை முதலான மூட நம்பிக்கைகளை யறவே ஆசிரியர்கள் விட்டொழிக்க வேண்டும். சுருங்கக் கூறின், ஆசிரியர் எவ்வளவுக் கெவ்வளவு மூட நம்பிக்கை யற்றவராயும், விரிந்த நோக்கமுடையவராயும், உலகியலறிவு பெற்றவராயுமிருப்பாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவரிடத்திற் பயிலும் மாணவர்களும் அவ்வறிவைப் பெற்றுத் திகழுவார்களென்பது திண்ணம்.

## ஊதியம்

ஆரம்பாசிரியர்களுக்கு ஊதியம் மிகக் குறைவு. இந்தக் குறைவாலேயே ஆரம்பாசிரியர்கள் பலர் வறுமை வாய்ப்பட்டுத் தமது அறிவை விசாலப்படுத்திக் கொள்ளப் போதிய சாவகாசமும், வசதியும் இன்றிக், கிணற்றுத் தவளைகளைப் போலக் காலங் கழிக்க வேண்டியவர்களாகி விடுகின்றனர். இது மட்டிலுமல்ல, சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டிய முறைகளையும் சரிவரக் கையாள முடியாமற் போய்விடுகிறது. தற்போது ஒரு எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயருக்குப் பதினெட்டு ரூபாய் சம்பளம் லோகல் போர்டாரால் கொடுக்கப்படுகிறது. (அந்தந்தப் போர்டுகளின் நிலைமைக்கேற்றபடி இந்தப் பதினெட்டில் கொஞ்சம் கூடியும், குறைந்துங் கூ

டச்சம்பள விகிதம் கொடுக்கப்படுவதுண்டு) இந்தப் பதினெட்டு ரூபாய் சம்பளத்தைக் கொண்டு ஒரு ஆரம்பாசிரியர் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் முதலியவர்களோடும், அயலூரிலிருந்தால் வீட்டு வாடகை முதலிய செலவுகளையும் செய்துகொண்டு இக் காலத்தில் ஜீவிப்பதென்றால் போதுமா? போர்டார் கொடுக்கும் சம்பளம் குடும்பத்தை நிர்வகிக்கப் போதாதென்று வேறு வழியில் ஏதாவது சம்பாதித்துக் கொள்ளுவதற்கும் அவர்களுக்குச் சட்டம் கிடையாது. தெரிந்தோ தெரியாமலோ ஏதாவதொரு வழியில் மற்றொரு சிறு சம்பாதனையும் வைத்துக்கொண்டு காலங் கடத்துவது மேலதிகாரிகளுக்குத் தெரிந்தால், அசலுக்கே மோசம் வந்து விடுகிறது. ஆசிரியராக வருபவர் ஆசிரியத் தொழிலுக்குரிய ஆராய்ச்சியிலேயே இருக்க வேண்டுமென்று சட்டமியற்றிய ஆட்சியாளருக்கும் 18 ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு மனிதன் குடும்பத்தோடு எப்படித் திருப்தியாகக் காலங் கடத்த முடியுமென்பதை யாலோசிக்கச் சாவகாசமில்லைப் போலும்!

நல்ல வர்த்தகம் நடக்குமிடங்களில் கூலிக்கு மூட்டை தூக்குபவனுக்குங்கூட நாளொன்றுக்கு 10 அணா 12 அணா சில சமயங்களில் ஒரு ரூபாயும் அதற்கு மேலுங்கூடச் சம்பாதித்து விடுகிறான். கவர்ன்மெண்டு ஆபீசுகளில் சேவகனாயிருப்பவனுக்குள்ள சம்பளங்கூட இந்த ஆரம்பாசிரியருக்கில்லை. கூலிக்காரன், அடிமை வேலைக்காரன் முதலியவர்களுக்கிருக்கும் வரும்படிகூட ஒரு ஆசிரியப் பட்டம் பெற்றவருக்கில்லை. இவ்வளவு குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு உலகத்தில் தானும் மனிதத் தன்மையோடு வாழுவதற்கு எப்படி முடியும்? அவ்வாசிரியர் சட்டப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றால் அது முடியாத காரியம். இந்தக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு கிண்டர் கார்ட்டன் முறைப்படி பாடங்களை நடத்திக்கொண்டு சட்டப்படி நடந்துகொள்வதற்கு ஆசிரியர் குடும்பமில்லாத பிரம்மசாரியாகவோ, அல்லது முற்றுந் துறந்த துறவியாகவோ தான் இருக்க வேண்டும். (இக் காலத்தில் துறவிகளுங்கூட அரச போகங்களை யனுபவிக்கிறார்



களையென்றால், அப்படிப்பட்டவர்களைப் பற்றி இங்குக் கூறப்படவில்லை.) சம்பளக் குறைவை யேற்படுத்திய ஆட்சியாளர் ஆரம்பாசிரியராயிருப்பவர் குடும்பத்தோடிருக்க லாகாதென்று ஒரு சட்டத்தையும் ஏற்படுத்தி யிருப்பார்களானால், அது ஒரு வகையில் ஒழுங்காயிருக்கும்! அப்போது தற்போதிருப்பதைப் போன்று ஏராளமான ஆசிரியர்கள் அத் தொழிலுக்கு வரமாட்டார்கள். பாடங்களும் கிண்டர் கார்டன் முறைப்படி நடந்தேறும்; ஆனால் நாட்டில் கல்வி சுருங்கும்.

நாட்டில் ஆரம்பக் கல்வி விரிவாகப் பரவ வேண்டுமானால், இன்னும் ஏராளமான பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். மக்கள் பிற்கால வாழ்வில் தேச பக்தியும், நுண்ணறிவும், தன் மதிப்பும், வீரமும், யோக்கியமும் உடையவர்களாக இருக்க வேண்டுமென்றால், முதலில் அவர்களைப் பயிற்றும் ஆசிரியர் மனத் தூய்மையையும் மேற்கூறிய குணங்களையும் உடையவராயிருத்தல் வேண்டும். ஆசிரியர் அவ்வாறிருப்பதற்கு ஏராளமாக அல்லது போதிய ஊதியமேனும் கொடுக்கப்படல் வேண்டும். பிச்சைக்காரனுக்குப் பிச்சையும், கூலிக்காரனுக்குக் கூலியும் கொடுப்பதைப் போல முப்பது நாள் ஓயாமல் உழைத்த உபாத்தியாயருக்கு 18 ரூபாய் வெள்ளைக் காசுகளைக் கொடுப்பதால் நாடு ஒருக்காலும் நன்மையடையப் போவதில்லை. தேசத்தின் எதிர்காலமென்னும் பொக்கிஷ சாலையின் திறவுகோல் ஆரம்பாசிரியருடைய திருப்தியிலிருக்கிறதென்பதை ஆட்சியாளர் உணர வேண்டும். சிறுவர்கள் இளம்பிராயத்தில் எவ்வித பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பார்களோ அவ்வித பழக்க வழக்கங்களேதான் முடிவுவரையில் நிலைத்திருக்கும். ஆனதால் நல்லெண்ணமும், நன்னடத்தையும், விரிந்த அறிவும், ஒற்றுமை யுணர்ச்சியும், வீரமும் பெறுவதற்கு இளம் பிராயத்திலேயே இவ்வித பண்புகளுடையவர்களிடம் பழக வேண்டும். விசனமும், சிடுசிடுப்பும், துன்பமும், கோபமு முடையவர்களிடம் பழகும் பாலரும் அதே கதிதான் அடைவார்கள். இவ்வாறு பாலர்கள் பழக்கப் படுவதற்கு ஆரம்பாசிரியர்களே யல்லவா மூலகார

ணம்? மாதம் 18 ரூபாய் மாத்திரமே பெற்றுக்கொண்டு சம்சாரத்தை நடத்தத் தவித்துக்கொண்டு வறுமையிலும், துன்பத்திலும் சிக்குண்டிருக்கும் ஆசிரியர், விசனமும் சிடுசிடுப்பும் இல்லாமல் எப்படித் தொழிலை நடத்தமுடியும்? இந்த லக்ஷணத்தில் சில தாலூகா போர்டிலிருந்து சரியான காலத்தில் சம்பளங்கள் வந்து சேருவதில்லை. சம்பளம் பெறுந் தேதிக்கு முன் ஏதாவதோர் மாற்றப்பட்ட கிராமத்திற்கு ஆசிரியர் மூட்டை கட்டவும் நேரிடுவதுண்டு. இவ்வளவு தரித்திர தசையிலிருக்கிற ஆசிரியரிடமிருந்து மேலதிகாரிகளில் சிலர் பிடுங்கித் தின்னவும் வழிபார்க்கிறார்கள். இந்த நிலையில் தேச முன்னேற்றம் எப்படி சித்திக்கும் என்பது புலனாகவில்லை. இந்தத் தமிழ் நாட்டிலுள்ள ஒரு தாலூகாப் போர்டுத் தலைவர், ஆசிரியராக விண்ணப்பித்துக் கொள்ளுகிறவர் எவ்வளவு ஏழையாயிருப்பினும் அவரிடம் ரூபாய் நாற்பதோ, ஐம்பதோ முன்னுடிப் பெற்றுக்கொண்ட பின்னரே அவ் விண்ணப்பதாரரை ஆசிரியராக நியமித்து வருவதாய்ப் பல முறையும் கேள்விப்படுகிறேன். இது எவ்வளவு கொடுமை! 18 ரூபாய்ச் சம்பளத்திற்காக நகைகளை விற்றோ, கடன் பட்டோ இவ்விதமாக எஜமானனுக்கு அழுதுவிட்டு ஆயுள் முழுதும் அவஸ்தைப்படும் ஆசிரியர் சட்டப்படி நடந்து கொள்ளுவதென்றால் அது சாத்தியமா?

ஆரம்ப ஆசிரியர் விஷயத்தில் அதிகாரிகள் நடந்து கொள்ளும் சணதையை பற்றொரு சமயம் கூறுகின்றேன். செல்வச் செருக்கினாலோ, கல்விக் கர்வத்தினாலோ மேலதிகாரிகளாக விருப்பவர்கள் என்ன துன்பங்களை யுண்டுபண்ணிய போதிலும் ஆரம்பாசிரியர்கள் பொறுமையோடு தமது காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பது மிகவும் போற்றற் குரியதே. இவ்வளவு குறைவான சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு மனமகிழ்ச்சியோடு மாணவர்களின் பிற்கால நல் வாழ்க்கையை யுன்னி அம் மாணவர்களைப் பயிற்றுவிக்கும் உத்தமர்களும் நம் நாட்டிலில்லாமலில்லை. ஆரம்பாசிரியர்களிடத்துப் பெரும்பாலும் உலகியலறிவும், பண்டைக் காலத்தைப் போன்ற பெரும் புலமையும் இல்லாதிருப்பது ஒரு குறையாகக் காணப்பட்ட போதிலும், பொறுமை யென்னும் அணியை ஆரம்பாசிரியர்கள் அணிந்து கொண்டிருக்கிறார்க ளென்பது கண்கூடு.



இந்தப் பொறுமை யென்னும் உயரிய குணத்தினால்தான் ஆரம்பாசிரியர்கள் சொற்ப ஊதியத்தைப் பெற்றுத் தமது கடமையைச் சரிவரச் செய்து வருகிறார்கள். ஏதோ கடவுள் அருள் செய்தது இவ்வளவுதான்! என் செய்வது? என்று மனத்தை யடக்கிக்கொண்டு ஆரம்பாசிரியர்கள் காலங் கழிக்கிறார்கள். ஆட்சியாளர் விரிவான சம்பளங்களை நமது ஆரம்பாசிரியர்களுக்குக் கொடுத்து வருவார்களானால், ஆசிரியர் இன்னும் பன்மடங்கு மகிழ்ச்சியும், உற்சாகமும் உடையவர்களாய்த் தமது கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பார்கள். ஆரம்பாசிரியர்களின் மனங் குளிர்ந்தால்தான் இளைஞர்களின் மனத்திலுற்சாகம் பிறக்கும். அந்த உற்சாகத்தில்தான் தேசத்தின் எதிர்கால விதை நடப்படுகிறது. அதன் மூலமாகத்தான் நாடு முன்னேற்றமடைய வேண்டும்.

ஆதலால், ஒவ்வொரு லோகல் போர்டாரும் இதை நன்கு கவனித்து நாட்டின் நலத்தை யுன்னி ஆரம்பாசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கச் சற்றும் பின்னடையலாகாது. ஆரம்பாசிரியர்களுக் களிக்கும் அதிக ஊதியமேதான் நாட்டின் வருங்கால மக்களின் வன்மையாகப் பரிணமிக்கப் போகிறது. இவ் வுண்மையை எல்லா மக்களும், ஆட்சியாளரும், லோகல் போர்டாரும் ஊன்றிக் கவனித்து வேண்டுவன செய்ய முற்படுவார்களாக.



# தேசாபிமானம்.

தென்னாப்பிரிக்காவிலிருக்கும்
ஸ்ரீமாந். ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

தன்னாட்டை நேசிக்காத மனிதன் எவனும் உயர் நிலையை யடையான். தான் பிறந்த ஊரையே நேசிக்காத ஒரு பாமரன் பின் எதைத்தான் நேசிக்க இயலும்? ஒரு சிறு கிராமத்திலுள்ள ஒரு குடியானவன் தன் ஊரின்மீது அத்தியந்த பிரீதி வைத்திருக்கும்பொழுது, படித்த ஒரு பண்டிதன் தேசத்தை நேசிக்காமலிருக்கக் கூடுமோ? ஒரு பொருளினிடத்தில் அன்பும், மற்றொன்றினிடத்து வெறுப்பும் வைப்பது ஒரு மனிதனுக்கு இயற்கையே யென்றாலும், தன் தேசத்தினிடத்து அதிகமான அன்பு வைத்து அதனை விர்த்தி செய்யவேண்டு மென்ற அவாவுடனும், தன் மறுப்புடனும் சுய நலங் கருதாமல் எவன் பாடு படுவானோ அவனே தேசாபிமானி யாவான். ஆகவே, சுதேசாபிமானம் என்பது தெய்வத்தினால் சிலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட "வரம்" என்றே கொள்ளல் வேண்டும். எனினும் தான் பிறந்த இடத்தையும், அவ்விடத்து ஜனங்களையும் நேசியாதவன் எவனேனும் உளனோ என்று அநுபவத்தில் உற்றுக் கவனிக்கின் அது இல்லை என்றே ஏற்படும்.

அங்ஙனம் தான் பிறந்த இடத்தையும், அவ்விடத்து ஜனங்களையும் நேசிக்காத ஒருவ னிருப்பானே யாகில், அவன் ஒரு விநோதமான மனிதனாகத்தா னிருக்கவேண்டும். ஏனெனில் மேற் கூறியபடி "நேசித்தல்" என்னும் குணமானது மனிதருக்கு இயற்கைக் குணமா மென்ப. அத்தகையவனுக்கு எப்மட்டுத் திரவியமும், அதிகார அந்தஸ்துகளு மிருப்பினும் அவன் அவைகளைக்கொண்டு தன் நாட்டை முற்படுத்த முற்படானாகில் அவனுக்கு அத் திரவிய ஐசுவரியம் இருந்தென்? இல்லாமலென்? இப்படிப்பட்டவன் உயிரோடு வாழினும் நடை பிணமேயாவான்.



தான் பிறந்த தேசத்தினிடத்து ஒருவன் அன்பு வைத்தலே யன்றித் தன்னாலான வரையிலும் தனது நாடும், நாட்டின்கண் உறையும் ஜனங்களும் க்ஷேமமாய் வாழும்படியான வழிகளைச் சுயநலம் பாராட்டாமற் செய்பவன்தான் உண்மையான தேசாபிமானி யாவான். அன்றியும், தன் நாட்டை முன்னுக்குக் கொண்டு வரக்கூடிய வழிகளைச் செய்யும்பொழுது அவைகளை நிறைவேறுதற் பொருட்டுத் தனது பொருள், காலம், சுகம் முதலியவைகளை இழக்க நேரிடினும் அவைகளைக் கவனியாது எவன் உழைக்கின்றானோ அவனே ஸ்வதேச பக்தன் எனப்படுவான். மேலும், தன் நாட்டைக் காக்கும் பொருட்டு எவன் தன் உயிரையும் கொடுக்கச் சித்தனா யிருக்கிறானோ அவனே உத்தம சுதேச நண்பனாவான்.

தேசாபிமானி என்று பெயர் வைத்துக்கொண்டு இராஜாங்கத்தாருடன் போராடுவது தேச பக்தியன்று. ஆனால் இராஜாங்கத்தில் குற்றங் குறைகள் ஏற்பட்டால் அவைகளைத் திருத்தும் பொருட்டுத் தேசாபிமானிகள் முற்படுவது நற் பான்மையேயாம். முதலாவது 'சார்லஸ்" அரசர் ஜனங்களின்மீது அகாரணமான வரிகளைச் சுமத்தியக்கால், ஹாம்ப்டன் என்பவர் ஜனசமூகத்தின் தலைவராய் நின்று ஜன சுதந்திரத்தை நிலை நிறுத்தப் பாடுபட்டுச் சிறையிடப் பட்டும, அவரை ஆங்கிலேயர்கள் சிறந்த தேசாபிமானியாகக் கொள்ளவில்லையா?

நமது நாட்டின் நன்மையை நிலை நிறுத்த முயன்று வருங்கால் பலவித இடையூறுகளையும் அநுபவிக்க நேரிடினும், அவைகள் அத் தேசாபிமானிகளுக்கு இழுக்கன்றாம். பாரத நாட்டின்

# சீனாவின் முற்போக்கு.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

உலகில் பழமையான நாகரீகத்திற்குப் பெயர்போன தேசங்கள் சிலவற்றுள் சீனாவும் ஒன்று. ஆசியாக் கண்டத்தைச் சார்ந்த கீழ் நாடுகளில் சீனாவே பெரியதும், முதன்மை யானதுமாம். பண்டைக்கால முற்கொண்டே நாகரீக சாதனங்களாகிய பலவித கைத்தொழில்களுக்கு அஃது பெயர்போனதாகும். இற்றைக்கும் இந்தியாவில் வழங்கும் சீனா வெடிகள் முதலியவை சீனாவின் உயர்வை விளக்குபவை யாகும். சீனக்காரர் பாரத மக்களோடு செய்துவந்த வியாபாரத்திற் கறிகுறியாகவே சென்னையில் சைனா பஜார் என்ற கடைவீதி வழங்கி வருகிறதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு சிறப்புற் றிருந்தபோதிலும், அஃது இடைக்காலத்தில் அயல் நாட்டாரின் வியாபார ஆதிக்கியத்திற் குள்ளாகி, ஒருவகை அடிமை வாழ்க்கையைப் பெற்று, அல்லலுற்று வரலாயிற்று.

---

நமது தேசத்தின் தன்மைக்காகத் தமது காலம், பொருள், தேக சௌக்கியம் முதலியவைகளை இழந்து உழைத்துவந்த ஸ்ரீமான்களான ஜி. சுப்பிரமண்ய அய்யர், லாலா லஜபதிராய், தேசபந்து தாஸ், லோகமான்ய திலகர் முதலிய புருஷோத்தமர்கள் முதிர்ந்த தேச பக்தர்கள் அன்றோ? தேசாபிமானி என்னும் பெயர்கொள்ளப் பிரியமுடையோர் இவர்களைப் போன்ற தேசாபிமானிகளாக முயலுவதுடன், உண்மைத் தேசாபிமானிகள் நாடு கடைத்தேறும் படியான வழிகளை யுக்தித்துச் சொல்லுங்கால், அவைகளுக்காதரவளித்து, நிறைவேற்றி அவர்களுடன் ஒத்து உழைத்தல் ஒவ்வொருவருடைய கடனுமாகும்.



அதற்குத் துணையாக எதேச்சாதிகாரம் படைத்த அரசர்களின் அதிகாரமும் நாட்டை அழிக்கத் தலைப்பட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கேற்ற மூல சாதனங்களான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களின் உரிமைகளை ஜப்பான், ருஷியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய அயல் நாடுகள் கைப்பற்றி ஏக போகமாக அனுபவிக்கத் தலைப்பட்டன. அதனால் நாட்டில் செல்வம் குறையலாயிற்று. வறுமை வளர்ந்தோங்கியது. தேச மக்கள் பலவிதத் துன்பங்களுக்கு உள்ளாகினர். அதனால் பொது மக்களிடையில் ஒருவித விழிப்பேற்பட்டது. சுயேச்சையான அரசாங்கத்தால் விளைந்த கெடுதிகளை யனுபவித்த ஜனங்கள் ஜனநாயக ஆட்சியை விரும்புவது அதிசய மல்லவே?

## புதிய சகாப்தம்

இன்று உலகமே ஒரு புதிய மாறுதலை அடைந்திருக்கிறது. இருபது வருடங்களுக்கு முன்னர் ஒரு பிலிப்பைன் தீவுகளில் மாத்திரம் தோன்றி வளர்ந்த சுதந்திர இயக்கமானது ஓங்கி வளர்ந்து இன்று ஆசியாக் கண்டம் முழுவதும் பரவி ஒளி வீசி வருகிறது. ஆயினும் ஒரு ஜப்பானில் மாத்திரம் கோனாட்சியின் கீழ் அஃது மங்கலாய்ப் பிரகாசித்து வருகிறது. ருஷியாவின் ஜார் சக்கிரவர்த்தியின் ஆட்சி மறைந்து போய்ப் பொதுவுடைமைக் கொள்கையோடு கூடிய குடியரசாட்சி ஏற்பட்டு விட்டது. ஜர்மனி தேசமானது கெய்சர் சக்கிரவர்த்தியைப் பகிஷ்கரித்து ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டது. பர்ஷியா சுதந்தரமடைந்துவிட்டது. துர்க்கியும் அயல் நாட்டாரின் ஆதிக்கியத்தினின்றும் தன்னைக் காத்துக்கொண்டது. ஈஜிப்டும் சுதந்திரத்திற்காகப் போரிட்டு வருகிறது. இந்தியாவும் சுயராஜ்யத்திற்காகப் பெருங் கிளர்ச்சி செய்துவருகிறது. அமெரிக்காவின் தலைவர் வில்சன் மகான் குறித்த உலக சமாதானத்திற்கான பதினான்கு நிபந்தனைகள் அடங்கிய திட்டமானது பாரிஸ் சமாதான மகா நாட்டில் அடிபட்டுப் போனபோதிலும், சுதந்தரம்—சுயராஜ்யம் என்ற கொள்கை மட்டிலும் உலகமெங்கும் வியாபித்து

விட்டது. இவ்வாறு உலகில் நடைபெற்று வரும் பெரிய மாறுதலைச் சீனாவும கண் திறந்து பார்க்க ஆரம்பித்தது அதுகாலை (காலஞ்சென்ற) டாக்டர் சன் யெட் சேன் என்ற பெரியவர் சீனாவில் முன்வந்து அந்நாட்டில் கோனாட்சியை வீழ்த்திக் குடியாட்சியை ஸ்தாபிக்க வேண்டி "கோமிங் டாங்கு" என்ற ஒரு புரட்சி இயக்கத்தை ஸ்தாபித்தார். சீனப் பொது மக்களிடையில் ஜனநாயக ஆட்சிக்கான விதைகளை வெகு விரைவாக விதைத்துப் பயிராக்கினார். அதனால் புரட்சி இயக்கம் வீறுகொண்டு நாட்டில் எழுந்தலைப்பட்டது. தேசாபிமானம் படைத்த இளைஞர்கள் உற்சாகத்துடன் அப் போரில் முன்னணியில் வந்து நின்றனர். நாட்டில் ஏதேச்சாதிகாரம் செலுத்திவந்த மஞ்சு வம்சத்திய அரசரின் அரசாங்கத்திற்கும் ஜனநாயக ஆட்சியை விரும்பிய புரட்சிக்காரர்களுக்கும் பெரும்போர் மூண்டது. டாக்டர் சன் யெட் சேன் அவர்கள் புரட்சி இயக்கத்தை வெகு சாதுரியமாக நடத்தினார். பல கஷ்ட நஷ்டங்களை யடைந்துப் சன் யெட் சேன் அவர்களின் தேசியக் கக்ஷியார் விடா முயற்சியோடு பாடு பட்டுப் பீகிங் நகரத்தில் மஞ்சு வம்சத்திய அரசரை யடக்கி யொடுக்கித் தெற்கில் காண்டன் நகரத்தைத் தலைமை யாகக் கொண்டு குடியாட்சியை (Republic) ஸ்தாபித்தனர் சாமான்ய மக்களிடையில் தேசிய உணர்ச்சியை உண்டாக்கி, விவசாயிகளினுடையவும், தொழிலாளிகளினுடையவும் துணையைப் பெற்று, சீனாவில் ஜனநாயக ஆட்சிக்கு இடையூறுயுள்ள வட மாகாணங்களையும் வென்று, சீனா முழுவதிலும் ஓரே ஜனநாயக ஆட்சியை நிலை நிறுத்தி, அயல் நாட்டார்கள் சீனாவிற் புகுந்து ஆற்றிவரும் அதிகார அமுல்களை அறவே நீக்கி, நாட்டின் வளத்தைக் காத்துச் செழிப்பிக்க வேண்டுமென்ற எண்ணங்களோடு சன் யெட் சேனின் கட்சியினர் பாடுபட்டு வந்தனர். இவ்வாறு இற்றைக்குச் சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் சன் யெட்சேன் அவர்கள் செய்த பெரு முயற்சிகள் யாவும் விரைவில் தோல்வியுற்றன. ஏனெனில் சன் யெட் சேன் அவர்களுக்குப் போதிய சைனிய பலமும், தன பலமும் இல்லை. அப்பொழுது சீனாவிலுள்ள பல மாகாணத்தார்களும் அவருக்கு எதிரிடை



யாயிருந்ததோடு, இரண்டு ஆண்டுகளுக் கெல்லாம் தோன்றிய மகா யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். மஞ்சூரியா அரசாங்கத்தில் பழக்கப்பட்ட சேனாதிபதிகளே சீன தேசத்தில் தலைமை பூண்டு, சர்வாதிகாரிகளாக வெளிப் பட்டனர். நாட்டை யாளுந் திறமை வாய்ந்தவர்களும் இல்லாமற் போயினர். ஜனநாயகக் கொள்கைக்கு அடிப்படையான கல்வி யறிவும் பொது மக்களிடையில் பரவ வில்லை. மேலும் சீனாவின் ரிபப்ளிக்கின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யுன்ஷிகாய் சேனாதிபதியானவர் தீர்க்காலோசனை யற்றவராய், அயல் நாட்டாரின் சதியாலோசனைகளுக் குட்பட்டுத் தானே சீனாவின் சக்கிரவர்த்தி யாவதற்கு முற்பட்டார். இவை யனைத்தும் டாக்டர் சேன் அவர்களின் தோல்விக்குக் காரணங்களாயின. சன் யெட் சேனைப் பின்பற்றியவர்களும், சீனப் பொது மக்களும் அப்பொழுதே மிகவும் பெலவீன மடைந்து வீழ்ச்சி யடைவதற்கு ஆயத்தமாயிருந்த மஞ்சூரியா அரசாங்கத்தை முழுதும் வீழ்த்துவதற்கே முனைந்து நின்றனர். ஆயினும் அவ் வரசாங்கத்தின் ஸ்தானத்தில் நிலையான மற்றொரு அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்குப் போதிய சாதனங்களை அவர்கள் பெற்றிருந்தார்களில்லை. அக் காரணங்களால் பெயருக்கு ரிபப்ளிக் நடைபெற்று வந்ததாயினும், மஞ்சூரியா சிங்காதனம் வீழ்ந்து பட்டவுடனே அதற்கு முன்னர் ஒரு சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருந்த சேனாதிபதிகள் யாவரும் தான் தோன்றிகளாய் விடுபட்டு, அவரவர்களுடைய மாகாணங்களில் ஏதேச்சாதிகாரமான தனியரசு செலுத்தத் தலைப்பட்டனர். அதனால் அவர்கள் ஒருவர்க் கொருவர் ஒற்றுமை யின்றிப் பகைத்து நாட்டை உட் பகைகளால் மூழ்கடித்தனர்.

## தேசீயக் கட்சியிற் பிளவு

அந் நிலையில் டாக்டர் சேன் அவர்கள் கண்ட புரட்சி இயக்கத்திலேயே அபிப்பிராய பேதங்கள் உதயமாயின. சேன் அவர்கள் ருஷ்யாவின் சோவித் அரசாங்கத்தின் துணை கொண்டு, அதன் கொள்கைகளின்படியே சீனாவிலும் குடியாட்சியை நிறுவ

வேண்டுமென்று விரும்பினர். எனவே கோமிங்டாங் கக்ஷியார் அதிகாரம் பெற்றிருந்த காண்டன் துரைத்தனம், அக் கொள்கை யின்படியே நடந்து வந்தது. சன்யெட் சேன் அவர்களின் மனைவி, குமாரன், அவரது பிரதானியாகிய யூஜன் சேன் முதலி யோர், சேன் அவர்களின் கொள்கைகளில் சிறிதும் வழுவாமல் நடப் பவர்களாவர். அதனால் சீனாவில், சோவியத் ருஷ்யாவின் செல் வாக்கு அதிகமடையத் தலைப்பட்டது. சீன தேசத்தார்களின் சுய முயற்சிக்குப் பாதகமேற்பட்டது. நாட்டில் குழப்பங்களும் அக்கிரமங்களும் அதிகப் பட்டன. ருஷ்ய தேசமானது உலகி லுள்ள பிறதேசங்கள் யாவற்றாலும் வெறுக்கப்பட்ட தாதலின், இதர தேசங்களுடன் அதிகம் சம்பந்தம பெற்றிருந்த சீனாவும் ருஷ்யா ஒன்றின் ஆதரவைக் கொண்டே பிற தேசங்களை எதிர்க்க வேண்டி நேருமென்றும், அதனால் தம் நாட்டின் மேன்மை சாதிக்கப் பெறுவது கூடாத காரியமென்றும் சீனாவில் பெரும் பாலர் எண்ணலாயினர். குடிகளின் தேசியக் கக்ஷியின் சேனைத் தலைவராகிய சியாங்காய் ஷேக் அவர்களுக்கும் இவ் வெண்ணம் உதித்து உரம்பெறலாயிற்று. இக் கருத்தைக் கொண்டவர்கள் தேசியக் கக்ஷியிலேயே மிதவாதிகளாயினர். இதற்கு முன்னரே சேன் அவர்களும் விண்ணுல கெய்தினர். அதனால் தேசியக் கக்ஷியில் சோவியத் அரசாங்கத்திற் கனுகூலமான அமிதவாதி களின் கக்ஷி மிகவும் குறைவுபட்டது மிதவாதி யாகிய சியாங் காய் ஷேக அவர்களை ரிபப்ளிக்கின் சேனைத் தலைவராக விருந்த மையால் அமிதவாதிகள் அவரை எதிர்க்க இயலாதவ ராயினர். அதனால் சன்யெட் சேன் அவர்களின் மனைவியாரும், யூஜன் சேன் அவர்களும் ருஷ்யாவுக்குப் போய்விட்டனர். உண்மையை யுணர்ந்து காலத்திற் கேற்ப நாட்டை ஒற்றுமைப்படுத்தி ஒரு ஜனநாயக ஆட்சியின் கீழ்க் கொணர்ந்து நாட்டின் நலத்தைச் சாதிக்க விரும்பிய சியாங்காய் ஷேக் அவர்கள், காலஞ் சென்ற டாக்டர் சன்யெட் சேனின் ஜனநாயக லக்ஷியங்களையே முதன்மை யாகக் கொண்டு, அவற்றைச் சாதிக்கக் கொண்ட வழிகளைமட்டும் மாற்றி யமைத்துக் கொண்டார். இது பொழுது நாங்கிங் அர



சாட்சியை நிலை நாட்டியது முதற்கொண்டு அவர் ருஷ்யாவின்
பொதுவுடைமைக் கொள்கைகளை எதிர்த்து, அமிதவாதிகளின்
கிளர்ச்சிகளை யடக்கித் தன் சைனிய பலத்தாலேயே வெற்ற
கொண்டு வருகிறார்.

## தேசீய அரசாட்சியின் வெற்றி

முதலில் காண்டன் தேசீய அரசாட்சியின் கீழ், தெற்
கிருந்த மூன்று மாகாணங்களை அடங்கி யிருந்தன. அவ் வரசா
கத்தின் சேனைத் தலைவராகிய சியாங்காய் ஷேக் அவர்கள் மிகவு
திறமையும், யோசனையும் வாய்ந்தவர். அவர்கட்குத் திசைக
நோக்கிப் படையெடுத்துச் சென்று வரிசையாக முக்கிய நகர
கள் அனைத்தையும் கைவசப் படுத்திக் கொண்டார். சென்
நான்கு ஆண்டுகளாக அவர் பல வெற்றிகளைப் பெற்றார். பிரிட்டி
ஷாரின் வசத்தி லிருந்த ஹாங்கோ நகரமும் அவர் வசமாயிற்
அவ் விடத்தி லிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் நகரத்தை முழு
அவரிடம் ஒப்படைத்தனர். பிரிட்டிஷாரின் பிரதிநிதியாகி
உவில்லே என்பவர் காண்டன் அரசாட்சியின் பிரதானியாகி
யூஜன் சேன் அவர்களோடு ஒரு சமாதான உடன்படிக்கை
செய்து கொண்டார். பின்னர்த் தேசிய அரசாங்கச் சேனை
முன்னேறிச் சென்று நாங்கிங் நகரத்தையுங் கைப்பற்றி
அதுகாலை அந்நகரிலிருந்த பிரிட்டிஷாருக்குத் தேசியச் சேனை
அபார நஷ்ட முண்டாக்கின வென்றும், பிறகு ஒரு வருடகால
அந்த நஷ்ட பரிகாரத்தின் விஷயமாய்ப் பிரிட்டிஷார் நாங்கிங் அ
சாங்கத்தாரோடு பேச்சுகள் நடத்தி வந்தன ரென்றும் தெரி
வருகிறது. அவ்வாறு நாங்கிங் நகரம் வசப்பட்டதன் மே
சியாங்காய் ஷேக் அவர்கள் அங்குத் தேசிய அரசாங்கத்தை ஸ்தா
பித்து, அங்கிருந்து மற்ற வட மாகாணங்களை வசப்படுத்துவதற்
முற்பட்டார். ஹாங்கோ நகரத்தி லிருந்த அதிகார வர்க்க
தார் தேசியக் கக்ஷியைச் சேர்ந்தவர்களே யாயினும் சோவிய
ருஷ்யாவுக் கனுகூலமான அமிதவாதக் கக்ஷியைச் சேர்ந்தவ
ராதலால் ஹாங்கோ, நாங்கிங் என்ற இரு அரசாங்கங்க

னிடையே பிளவு ஏற்பட்டுப் போர் மூண்டது. அதையே சுயமாகக் கொண்டு அயல் நாட்டார்கள் இரு கக்ஷிகளினிடையிலும் விரோதத்தை மென்மேலும் கிளப்பிவிடப் பார்த்தனர். ஆயினும் நாங்கிங் அரசாங்கமே வெற்றி பெற்றது. இவ்வாறு நாங்கிங் நகரத்தில் தேசீய அரசாட்சியை ஸ்திரப்படுத்திய பின்னர் சியாங் காய் ஷேக் அவர்கள் வடக்கில் முன்னேறிச் சென்று ஷான்சி, ஹோனான் முதலிய மாகாணங்களின் தலைவர்களையும் தம் வசப்படுத்திக்கொண்டு, அம் மாகாணங்களையும் தேசீய அரசாட்சியிற் சேர்த்தார். வடக்கில் பிகிங் நகரத்தின் அதிகாரத்திலிருந்த மஞ்சூரியாவின் தலைவராகிய சாங்ட் ஸோலின் சேனாதிபதி தேசீய அரசாங்கத்தின் முக்கிய எதிரியாகவிருந்தார். அவருக்கு ஜப்பான் துரைத்தனத்தாரின் உதவியும் கிடைத்து வந்தது. கடைசியில் ஜப்பான் சேனைகளும் பிகிங் நகரத்தையடைந்து அத் துரைத்தனத்தாருடன் கூடி, தேசீய அரசாங்கத்தை எதிர்க்க ஆரம்பித்தன. ஆயினும் சீனாவில் ஜப்பான் சேனைகள் செய்த அட்டூழியங்களைக்கண்ட பிகிங் துரைத்தனத்தாரும் ஜப்பானியரை வெறுத்தனர். அவ்வழியில் ஜப்பானியர் சீனாவில் ஆதிக்கியம் பெற முயலுவர் என்ற உண்மையை உணர்ந்ததும் இரு கக்ஷி அரசாங்கத்தாரும் தேவையாயின் தம்முள் கலகங்களை விட்டொழிப்போமென்றும், உடனே ஜப்பானிய சேனை சீனாவை விட்டுப் போய்விட வேண்டுமென்றும் அறிவித்ததோடு, அதைப்பற்றி லீக் ஆப் நேஷன் சபையாருக்கும் தெரிவித்துக் கொண்டனர். எனவே ஜப்பானியர் தம் சேனைகளைத் திருப்ப அழைத்துக் கொண்டனர்.

## பிகிங் நகரம் வசமாதல்

அதன் பிறகு ட்ஸினான்ஸு மாகாணமும், டிம்ட்ஸீ நகரமும் தேசீய சேனைகளின் வசமாயின. பின்னர் பிகிங் நகரத்தைத் தேசீயக் கக்ஷியார் முற்றுகையிட ஆரம்பித்தனர். அதைக்கண்ட பிகிங் நகரத்திய தலைவராகிய சாங்ட் ஸோலின் அவர்கள் பிகிங் நகரத்தை விட்டுவிட்டு வேறொரு வழியாக மஞ்சூரியாவிலிருக்கிற மோக்டேன் நகரத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அச் சமயத்



தில் அவர் ஏறிச் சென்ற இரயிலின் மேல் யாரோ எறிந்த வெடிகுண்டினால் அவர் படுகாயமுற்றுச் சிலதினங்களில் இறந்துபோனார். சாங்ட் ஸோலின் சேனாதிபதி காலமானதுடன் சீனா தேசத்திலிருந்த சேனாதிபதிகள் எதேச்சாதிகார மனைத்தும் அழிந்துபட்டதெனக் கூறலாம். சியாங்காய் ஷேக் அவர்கள் பிகிங் நகரத்திலும் தேசீய அரசாட்சியை (ரிபப்ளிக்) நிலை நிறுத்தினார். சற்றேறக்குறைய சீனா முழுவதும் ஒரு அரசாட்சி ஏற்படலாயிற்று. எனவே இன்று பதினெட்டு மாகாணங்கள் தேசீய அரசாட்சியின் கீழ் இருக்கின்றன. மூன்று மாகாணங்கள் மாத்திரமே இன்னும் உட்படாமல் ஒருவாறு தனிமையிலிருந்து வருகின்றன. ஆயினும் அவைகளும், ஜப்பானியரின் செல்வாக்கு மிகுந்த மஞ்சூரியாவுடன் விரைவில் சீனத் தேசீயக் கொடியின் கீழ் வந்து சேருமென்பதற் கையமில்லை.

## அரசியலமைப்பு

மேற் கண்டவாறு பல கஷ்ட நஷ்டங்களுக்குப் பிறகு சீனாவில் ஸ்தாபிக்கப்பட்ட பிரஜா பிரபுத்துவத்தினுடைய தலைவர், சியாங்காய் ஷேக் அவர்களே யாவர். அவரே சேனாதிபதியுமாவர். அரசாங்கத்தில் நிர்வாக வர்க்கம், சட்ட நிர்மாண வர்க்கம், நீதி பரிபாலன வர்க்கம், பரீக்ஷா வர்க்கம், அதிகார வர்க்கம் என்ற ஐந்து இலாக்காக்கள் "யுவான்கள்" என்ற பெயரால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பதினைந்து பேர் ஸ்டேட் கௌன்சிலின் அங்கத்தினரா யிருக்கின்றனர். அவர்களிலிருந்தே மேற்கூறிய ஐவகை இலாகாக்களுக்கும் தலைவரும், நியமிக்கப்படுகின்றனர். காரிய நிர்வாக வர்க்கமானது மற்றவற்றைக் காட்டிலும் முக்கியமானதாகும். அதுவே மந்திரிகளை நியமிக்கும் அதிகாரமுடையதாம். சட்ட நிர்மாண வர்க்கத்திற் பொருளாதார விஷயங்களும், யுத்தம், சமாதானம் முதலிய விஷயங்களும் கவனிக்கப்படும். நீதி பரிபாலன வர்க்கத்தார் நியாயங்

களை வழங்குவார். பரீக்ஷா வர்க்க மென்பது துரைத்தன உத்தியோகங்களுக் கேற்றவர்களைப் பரீக்ஷை செய்து தேர்ந்தெடுக்கும் அதிகார வர்க்கத்தார் பரிசோதனைகளை (Audit)ச் செய்தல், தண்டனைகளை அமுலுக்குக் கொண்டு வருதல் முதலிய காரியங்களை நிர்வகிப்பார்கள். ஆலோசனைச் சபையாராக நியமிக்கப்பட்ட பதினைந்து பேர்களுள் பிகிங் நகரத் தலைவராக விருந்து தேசியக் கக்ஷியை எதிர்த்துப் போராடிக் காலஞ்சென்ற சாங்ட் ஸொலின் அவர்களின் குமாரனாகிய சாங் ஷூலியாங் என்பவரையும் ஒருவராக சியாங் காய் ஷேக் அவர்கள் நியமித்திருக்கிறார்.

## அயல் நாட்டாரின் சம்பந்தம்

இவ்வாறு சீனாவில் நிலைகொண்ட ஜனநாயக ஆட்சி இன்று நாட்டு வளப்பத்திற்கான விஷயங்களைக் கவனிக்கத் தலைப்பட்டுள்ளது. பாரத தேசத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியார்கள் வந்தபிறகு சுதேச அரசர்க ளிடத்தில் பிரிட்டிஷார் செய்து கொண்ட வியாபார சம்பந்தமான உடன்படிக்கைகளைப் போலவே, சீனா தேசத்தில் வியாபாரத்தை முன்னிட்டுச் சென்று வசிக்க முற்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ருஷ்யா முதலிய தேசங்களும் சீனாவோடு பலவித உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தன. பிறகு ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு நடைபெற்ற வாஷிங்டன் மகா நாட்டிலும் சீனாவின் விஷயம் முதன்மையாக விருந்தது. அவ்வித உடன் படிக்கைகளைப் பெற்றுச் சீனாவில் வியாபாரம் செய்ய முற்பட்ட வெளி நாடுகளுக்குச் சீனாவின் வியாபாரத் துறைக ளனைத்தும் உரிமையான படியால், அந்த நாட்டின் சுதேச வியாபார வளர்ச்சிக்கு அஃது பாதகமாக விருந்தது. எனவே முதற்கண் தேசிய அரசாங்கத்தார் தம் நாட்டில் வெளி நாட்டார் பெற்றிருந்த நியாயமற்ற வியாபார உரிமைக ளனைத்தையும் அறவே யொழிக்க வேலை செய்தனர். பொது மக்களும் அவ்வுண்மையை யுணர்ந்து வர்த்தக சுதந்திரத்துக்குக் கிளர்ச்சி செய்தனர். பொது ஜனங்களின் வெறுப்பானது பகிஷ்காரத்தின் மூலமாக வெளிப்படத் தலைப்பட்டதைக்



கண்ட வெளி நாட்டாரும் தத்தம் உடன்படிக்கைகளை காலத்திற் கேற்ப மாற்றி யமைத்துக்கொள்ள வேண்டி வந்தது. அந்த நிலையில் ருஷ்ய அரசாங்கத்தினர், பிறருக்கு வழிகாட்டிகளாக முதலில் சீனாவில் தாம் பெற்றிருந்த உரிமைகளை விட்டுக் கொடுத்து அந் நாட்டின் தேசிய அரசாட்சிக்குத் துணைபுரிந்து, பிற தேசங்களின் வியாபார ஆதிக்கியத்தையும் சீனாவி னின்றும் நீக்குவதற்கு உதவி செய்தனர். "சீனாவில் நிலையான ஒரு அரசாங்கம் ஏற்படாததால் உடன் படிக்கைகளைப் பற்றி யாருடன் பேசுகிறதென்று தெரியவில்லை" யென்ற காரணத்தைக் கூறிக் கொண்டு இங்கிலாந்து காலங் கடத்தி வந்தது. அதன்மீது சியாங்காய் அவர்களின் தேசிய அரசாட்சி நிலை கொண்டவுடனே அவர்கள், வெளி நாட்டார்களைத் தங்கள் உடன் படிக்கைகளைப் புதுப்பித்துக் கொண்டு சீனதேசத்தின் சுதந்தரத்தில் இனித் தலையிடாமல் ஒதுங்கிக்கொள்ள வேண்டுமென்று அயல் நாடுகள் அனைத்திற்கும் அறிக்கை யிட்டனர்.

## வியாபார உரிமை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றி யமையாத (வியாபாரத்தின் மீது) வரி விதிக்கும் சுதந்திரமானது, வெளி நாட்டா ரிடத்தி லிருந்து சீனாவின் தேசிய அரசாங்கத்தின் கைக்கு மாறவேண்டி யிருந்தது. இறக்குமதி, ஏற்றுமதி வரி, வியாபாரச் சுங்கம் முதலியவற்றை விதிக்கும் உரிமை அந்த நாட்டு அரசாங்கத்தி னிடத்தில் இருந்தால்தான் உள் நாட்டுக் கைத் தொழில்களையும், உள் நாட்டு வியாபாரத்தையும் பெருக்கி, நாட்டின் பொருளாதார நிலையைக் காப்பாற்ற முடியும். 1927-ம் வருடம் ஜூலை மீ 25-ந் தேதியில் அமெரிக்கா வானது பிகிங் நகரத்தில் தேசிய அரசாங்கத்தாருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, அதுவரையில் தான் பெற்றிருந்த வரி விதிக்கும் உரிமைகள் முதலியவற்றைச் சீனத் துரைத்தனத்தாருக்கே ஒப்படைக்கலாயிற்று. அதைக் கண்ட இங்கிலாந்தும் அதுவரையில் நாங்கிங் நகரத்தில் நேர்ந்த நஷ்டங்களின் பரிகாரத்தைப் பற்றி

வற்புறுத்தி வந்ததை விடுத்து, அமெரிக்காவைப் பார்த்துத் தானும் சீன அரசாங்கத்தினோடு உடன்படிக்கை செய்து கொள்ள முற்பட்டது. இவ்வாறு வெளித் தேசங்கள் ஒவ்வொன்றும் சீனாவில் தாம அடைந்திருந்த அதிகார உரிமைகளை விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டன.

## தேசச் சீர்திருத்தம்

சீனத் தேசீய அரசாங்கமானது நாட்டின் சீர்திருத்தங்களில கவனம செலுத்தி விரைந்து வேலைசெய்து வருகிறது பொருளாதார விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்காக நான்கிங் நகரத்தில் ஒரு மகாநாடு கூட்டி யோசித்து அவசிய மில்லாத சேனைகளைக் குறைக்கவும், சென்ட்ரல் பாங்க் ஸ்தாபிக்கவும், நாணயங்களை வெளி யிடவும, நாட்டின் தொழில்—வாணிப—வளர்ச்சிக்குப் பாதகமா யிருந்த வரிகளை நீக்கவும் தீர்மானிததனர். இரயில் வேக்கள், பாதைகள், நீர்ப் பாசன வசதிகள், விமானப் போக்கு வரவுகள் முதலிய பல விஷயங்களிலும் அபி விருத்தி செய்து வருவதில் தேசீய அரசாங்கம் முனைந்து வேலை செய்து வருகிறது. இவ்வாறு சீனாவில் முற்போக்கான வேலைகள் நடைபெற்று வருகையில் வெளி நாட்டாரும், வெளி நாட்டுப் பத்திரிகைகளும் சீனாவின் குழப்பங்களை ஒன்றுக்குப் பத்து மடங்காக்கி "சீனாவில் சண்டைகளும், கலகங்களுமே பிரபலமடைந்து வருகின்றன. அழிவு வேலைகள் தவிர ஆக்க வேலைகள் ஒன்றும் அங்கு நடைபெற வில்லை" யென்று பலவாறு பொய்ப் பிரசாரங்கள் புரிந்து வந்தனர்—வந்தன. இன்று சீனாவின் தேசீயப் பத்திரிகைகள் வெளி வந்து உண்மைகளை வெளிப்படுத்த முற்பட்டதி னின்றுமே உலகத்திற்கு உண்மை தெரிய வரலாயிற்று.

## கல்வியில் முன்னேற்றம்

1911-ம் ஆண்டில் சீனாவின் நிலைக்கும், தற்கால நிலைக்கும் அதிக பேதமுண்டு. இக்காலத் தேசத் தலைவர்களுக்கு நாட்டில்



அதிகச் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. சீனாவின் வாலிப உலகம் தேசீய அரசாங்கத்திற்கு அரண்செய்து வருகிறது பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இக் காலத்திய முற்போக்கான கல்வி கற்ற அறிவாளிகள் அங்கு மிகச் சிலரே. அப்பொழுது வெளி நாடுகளுக்குச் சென்று கல்வி கற்றவர்களும் மிகவுங் குறைவு. நாட்டில் மிஷினரிகள் ஏற்படுத்திய இரண்டொரு பாடசாலைகளைத் தவிர உன்னத லக்ஷியங்களைக் கற்பிக்கும் கலாசாலைகளும், பிறவும் சுதேச அரசாங்கத்தார் ஸ்தாபித்தாரில்லை. ஆனால் இப்பொழுது அந்நிலைமை மாறிவிட்டது. சீனத் தேசீய அரசாங்கம் ஸ்தாபித்துள்ள கலாசாலைகள் குறைவாக விருப்பினும் ஆயிரக் கணக்கான சீனச் சிறுவர், சிறுமியர் உள் நாட்டுக் கலாசாலைகளில் கல்வி கற்று வருவதோடு, வெளி நாடுகளுக்கும் சென்று நவீனக் கல்விகளைக் கற்று வருகின்றனர். உலகில் இதுவரையிலும் எந்த நாட்டிலும் இவ்வளவு குறைந்த காலத்தில் இவ்வளவு விரிவாகக் கல்வி பரவி யிருக்கவில்லை யென்று பல அறிஞர்கள் கூறுகின்றனர். ரிபப்ளிக் அரசாங்கம் ஸ்தாபிக்கப் பட்டதற்குப் பிறகு மிஷன் ஸ்கூல்கள் நூற்றுக் கணக்காகச் சீனாவில் ஏற்பட் டிருக்கின்றனவாம். இன்று காணப்படும் தேசத் தலைவர்களாகிய சீனத் தலைவர்கள் யாரென்று அன்னார் ஜீவியம் விசாரிக்கப் புகுந்தால், யாவரும் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரிபப்ளிக் அரசை ஸ்தாபிப்பதற்குத் துணைபுரிந்த காலேஜ் மாணவர்களே யாமென்பது விளங்கும். எனவே தேசத் தலைவர்கள் யாவரும் நாற்பது ஆண்டுகளுக்குட்பட்ட வயதினரே யென்பதைக் குறிப்பிட வேண்டும். இந்தியாவில் "அனுபவ மற்ற வாலிபர்களின் இயக்கத்தால் என்ன நன்மையுண்டாகப் போகிற" தென்று உதாசினமாகப் பேசி வரும் வயது முதிர்ந்த இந்திய வாய்ப்பேச்சுத் தலைவர்கள் சீனாவின் நிலையை ஒருவாறு உற்றுக் கவனித்து உணர்வு பெறுவார்களா?

## பத்திரிகைகளின் பிரசாரம்

18 ஆண்டுகளுக்கு முன்னர்த் தேசீய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது சீனாவில் பத்திரிகைகளே கிடையாதாம்.

எனினும் இன்று நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் சீனாவில் வெளிவருகின்றன. சில பத்திரிகைகளுக்கு இலட்சக் கணக்கான சந்தாதார்களிருக்கின்றனராம். அத்தனை பிரதிகளை விரைவில் அச்சிடுவதற்கேற்ற யந்திரங்களில்லாமல், சந்தாதார்களைக் குறைக்க நேரிடுகிறதாம். ஷாங்குஹே பட்டணத்தில் "கம்மர்ஷல் பிரஸ்" என்ற ஒரு பெரிய அச்சுக்கூடமிருக்கிறது. அதில் எத்தனையோ மாதப் பத்திரிகைகளும், அறிவு வளர்ச்சிக்கான நூல்களும் பிரசுரிக்கப்பட்டு நாட்டின் கல்வியறிவை வெகுதூரம் வளர்த்து வருகின்றன. சீன தேசமானது முன்னைவிட இப்பொழுது வெளி நாடுகளுடன் விரிவாகச் சம்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. சீன ராஜதந்திரிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் பலர் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்குச் சென்று, பல தேசங்களின் அரசாங்க நடை முறை ஏற்பாடுகளை நேரிற் கண்டு வந்து, தம் நாட்டில் அரசியற் சீர் திருத்தங்களை வெகு திறமையாக ஆற்றி வருகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன் சீனாவில் நவீனக் கல்வியைக் கற்ற ஒருவனைப் பொது ஜனங்கள் இழிவாகக் கருதுவார்களாம். அல்லது இந்தியாவில் ஆரம்பத்தில் மேல் நாடுகளுக்குச் சென்று கல்வி கற்று வந்தவர்களை வைதீகர்கள் சாதிப் பிரஷ்டர்களாகக் கருதி நடத்திவந்த நிலைமையை நினைப் பூட்டுகிறது. என்றாலும் இப்பொழுது சீனாவில் மேல் நாடுகளுக்குச் சென்று கல்வி கற்று வந்தவர்களுக்கு நல்ல மதிப்பேற்பட்டிருக்கிறது. பாஷை, சமயம், சமூகம் முதலிய துறைகளிலேயேயன்றி, தற்கால நவீன சாஸ்திர ஆராய்ச்சிகள் பலவற்றிலும் முற்போக்கடைய வேண்டுமென்று சீனா விரைவாக முயற்சி செய்துகொண்டிருக்கிறது. சீனாவின் தேசிய முற்போக்குகள் இத்தனைக்கும் முதற் காரணமாயிருந்து ஆதியில் தேசாபிமான விதையை நாட்டில் விதைத்த டாக்டர் சன் யெட் சேன் அவர்களின் அரிய ஊழியத்தை நன்குணர்ந்த சீனர்கள் இன்று அவரை ஒரு மஹானாகக் கருதிப் பாராட்டி வருகிறார்களென்பதில் அதிசயமொன்றில்லை.

---



# ஆராய்ச்சி மேடை.

## தமிழின் தற்கால நிலைமை

இப்பெயரிய சிறு நூலொன்று பார்வைக்கு வரப் பெற்றோம். அதனை இயற்றியவர் "விசால ஹிருதயம்" பத்திரிகாசிரியராய திருவாளர். ராம சுப்பிரமணிய நாவலராவர். அதில் நம் தாய்மொழியாந் தமிழ் மொழியின் தொன்மையையும், இனிமையையும், சிறப்பையும் எடுத்துக் காட்டி, இன்று அம்மொழி அடைந்துள்ள நிலையை விளக்கித், தாய் மொழிப்பற்றுக் கொண்டு தமிழர் தமிழைக் கற்க வேண்டிய அவசிய மெனப் பல மேற்கோள்களுடன் ஆசிரியர் செவ்விய தமிழ் நடையில் (ஒரு கட்டுரையாக) எழுதியிருக்கின்றார். பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களின்மீது ஆசிரியர் காட்டும் உள்ளப் பற்றின் உயர்வு சாலச் சிறந்ததே. எனினும் 'தமிழின் தற்கால நிலைமை' என்பதைப் பொருளாகக் கொண்டு ஒரு நூல் எழுதப் புகுந்தவிடத்து, உலகில் இதுகாலை உயர்வையடைந்துள்ள பிற மொழிகளோடு தமிழை ஒப்ப நோக்கி, தேசிய உணர்ச்சி மிகுந்துள்ள இக் காலத்திற் கேற்ப மொழி வளர்ச்சிக்குத் தமிழர் செய்யவேண்டிய கடமைகள் யாவை என்பதைப் பற்றி இன்னுஞ் சற்று விரிவாக ஆராய்ந்திருக்கலாம். 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்த' லென்றபடி தமிழபிமானத்தை எழுப்பும் நோக்கொடு எழுதப்பட்டுள்ள இவ் வெளியீட்டைத் தமிழராயினோர் அனைவரும் படிக்க வேண்டு[illegible]வசிய மென்போம். கிரவுன் $\frac{1}{8}$ அளவில் 28 பக்கங்களைக் கொண்ட இந் நூலுக்கு விலை 6 அணா வாகக் குறிப்பிட்டிருப்பது அதிக விலையென்று கருதுகிறோம். இஃது வேண்டுவோர், தக்கலை போஸ்டு, பத்மநாபபுரத்திலுள்ள ஆசிரியர் பெயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:—

தமிழ்ப் புலவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் பெருமையைக் கூறப் புகுந்தவிடத்தெல்லாம் "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை யுண்ட பாலனை யழைத்ததும், எலும்பு பெண்ணுருவாய்க் கண்ட

[ந]ம் மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித் தண்டமிழ்ச் சொலோ மறு[கா]லச் சொற்களோ சாற்றீர்:" என்பது போன்ற பல உதாரணங்களை எடுத்துக் காட்டித் தமிழ் மொழி தெய்வத் தன்மை வாய்ந்தது என்று செப்புகின்றனர். அவர்கள் கூற்றின்படி மேற்கண்ட அற்புதங்கள் பலவும் ஆற்றும் வல்லமை வாய்ந்தது தமிழ் மொழி யெனின் இற்றைக்கும் தமிழ் மொழி வல்லார் அத்தகைய அற்புதங்களைச் செய்தல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்தலைக் காண்கின்றோ மில்லை. எனவே, தனிமையில் தமிழ் (ஒரு) மொழிக்கு அத்தகைய தெய்வத் தன்மை யில்லை யென்பதும், அவ்வற்புதங்களைச் செய்த பெரியோர்களின் திறமையாலேயே அவை நிகழ்ந்தன வென்பதுமே நேர்மை யுடைத்தாகும். தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மகாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி, வங்காளி முதலிய பிறமொழி இலக்கிய வரலாறுகளிலும், அவ்வம் மொழிப் புலவர்கள் பற்பல மகத்துவங்களைப் புரிந்த சான்றுகள் பலவுள; ஆயினும் அம்மொழி ஆராய்ச்சி யாளர்கள் அவ்வற்புதங்கள் நடைபெற்றதன் காரணத்தால் தத்தம் மொழிகளைத் தெய்வத் தன்மை யுடையன வென்று புகழ்ந்தார்களில்லை. தமிழ்ப் பெருங்குடி மக்கள் தமிழேட்டினை ஆற்று வெள்ளத்தில் எதிர் நீந்துமாறு செய்தனரெனின், அன்னார் தமிழேட்டினையே யன்றி மற்றொரு ஆங்கில ஏட்டினையும் எதிர் நீந்தச் செய்யும் ஆற்றலுடையவ ராவார். ஆகவே, இத்தகைய பொருத்தமற்ற சான்றுகளைக் கொண்டு தெய்வத் தன்மையைக் கற்பித்துத் தமிழுக்கு உயர்வு தேடவேண்டிய அவசியமில்லை யென்று நினைக்கின்றோம். உலகில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் தத்தம் தாய்மொழி உயர்வுடைத்தே யாம். அதுபோல் தமிழராகிய நாம் நம் தாய் மொழியை அன்புற நேசித்து, அதைப் போற்றி வளர்க்க முயல வேண்டுவது இன்றியமையாத கடமையே யெனக் கூற விரும்புகின்றோம்.

**N. V.**

78515

## உங்களுக்கோர் நல்ல சந்தர்ப்பம்!

### நாம் விரும்புவது எல்லாவற்றிலும் இன்பந்தானே? இதற்கேன் செய்வது?

நாம் கையாடும் பொருட்கள் அழகாயிருந்தால்
நமது எண்ணம் பூர்த்தியாவதில் சிறிதும் சந்தேகமில்லை.

அதிலும், அடிக்கடி மிக மிக அவஸ்யமாக யாவருக்கும் வேண்டியது லெட்டர் ஹெட்டிங்ஸ், விஸிட்டிங் கார்டுகள், [illegible], வரவேற்பு-விருந்து-விவாஹம் முதலியவைகளின் அழைப்புப் பத்திரிகைகள், ரசீதுகள், உண்டியல்கள், பலவித பாரங்கள், குறிப்பு பேரேடு முதலிய தோல் பைண்ட் புத்தகங்கள் அல்லவா?

இவைகள் நேர்த்தியாகவும், தேவையான பலவித வர்ணத்திலும் அமைந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்!

உடனே உங்கள் தேவைக்கு, மாதிரியுடன்
அட்வான்ஸ் தொகையும் அனுப்புக.

விலாசம்:— **மானேஜர்,**
ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம் (மதுரை ஜில்லா.)



## *Silk Pitamber Coy., Benares City.*

**சுத்தமான பட்டுகள்!** **சகாயமான விலை!!**

**காசிப் பட்டுச் சேலைகள்:**—12. 16. அல்லது 18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம், அழகான ஜரிகை கரைகளும் முகதலையும் போடப்பட்டது. சேலை 1-க்கு விலை ரூ. 20 முதல் ரூ. 25. 30. 50. 75 வரை.

**சாவித்திரி பட்டுச் சேலைகள்:**—12. 16. அல்லது 18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம் கரைகளும் முகதலையும் ஜரிகையால் செடி, கொடி, பூ வேலைகள் செய்யப்பட்டது சேலை 1-க்கு விலை ரூ. 45 முதல் ரூ. 60. 80. 100 வரை.

இந்தச் சேலைகள் தினந்தோறும் தோய்த்து உடுத்தலாம். உடல் மிகவும் நயமாக இருக்கும். எந்த நிறத்திலும் கிடைக்கும்.

**உல்லன் போர்வைகள்:**—6 முழம் நீளம் 3 முழம் அகலம் கெட்டியும் நைசுமானது. 1-கிர். 1-க்கு ரூ. 12. 2-கிர். ரூ. 10. 3-கிர். ரூ. 8.

**காசி வைரவர் கயிறு:**-1-கிர் 100-க்கு ரூ. 3. 2-கிர். ரூ. $2\frac{1}{2}$. 3-கிர். ரூ. 2.

மற்றும் சகலவிதமான பட்டுச் சரக்குகளும் பித்தளைச் சாமான்களும் உத்திராக்ஷ மாலைகள் ஏகமுகமணிகள் கண்டிகள் முதலியன மிகவும் சரசமான விலைக்கு அனுப்பிக் கொடுப்போம்.

உடனே எழுதுங்கள். விலாசம்
மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாளிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணங் கமழும்

**'பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ. **2—8—0.**
அல்லது **4** ஷிலிங்.

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதியிலே அணா 4. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம் :—

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.